தன்னை அறியும் அறிவு



டாக்டர் எம்.எஸ்.உதயமூர்த்தி

கங்கை புத்தக நிலையம்

தன்னை அறியும் அறிவு

டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி

கங்கை

தன்னை அறியும் அறிவு

டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி

கங்கை புத்தக நிலையம்

23, தீனதயாளு தெரு,
தியாகராய நகர், சென்னை - 600 017.

முதற் பதிப்பு	: டிசம்பர்,	2004
இரண்டாம் பதிப்பு	: டிசம்பர்,	2005
மூன்றாம் பதிப்பு	: டிசம்பர்,	2006
நான்காம் பதிப்பு	: நவம்பர்,	2007
ஐந்தாம் பதிப்பு	: டிசம்பர்,	2008
பத்தாம் பதிப்பு	: அக்டோபர்,	2012
பதினொன்றாம் பதிப்பு	: ஜூலை,	2013
பன்னிரெண்டாம் பதிப்பு	: மே,	2014
பதிமூன்றாம் பதிப்பு	: பிப்ரவரி,	2015
பதிநான்காம் பதிப்பு	: மார்ச்,	2016
பதினைந்தாம் பதிப்பு	: மார்ச்,	2017
பதினாறாம் பதிப்பு	: டிசம்பர்,	2017
பதினேழாம் பதிப்பு	: டிசம்பர்,	2019

விலை : ரூ.100.00

☸	TITLE	: **THANNAI ARIYUM ARIVU**
☸	AUTHOR	: Dr. M.S. UDAYAMOORTHY
☸	LANGUAGE	: TAMIL
☸	SUBJECT	: SELF IMPROVEMENT
☸	EDITION	: SEVENTEENTH EDITION DECEMBER, 2019
☸	PAGES	: xvi + 184 = 200
☸	PUBLISHED BY	: **GANGAI PUTHAKA NILAYAM** 23, Deenadayalu Street, Thyagaraya Nagar, Chennai - 600 017. Phone : 24342810 / 24310769
☸	PRICE	: **₹ 100.00**

Laser Typeset at : LKM Computer Printers, Chennai – 17. ☎ 24361141
Printed at : Novena Offset Printring Co., ☎ 28446891, 28446166

என்னுரை

வாழ்க்கை ஒரு தேவனாகும் முயற்சி

தன்னை அறியும் அறிவு பற்றி நெடு நாள் சிந்தித்துக் கொண்டிருந்தபோது, என் நினைவில் வந்தது ஒரு சம்பவம். சற்று விசித்திரமான சம்பவம்! ஸ்ரீ அரவிந்தர் குறிப்பிட்ட சம்பவம்.

வங்காளத்தில் ரவீந்திரநாத் தாகூர் அவர்களின் கல்வி நிறுவனமான சாந்தி நிகேதனில் படித்து தேர்ந்த ஒரு மாணவன், சாந்தி நிகேதனின் தலைவர் அவர் களிடம் வாழ்த்தும் கையெழுத்தும் பெற தனது சிறு நோட்டுப் புத்தகத்தை நீட்டினான். முதல்வர் "தன்னை அறிக" என்று எழுதி, அவனை வாழ்த்தி அனுப்பினார்

அடுத்து அந்த மாணவன் ரவீந்திரநாத் தாகூர் முன் போய் நின்றான். தாகூர் அவனது நோட்டுப் புத்தகத்தை வாங்கினார். பிரித்துப் படித்துப் பார்த்தார். அதில் "தன்னை அறிக" என்று எழுதப்பட்டிருந்ததைப் பார்த்து "தன்னை மறக்க" என்று எழுதி கையெழுத்துப் போட்டு அவன் கையில் கொடுத்தார்!

அதைப் பெற்றுக்கொண்ட இளைஞன் அதைப் புரட்டிப் படித்துப் பார்த்தபோது அவனுக்குத் தலை சுற்றியது. "தன்னை அறிக" என்று ஒருவரும், "தன்னை மறக்க" என்று நேர்மாறாக ஒருவரும் எழுதி யிருப்பதைப் பார்த்தபோது மனம் குழம்பியது! எது

உண்மை? எதைக் கடைப்பிடிப்பது? இது என்ன குதர்க்கம்!

நண்பர்களே! இரண்டுமே உண்மைதான்.

வழிதவறிப்போன ஒரு பள்ளிச் சிறுவனைப் பார்த்து "நீ யார்?" என்று கேட்டோமானால் உடனே அவன் என் பெயர் ராஜாராமன் என்பதிலிருந்து அனேகமாக எல்லாவற்றையும் சொல்லிவிடுவான். அவனுக்கு, 'தான் யார்' என்பது தெரிகிறது. வழிதவறிப்போய் விட்டாலும் அவனுக்குத் தன்னை காப்பாற்றிக் கொள்ளத் தெரியும். அதிகம் பேசத் தெரியாத குழந்தைகள் சட்டைப் பையிலோ கால் சட்டைப் பையிலோ அவன் வீட்டு விலாச அட்டையை வைத்திருப்பார்கள்.

நாமும் நம்மைப் பூரணமாக அறிவிக்க நமது அடையாள அட்டையை நீட்டுகிறோம், தேவைப் படும் இடத்தில்.

ஆனால் நம்மை இங்கே ஒரு காரணத்திற்காக பிறவி எடுக்கச் செய்த - ஒரு மாபெரும் சக்தி நமக்குத் துணையாக நம்முள்ளே இருக்கிறது என்பதும், அதை நாம் அறிந்தால், அறிந்து அழைத்தால், நமக்கு வழிகாட்டும் என்பதும் முக்காலே மூணு வீசம் பேருக்குத் தெரியாது.

ஆங்கிலத்தில் (Body Mind and Soul) உடல், உள்ளம், ஆன்மா - என்று சொல்வார்கள். நம்முள் அப்படிப்பட்ட மூன்று அமைப்புக்கள் இருக்கின்றன. இதில் உடல், மனம் பற்றி நம் எல்லோருக்கும் தெரியும். ஆனால் அந்த ஆன்மா எங்கிருக்கிறது? யாருக்கும் தெரியாது. அதன் வேலை என்ன என்றெல்லாம்

அதிகம் ஆங்கில நூலாசிரியர்கள் கூட எழுதுவ தில்லை. காரணம் நம் மனத்தையும் உடலையும் தான் அதிகம் உபயோகிக்கிறோம். ஆனால் இந்த ஆன்மா என்ற பகுதியை நாம் உபயோகிப்பதில்லை. மனவியல் அறிஞர்கள் இப்போதுதான் ஆராயத் துவங்கி இருக்கிறார்கள் என்று வேண்டுமானால் கூறலாம். ஆனால் இதை எல்லாம் நம் நாட்டு ஞானிகளும் யோகிகளும், மகரிஷிகளும் பூரணமாக ஆராய்ந்திருக் கிறார்கள். மனத்தை வைத்துக் கொண்டே மன அமைப்பையும், இதைப் படைத்தவரையும் புரிந்து கொண்டிருக்கிறார்கள்!

ஆன்மா என்பது நம் இதயத்தில் இருக்கிறது. அந்த ஆன்மாவை விழிப்படையச் செய்யலாம். அது தெய்வீக சக்தி கொண்டது. அதனுடன் நாம் உறவு கொண்டு நமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள லாம். நாம் விரும்பும் காரியங்களை எளிதாகச் செய்து முடிக்கலாம் என்பதை நன்கு அறிந்திருக்கிறார்கள். அறிந்தது மட்டுமல்ல; அறிந்ததை எழுதி வைத்திருக் கிறார்கள்.

ரிக்வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்று யாராவது வேதங்கள் என்று பேசும்போது, நம் மனத்தில் பெரிய கேள்விக்குறி எழுகிறது. காரணம் வடமொழி எனப்படும் சமஸ் கிருதத்தைப் படிக்கத் தெரியாத என்னைப் போன்றவர்களுக்கு அதைப் படிக்க முடிவதில்லை. ஆசிரியர் இல்லாமல் புரிந்துகொள்ள முடியாத நிலையாகவும் இருக்கலாம்.

ஆனால் அதை எல்லாம் இன்று அறிந்து கொள்ள, புரிந்துகொள்ள உபநிடதங்கள் என்ற நூல்கள் எழுதப்பட்டு, அவை இன்று நல்ல தமிழில் ராமகிருஷ்ண மடத்து புத்தக நிலையங்களில் கிடைக் கின்றன!

அதாவது வேதங்களின் விளக்க உரைதான் - விளக்கங்கள்தான் - உபநிடதம். அவற்றை இன்று அனைவரும் படித்துப் பார்க்கலாம்; பயன் பெறலாம்.

தமிழிலும் திருமூலர் திருமந்திரத்திலிருந்து சித்தர்கள் பாடல்களிலிருந்து பெரிய ஞானக்கோவை போன்ற சித்தர் பாடல்கள் வரை நேற்றைய பட்டினத் தார், பத்திரகிரியார், அருணகிரிநாதர் வரை ஆன்மா பற்றிய விளக்கங்களை எழுதி இருக்கிறார்கள்.

அதைவிட இன்றைய விவேகானந்தர், ராம கிருஷ்ணரிலிருந்து ரமண மகரிஷி, அரவிந்தர், ஸ்ரீ அரவிந்த அன்னை வரை இன்று நிறைய நூல்கள் தமிழிலே நமக்கு உதவத் தயாராக காத்திருக்கின்றன.

நீங்கள் கேட்கக்கூடும். அப்படிப்பட்ட ஆன்மா என்ற ஒன்று நம்முள் இருந்தால் நாம் ஏன் அதை உபயோகிக்க முடியவில்லை?

அந்த ஆன்மா என்ற பகுதி திரையினால் மூடப் பட்டிருக்கிறது. அந்தத் திரையை விலக்கி விட்டு நுழைவோமானால் நாம் ஆன்மாவுடன் உறவு கொள்ள முடியும் என்று நம் முன்னோர்கள் தங்கள் அனுபவத்தைச் சொல்கிறார்கள்.

எது மூடி யிருக்கிறது என்பதை அறிய இப்போது நாம் நம் உலக வாழ்வின் மிக முக்கியமான நிகழ்ச்சி களுக்குச் செல்ல வேண்டும். பொதுவாக குழந்தைப்

பருவத்தில் நமக்கு எந்தவிதமான பிரச்சினைகளும் இல்லை. நாம் பெற்றோர்களின் பாதுகாப்பில் வளர் கிறோம்.

தனி மனித வாழ்க்கை அல்லது குடும்ப வாழ்க்கை என்று வரும்போது பல இன்னல்கள், சங்க டங்கள், தோல்விகள், ஏமாற்றங்கள், எதிர்ப்புக்கள் என்று நமக்குச் சோதனைகள் துவங்குகின்றன.

வாழ்வின் பிரச்சினைகளை, நாம் சற்று அலசிப் பார்த்தோமானால் ஒரு காரியம், 'நல்லது, மகிழ்வு தரும், லாபம் தரும்' என்று எண்ணி ஒரு தொழிலிலோ திருமணத்திலோ இறங்குகிறோம்.

சில நாட்களில் அல்லது ஓரிரு ஆண்டுகளில் நாம் அனுபவிப்பது, பயப்படுவது, சந்திப்பது என்ன? தோல்வி, கஷ்டம், மனக்கவலை, நெருக்கடி, நிம்மதி யற்ற நிலை என்று பலவித உணர்வுகளால் பாதிக்கப் படுகிறோம். வாழ்வின் வெவ்வேறு கட்டங்களில் "இப்படி மாட்டிக் கொண்டேனே? என்ன செய்வது?" என்று புலம்புகிறோம்.

ஒரு காரியம் நாம் நினைத்தபடி எதிர்பார்த்தபடி நடக்கவில்லை என்றால் என்ன அர்த்தம்? நாம் எடுத்த முடிவு, தீர்மானம், லட்சியம் சரியில்லை என்பதுதான் அதன் அர்த்தம்.

இன்று நாட்டில் 95 சதவிகித மக்களின் வாழ்வில் இப்படிக் கஷ்டமான இக்கட்டான நிலைகள் ஏற்படு வதும் சிலர் சில சமயம் இதன் காரணமாக தற்கொலை அளவுக்கு செல்வதும் அவர்கள் எடுத்த முடிவு சரியில்லை என்பதைத்தான் தெரிவிக்கிறது.

பல சமயம் துன்பங்களையும் தோல்விகளையும் சமாளித்து மீள்கிறோம். அதுவும் எளிதல்ல. மிகப் பெரிய போராட்டமாய் என்ன நடக்குமோ என்று பயந்து, அதன்பின் சில சமயம் நிலைமை நல்ல விதமாக மாறுகிறது. அப்படியே தொடர்ந்து போகும் என்பதும் நிச்சயமில்லை.

நாம் மட்டும் வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் எப்படி சரியான முடிவெடுப்பது என்று தெரிந்து கொண்டோமானால் அதன்பின் நமக்கு தோல்வி ஏற்படாது, துன்பம் வராது.

இதில் நண்பன் உதவ முடியாது. பிறரது யோசனையைக் கேட்டு அதன் பின் அதனால் தோல்வியும் கஷ்டமும் ஏற்பட்டால் நாம் நம் நண்பனை, நம் மனைவியை, நம் பெற்றோரைத்தான் குற்றம் சாட்டுவோம். 'அப்பா! அந்த இடத்தில் உறவு வேண்டாம் என்று சொன்னேன். நீங்கள் தான் பணக்கார வீடு என்று சொன்னீர்கள்! ஏற்பாடு செய்தீர்கள்!" என்பது போன்ற நிலைமைதான் வாழ்வில் அதிகம் சந்திக்கிறோம்.

திருமணம் என்பது ஒரு கட்டம். அது போன்ற பல்வேறு கட்டங்கள், இக்கட்டுகள், பிரச்சினைகள் வாழ்வில் நம்மை மோதுகின்றன. இதைச் சமாளிக்க வழி இருக்கிறதா? அது சாத்தியமா? அது சாத்தியம்தான்! நிச்சயமாக சாத்தியமாக்கலாம். அப்படி ஒரு மாமனிதர் நமக்குள் இருக்கிறார் அவருடன் நாம் உறவு கொள்வோமானால் எதுவுமே கஷ்டம், துன்பம், தோல்வி என்று வாழ்வில் தலைகாட்டாது.

அப்படிப்பட்ட இறைமை - கடவுள் தன்மை - இறை அம்சம் - இப்பிரபஞ்ச சக்தி என்ற மாபெரும் சக்தியின் ஒரு சிறு பகுதி நம்முள் இருக்கிறது. இருக்கிறது என்பதை முதலில் நம்ப வேண்டும். இருக்கிறது என்பது உண்மையும் கூட. பயிற்சி மூலம் நாம் அதை அறிய முடியும்.

முதலில் இந்த நம்புகிற விஷயமான இறைநிலை. இது ஏதோ உங்களிடமும் என்னிடமும் மட்டும்தான் இருக்கிறது என்று எண்ணி விடாதீர்கள்! இது மனிதனாய்ப் பிறந்த எல்லோரிடமும் இருக்கிறது. அது மட்டுமல்ல; இப்புவியிலுள்ள சடப்பொருளான மண், மலை, நதி, மேகம் என்ற எல்லாம் உயிரற்றவை என்று சொல்லும் பிரிவில் உள்ளவற்றிலும், மற்றும் தாவரங்களிடமும், விலங்குகளிடமும் ஆண்டவன் படைப்பில் உள்ள எல்லாவற்றிலும் இந்த தெய்வீக அம்சம், தெய்வீகத்தின் சிறுபகுதி இருக்கிறது. எப்படி என்றால் இப் பிரபஞ்சத்தில் உள்ள எல்லாப் பொருட்களும் ஒரே ஒரு மூலப்பொருளில் இருந்துதான் தோன்றின. ஆகவே எல்லாவற்றிலும் அந்த இறை அம்சம் இருக்கிறது.

எப்படி நாம் தெரிந்துகொள்வது? மனத்தை ஒரு முனைப்படுத்தி அந்த மாபெரும் இறைவனின் நினைவாகவே இருந்தோமானால், அமைதியாக தியானம் செய்வோமானால், நாம் அந்த மாபெரும் இறை சக்தியுடன் மன ஒருமைப்பாடு கொள்ள முடியும்.

அப்படித்தான் நம் சைவ நாயன்மார்கள், வைணவ ஆழ்வார் பெருமக்கள், சித்தர்கள், ஞானிகள், மகரிஷிகள் என்று எல்லோரும் இருந்தார்கள் -

உறவுகொள்ளும் வழியை அறிய முயன்றார்கள்; அறிந்தார்கள்; தாங்கள் அறிந்த பலமுறைகளை எழுதி வைத்துவிட்டுப் போயிருக்கிறார்கள். என்ன செய்ய வேண்டும் நாம்?

நாம் தியானம் செய்ய வேண்டும். இந்த ஆசா பாசங்களை, பற்றுக்களை, விருப்பு வெறுப்புக்களை கெட்ட எண்ணங்களை எல்லாம் கொண்ட இந்த உலகாயத நிலையை கடக்க வேண்டும். கடக்க இது துவக்கம்.

மனம் ஆழமாக - மிகமிக ஆழமாக அமைதியாக மோன நிலையில் இருக்கும்போது மனம் அங்கே எங்கும் வெற்றிடத்தைத்தான் காண்கிறது.

அந்த வெற்றிட நிலையை, நாம் விரும்பும்போது கொண்டுவர மனத்தை தியானத்தினால் பழக்கி விட்டோமானால் மனத்தில் தெய்வீக சக்தி இறங்கு கிறது. இதையே உள்ளுணர்வு என்கிறோம். எங்கிருந்தோ நம் பிரச்சினைகளுக்கு, கேள்விகளுக்கு தீர்வு, எண்ணமாக சில சமயம் சில அடையாளங்கள் மூலம் மனத்தில் எழுகிறது. நம்முள் இருக்கும் இறை சக்தி, மனத்தின் ஆழ்ந்த மோன, அமைதி நிலையில் நமக்கு வழிகாட்டுகிறது.

ஆண்டவனே வந்து நமக்கு வந்து வழிகாட்டும் போது எப்படி நாம் செய்வது தவறாகப் போகும்?

அவன் தான் நம்முள்ளும் இருக்கிறானே!

"எங்கெங்கு காணினும் சக்தியடா
அவள் இன்னருள் வேண்டுமடா."

என்கிறார் பாரதியார்.

“நீ தனியாக இல்லை என்பதை எப்போதும் மறவாதே” என்கிறார் ஸ்ரீ அரவிந்த அன்னை. இறைவன் நம்முடன்தான் எப்போதும் இருக்கிறான் என்பதைத்தான் அப்படிச் சொல்கிறார்.

இதுதான் “தன்னை அறிக” என்ற தன்னை அறியும் அறிவு. நாம் தனியாக இல்லை; நமக்குள்ளே ஆண்டவன் என்ற மாபெரும் சக்தி நமக்கு வழிகாட்டிக் கொண்டு இருக்கிறது.

இதை உணர்ந்த திருமூலர்:

“தன்னை அறிந்திடில் தனக்கொரு கேடில்லை.”

என்கிறார். இப்போது நீங்கள் உங்களை அறிந்து கொண்டீர்கள். நமக்குள்ளே நம் தலைவன், நம் தந்தை, நம் இறைவன், நம் வழிகாட்டி, நம்மை வாழ்விப்பவன் இருக்கிறான் என்னும் மாபெரும் உண்மையை, கடவுள் இருக்கிறார் என்று கடவுளை வேண்டினால், கடவுளிடம் நம்மைப் பூரணமாக அர்ப்பணித்தால் போதும். மனித வாழ்வு இனி துன்பம் கொண்டதாக இருக்காது!

நம்மை எவை பாதிக்கின்றன, அவற்றை எப்படி பாதுகாப்புடன் இருந்து விலக்க வேண்டும் என்பதைப் பற்றி பதஞ்சலி முனிவர் எழுதி இருக்கிறார். முறையற்ற காமம், கோபம், பேராசை, பற்று, ஆணவம், பொறாமை இவைதான் நம் உலகாயத வாழ்வை பாதிக்கும் கெட்ட குணங்கள். இவை அனைத்தையும் ஒரே வார்த்தையில் அடக்கி விடுகிறார்கள் சைவ நாயன்மார்கள். ஆணவம் என்கிற வார்த்தையில் மேற்கூறிய கெட்ட எண்ணங்கள் எல்லாம் ஆணவத்தி

லிருந்து தான் எழுகின்றன என்பதைச் சற்று சிந்தித்தால் விளங்கும்.

கொஞ்சம் யோசித்துப் பார்த்தால் ஏன் ரவீந்திர நாத் தாகூர் 'தன்னை மறக்க' என்று அந்த மாணவனுக்கு அறிவுரை கூறினார் என்பதும் விளங்கும். தன்னை மறக்க என்றால் "நான் எனது எனக்கு" என்று 'நான் சொல்கிறபடி கேள்'. 'எனக்குத்தான் எல்லாம் வேண்டும்.' 'மண்ணும் பொன்னும் எல்லாம் என்னுடையவை' என்று எண்ணுகிறானே மனிதன், அந்த ஆணவத்தினை மறக்க வேண்டும் என்பது தான் அரவிந்தர் கூற்று.

நாம் எல்லோரையும் போன்ற ஒரு ஆத்மா - இறைவனின் படைப்பு. இந்த பிரபஞ்சத்தில் எல்லாம் ஒன்றுக்கு ஒன்று உதவியாக எல்லாம் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டிருக்கின்றன என்பதுதான் பிரபஞ்ச உண்மை; இன்றைய விஞ்ஞானம் கண்டு பிடித்த உண்மையும் கூட. நினைவில் கொள்ளுங்கள். தன்னை மறவுங்கள்; அதே சமயம் நான் தனியாக இல்லை, ஆண்டவன் எப்போதும் துணை இருக்கிறான் என்பதை எப்போதும் மறவாதீர்கள்; தன்னை அறியுங்கள். அந்த அறிவைப் பெறுவதுதான் வாழ்க்கை. 'வாழ்க்கை ஒரு தேவனாகும் முயற்சி' என்று நான் அடிக்கடி எண்ணுவதுண்டு.

சக பயணி – எம்.எஸ். உதயமூர்த்தி

பொருளடக்கம்

ஒஜிப்வா - அமெரிக்க இந்தியப் பழங்குடி மக்களின் பிரார்த்தனை

எங்களின் அருமையான மூத்த பெரியவரே!
உடைந்து உருக்குலைந்து இருக்கும் எங்களைப்பார்.

இறைவனின் படைப்பில் உள்ள
எல்லாவற்றிலும் மனித இனம் மட்டுமே
பிரபஞ்சப்பாதையிலிருந்து விலகிச் செல்கிறது.

இது எங்களுக்கு நன்றாகத் தெரிகிறது.
அதிலிருந்து பிரிந்து நிற்கிறோம், அறியாமையால்.

பிரபஞ்சத்தின் தெய்வீகப் பாதையில் மீண்டும் நடக்க
நாங்கள் தான் ஒன்றுசேர வேண்டும்.

எங்கள் மூத்த தாத்தாவே!
நீங்கள் புனிதமானவர்; தெய்வீகம் நிறைந்தவர்;
அன்புடனும் கருணையுடனும் நாங்கள் பெருமையோடு
வாழக் கற்றுக் கொடுங்கள்.

பிறந்த இப்பூமியின் காயங்களை குணப்படுத்த வேண்டும்.
பரஸ்பரம் ஒருவரை ஒருவர் குணப்படுத்த
மருந்து தடவ வேண்டும்.

1

"மனதினிலே நின்று இதனை எழுதுகின்றாள்"

பாரதியாரின் கவிதைகளும், கட்டுரைகளும், எல்லாம் நம் உள்ளத்தை சிலிர்க்க வைப்பதாக இருக்கும்; தட்டி எழுப்புவதாக இருக்கும். ஒரு வீரத்தைக் கொடுப்பதாக இருக்கும். அத்துடன் நம்மை மறந்து நம்மைப் பாட வைப்பதாக இருக்கும்.

பாரதி என்ற இந்தக் கவிஞர் இப்படிக் கவிதை எழுதும் திறனை, கற்பனையை எப்படிப் பெற்றார்? எங்கே கற்றார்? காளிதாசன் போல யார் எந்த தெய்வம் இவருக்கு அவர் நாவினிலே பாடும் திறனை எழுதி விட்டுப் போயிற்று?

அவரே சொல்கிறார்: "மனதினிலே நின்றிதனை" எழுதுகின்றாள் மா சக்தி வையத்தேவி..." என்று. "நான் எழுதவில்லை; என் வேலை இந்தப் பேனாவை - எழுது கோலைப் பிடிப்பதுதான். என் மனதினிலே யிருந்து என்னை எழுத வைப்பவர் உலகின் மாபெரும் சக்தி; இந்த வையகத்தின் தேவி அவள்." என்று பாடுகிறார்.

எல்லோரும் எழுதிவிடுகின்ற பாடல்கள் அல்ல பாரதியின் பாடல்கள். "எதை எண்ணுகிறாயோ அதுவாக ஆகிறாய்." என்பது உபநிடதம். அது போல பாரதியார் இந்த நாட்டைப் பற்றி, மக்களைப் பற்றி, வாழ்வைப் பற்றித்தான் சிந்தித்துக் கொண்டிருந்தார்.

மனித யத்தனத்திற்கு அப்பாற்பட்டு ஒரு காரியம் நடக்க வேண்டுமானால் நாம் இறைவனைத்தான் வேண்டுகிறோம். குடும்பத்திலே நாம் நம் தாயிடம் தான் ஓடி முறையிடுகிறோம். பாரதியின் மனதிலே நின்று எழுதுபவள் இவ்வுலகின் மாபெரும் சக்தி, தெய்வம் என்று சொல்கிறார்.

ஞானசம்பந்தர் பாடல்களைப் புரட்டுகிறோம். ஓரிடத்தில் ஞானசம்பந்தர் பாடுகிறார் "தனது உரை எனது உரையாகி" என்று. "அவன் (கடவுள்) சொல்கிறான் என் மனத்துள் இருந்து. நான் எழுதுகிறேன். எல்லோரும் நான் எழுதுகிறேன்; இது என் வாசகம் என்று எண்ணுகிறார்கள். இது அவன் வாசகம். நான் ஒரு கருவி அவ்வளவுதான்." என்று பாடுகிறார்.

ஸ்ரீ அரவிந்தர் ஆசிரமத்தில் 1930 வாக்கில் ஒருநாள் அன்னை தியானம் செய்தபின் கூறுகிறார்:

"இந்தியா சுதந்திரம் பெற்றுவிட்டது" என்று.

"எப்படி ?" என்று அரவிந்தர் கேட்கிறார்.

"அவர்கள் - ஆங்கிலேயர்கள் தானே திரும்பிப் போகிறார்கள் !" என்கிறார்.

கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். நம்மை ஆளும் வெள்ளைக்காரர்கள் நம் நாட்டை அப்படியே நம் கையில் கொடுத்துவிட்டுத் திரும்பித் தங்கள்

நாட்டிற்கே போவது என்பது சாத்தியமா? நடக்கக் கூடியதா?

யாரிடமாவது சொன்னால் "இது எப்படி நடக்கும்? எல்லாம் கற்பனை; கனவு!" என்றுதான் சொல்வார்கள். ஆனால் ஸ்ரீ அரவிந்த அன்னை அன்று சொன்னபடி துப்பாக்கி ஏந்தாமல், ரத்தம் சிந்தாமல் இந்த அரசை நம் கையில் ஒப்படைத்துவிட்டு பிரிட்டிஷ்காரர்கள் அவர்களாகவே ஊர் திரும்பி னார்கள். அதுதான் நடந்த காரியம்.

மற்றோர் சம்பவத்தைப் பார்ப்போம். இது விஞ்ஞானம் சம்பந்தப்பட்டது. மார்க்கோனி என்ற விஞ்ஞானி - இங்கிலாந்துக்காரர் சொல்கிறார் "இங்கிலாந்திலிருந்து மின்காந்த அலைகள் மூலம் செய்திகளை அமெரிக்காவில் உள்ள நியூயார்க் நகரத்திற்கு அனுப்பலாம்" என்று.

மற்ற விஞ்ஞானிகள் இதைக் கேட்ட போது சிரித்தார்கள்; எள்ளி நகைத்தார்கள். "இது நடக்காது! ஏனெனில் மின்காந்த அலைகள் சூரியக் கதிர்கள் போல நேர்க்கோட்டில் செல்பவை. நமது ஊரிலிருந்து அனுப்பினோமானால் அது நேராக ஆகாயத்துள் செல்லுமே தவிர, வளைந்து அமெரிக்கா செல்லாது.' அது உண்மைதான். வானொலிப் பெட்டியிலிருந்து புறப்படும் ஒலி அலை நேர் கோட்டில்தான் செல்லும்.

ஆனால், இதைக்கேட்டு மார்க்கோனி அசைய வில்லை. மின்காந்த அலைகளை உபயோகித்து செய்திகளை அமெரிக்காவுக்கு அனுப்ப முடியும் என்ற தீவிர நம்பிக்கை அவரிடம் இருந்தது. அது

உண்மையாயிற்று; சாதனையாயிற்று. இது எப்படி நடந்தது?

மார்க்கோனி ரேடியோவைக் கண்டுபிடித்ததற்கு சுமார் 50 ஆண்டுகளுக்குப் பிறகு விஞ்ஞான உலகம் ஒரு புதிய உண்மையைக் கண்டுபிடித்தது. நாம் வாழும் பூமி என்ற உருண்டைக்கு மேலே காற்று மண்டலம் இருக்கிறது; அதற்கு மேலே அடுத்த கட்டமாக அயன மண்டலம் என்ற மின்சக்தி கொண்ட அணு மண்டலம் இருக்கிறது. இங்கிருந்து அனுப்பப்படும் ஒலி அலைகளை அந்த அயன மண்டலம் வளைத்து திசை திருப்புவதால் ரேடியோ செய்தி போய்ச் சேருகிறது என்பதைக் கண்டுபிடித்தார்கள்.

கொஞ்சம் யோசித்துப் பார்த்தால் நம்முள் எழும் கேள்வி: "யார் இப்படிப்பட்ட எண்ணத்தை மார்க்கோனியின் மனத்தினில் வைத்தார்கள்? மற்ற விஞ்ஞானிகள் எதிர்த்த போதும், எப்படி தான் நம்பியதை மார்க்கோனி நிகழ்த்திக் காட்டினார்?"

மாபெரும் விஞ்ஞானியான ஐன்ஸ்டைன் சொல்கிறார், "நான் கண்டுபிடித்த இரண்டு கண்டு பிடிப்புக்களும் என் உள் உணர்வு தந்தவை." என்கிறார்.

'உள் உணர்வு' என்றால் என்ன? ஒரு பிரச்சினை யில் மூழ்கி இருக்கிறோம். அப்போது எங்கிருந்தோ எந்தவித காரணமுமில்லாமல் திடீரென ஒரு உணர்வு நம்முள் சேதி சொல்கிறது. 'இப்படிச் செய்' என்றோ 'செய்யாதே' என்றோ சொல்கிறது. நாம் அதன்படி நடக்கிறோம்.

அதாவது காரணகாரியத்தைக் கடந்த ஒரு நிகழ்ச்சி நடக்கிறது. நாம் வியக்கிறோம். "தெய்வாதீன மாக நடந்தது." என்று பின்னால் நினைத்துப் புல்லரித்துப் போகிறோம்.

அதாவது நமக்குள்ளே ஒரு மாபெரும் சக்தி இருக்கிறது; நாம் அதே நினைவாக - நமது பிரச்சினை நினைவாக இருந்தோமால் நமக்கு அதற்கான விடை கிடைக்கிறது. "வாழ்வின் அடிப்படை என்ன?" என்று பாரதி போல நாம் சிந்தித்தோமானால் அது பற்றிய தெளிவு - உண்மை நமக்குக் கிடைக்கிறது. என்ன அந்தச் சிந்தனை?

அதாவது, நமக்கு அருகில்தான் இந்தப் பிரபஞ்சத்தின் - பேரண்டத்தின் மாபெரும் சக்தி இருக்கிறது. நாம் அழைத்தால் போதும்; அது உதவுகிறது. இதுதான் உண்மை.

"இது எப்படி சாத்தியம்?" என்று கேட்கிறோம். இது சாத்தியம்தான் என்று மறைமுகமாக விளக்கிய வருக்கு ஒரு நோபெல் பரிசே கொடுத்தார்கள். அவர் பெயர், டேவிட் பாம்; இங்கிலாந்தில் லண்டன் பல்கலைக்கழக இயற்பியல் (PHYSICS) பேராசிரிய ராக இருந்தவர். அவர் கண்டுபிடித்த உண்மை 'இப்பிரபஞ்சத்தில் உள்ள எல்லாப் பொருட்களும் - எல்லாம் - ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டிருக் கின்றன; தொடர்பு கொண்டிருக்கின்றன; உறவு கொண்டிருக்கின்றன' என்பதுதான்.

அங்குள்ள அந்த மாபெரும் சக்தியை, ஈர்ப்பு சக்தி என்கிறோம். மனிதர்களாகிய நம்முள் இருக்கும்

அந்த சக்தியை 'அன்பு' என்கிறோம். சுலபமாகச் சொன்னால் அவ்வளவுதான்!

ஆண்டவன் எங்கும் நிறைந்திருக்கிறான் என்னும் போது என்ன அர்த்தம் தருகிறது அந்த வாக்கியம்? நாம் அந்த மாபெரும் சக்தியுடன் பிணைக்கப்பட்டிருக்கிறோம் என்பதுதான். நம் முள்ளும் அந்த சக்தி இருக்கிறது. நாமும் இந்த முழுப் பிரபஞ்சத்துடன் இணைந்திருக்கிறோம்; இணைக்கப் பட்டிருக்கிறோம். இதை நாம் அறியவில்லை.

கிண்டி பொறியியல் கல்லூரியில் நான் வேதியியல் ஆசிரியராக வேலை பார்த்தபோது, நான் சில கட்டுரைகள் எழுதி இருந்தேன். மணவாளக் குறிச்சியில் அணுசக்திக்கான அணுசக்தி மணல், சேலத்து அலுமினியம், தஞ்சைப் பகுதியில் எண்ணெய் — என்ற தலைப்புக்களில். நம் நாட்டில் எண்ணெய் இல்லை என்று சொல்வதைவிடத் தோண்டிப் பார்க்கவில்லை என்பதுதான் உண்மை. இன்று ஒரு சிறு எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் அங்கே இருக்கிறது.

அதுபோல நம்மிடம் ஒரு மாபெரும் சக்தி இல்லை என்று சொல்வதைவிட அதை நாம் தோண்டிப் பார்க்கவில்லை; ஆராய்ந்து பார்க்க வில்லை என்பதுதான் உண்மை.

அவன் நமக்கு அருகில்தான் இருக்கிறான்; நம்முள்தான் இருக்கிறான்!

பாடுகிறார் பத்திரகிரியார்.

"நானென்று இருந்த என்னை நான் அறியாக்காலம் எல்லாம் தான் என்று நீ இருந்த தனை அறிவது எக்காலம்?"

கண்டுபிடியுங்களேன் அர்த்தத்தை!

பாடுகிறார் பத்திரகிரியார், "நான் இருக்கிறேன்" என்று நீ என்னுள்ளே இருந்ததை நான் எப்போது அறிந்து கொள்ளப்போகிறேன்? நான் இத்தனை நாள் ஆனபின்னும் என்னை அறியாமல், என்னுள் நீ இருப்பதை அறியாமல் இருக்கிறேனே?" என்கிறார்.

மனிதன் தன்னை அறியவில்லை. "இதைத் தன்னை அறிந்திடில் தனக்கொரு கேடில்லை. என்றும் "அதன்பின் தன்னை அறியும் அறிவு" என்ற ஒன்றிருக்கிறது; தன்னை அறிக." என்று திருமூலர் தன் திருமந்திரப்பாடல்களில் சொல்கிறார்.

"தன்னை அறிந்திடில் தனக்கொரு கேடில்லை.
தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்;
தன்னை அறியும் அறிவை அறிந்தபின்
தன்னை அர்ச்சிக்கத் தான் இருந்தானே!"

"தனக்குள்ளே ஆன்மாவாக கடவுள் இருப்பதை அறிந்து மனிதன் தன்னையே அர்ச்சிக்கின்றான்" என்கிறார் திருமூலர். தன்னை அறியும் அறிவு என்பது நம் கடவுளின் அம்சம் என்பதுதான்.

2

பலன் தரும் பாதை

கெட்ட எண்ணங்களில் சிக்குண்டு மனிதன் தவிக்கிறான். ஆனால் அதைத் தெரிந்தே - விரும்பியே சென்று அவற்றில் மாட்டிக் கொள்கிறான். இப்படி மாட்டிக் கொள்ளக் காரணம் என்ன? மனிதனிடம் உள்ள ஆசை; தள்ள முடியாத ஆசை. அளவு கடந்த ஆசை! எப்படியாவது நிறைவேறாதா என்ற ஏக்கம். எப்போதும் அதே நினைவு. எப்படி ஆசை பூர்த்தி யாகும் என்ற பல்வேறு மனக் கற்பனை. நேர மெல்லாம் அதில்; வினாடி எல்லாம் அதில்; மன மெல்லாம் ஆசைகள்; உடல் எல்லாம் உணர்வுகள்.

கெட்ட எண்ணம்; தீய எண்ணம்; தீமை தரும் எண்ணம்; தவறான எண்ணம்; நியாயத்திற்குப் புறம் பான எண்ணம். பொய் சொல்லும் வாய்; பொய்யாக வரும் வார்த்தைகள். **வஞ்சகப் பேச்சு; ஏமாற்றும் குணம்; ஏமாறப் போவது முடிவில் யார் என்பதை அறியாத மானிடன்!**

தவறைத் தெரிந்தே செய்கிறான். பெற்றோர் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள்; நினைவில்

வருகிறது; ஆனாலும் அலட்சியம் அதுபற்றி. பள்ளிக் கூடத்தில் படித்திருக்கிறான்.

“தீயவை தீய பயத்தலால்– தீயவை
தீயினும் அஞ்சப்படும்”

என்று. ஆனாலும் இந்த நேரம், அவனுடைய நேரம். தவறைச் செய்தே தன் மனத்திருப்தியை - ஆசையைப் பூர்த்தி செய்யும் வேளை. யார் சொன்னாலும் எடுபடாது; எது சொன்னாலும் எடுபடாது. கடவுள் நேரிலே தோன்றி எச்சரித்தாலும் தவறை, பாபத்தைச் செய்து விட்டே ஓய்வான். அதன் பலன் வரும்போது தான், செய்த காரியத்தின் விளைவை அனுபவிக்கும் போதுதான் “ஐயோ! ஐயோ! ஆண்டவனே! என் கஷ்டத்தை, துன்பத்தைப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறாயா?” என்று அலறுவான்.

மனிதன் - தெரிந்தும் - அதன் விளைவுகளை உணர்ந்த பின்னும் செய்கிறான். அவன் பாடம் கற்பவனில்லை.

“சாப்பிடும் போது எதை சாப்பிடலாம், எதை சாப்பிடக் கூடாது” என்பதை உணர்கிறான். ஒதுக்கு கிறான். நல்லது கெட்டது தெரியாதவனல்ல.

படிப்பிலே அவனை மேதை என்கிறார்கள். தொழிலிலே அவனை ‘வில்லாதி வில்லன்’ என்கிறார்கள். சொத்தின் மதிப்பிலே கோடீஸ்வரன் என்று பாராட்டுகிறார்கள். சொல்லப்போனால் நாலும் தெரிந்தவன். நல்லவனாய்த்தான் நேற்றுவரை வாழ்ந்தான்.

எது அவனைத் தவறில், பாபச் செயலில் இறக்கி விட்டது? எண்ணம்; எண்ணம்! கெட்ட எண்ணம்.

தீய எண்ணம். எதிரியைப் பழிதீர்த்துவிட்டுத்தான் மறு வேலை; வஞ்சம் தீர்க்கும் நிலை. எவன் என் தொழிலில் எனக்குப் போட்டியாக? - பொறாமை! நான்தான் இந்த ஊரில் பணக்காரன். எல்லாச் சொத்தும் எனக்கே. என் அண்ணன் தம்பிகளுக்கு நான் கொடுப்பது போதும். பேராசை! எனக்கு கட்டுப் பட்டது தான் உலகம் - ஆணவம்! அடுத்த வீட்டுக் காரன் மனைவி அழகி என்றால் பேரழகி. அவளைக் கடத்திச் செல்வேன்; என் இல்லக் கிழத்தியாக ஆக்கிக் கொள்வேன். - ஆசை! மாற்றான் மனைவியைத் திருடும் திருடன்; பிறரது உரிமையைப் பறிக்கும் பாதகன்.

நடந்த சம்பவம் இது. அடுத்த வீட்டுக்காரன் மனைவிக்கும் இவனுக்கும் தொடர்பு ஏற்படுகிறது. இவனோ ஒரு பிரம்மசாரி. இந்த உறவை அவன் கணவன் அறிந்தான் என்பதைக் கேட்ட பிரம்மசாரி தன் குற்றம் பொறுக்காமல் அவன் வீட்டுக்கு சென்று அவள் கணவன் முன் மண்ணெண்ணையை ஊற்றி தீ வைத்துக் கொள்கிறான். தன் நெஞ்சே தன்னைச் சுடும் என்கிறார்களே அதுதான் இது. யாராலும் அவனைக் காப்பாற்ற முடியவில்லை.

கெட்ட எண்ணம் கொண்டவர்கள் வெவ்வேறு நிலையில் வாழ்வில் இறங்கி அல்லல் உறுகிறார்கள். சொல்ல முடியாத மனக்கஷ்டங்களையும் அதன் விளைவாக உடல் தளர்ச்சியையும் பாதிப்பையும், ஊர் உலக மக்களிடமிருந்து அவமானத்தையும் பெறுகின்றனர். அமைதியான பூஞ்சோலை; மணம் கமழும் மலர்கள்; பசியைப் போக்கும் இனிய பழங்கள்

— என்று இயற்கை நமக்கு அள்ளித்தர இருக்கும்போது, அறியாதவன் முறைகெட்ட காரியத்தைச் செய்து கஷ்டப்படுகிறான். எல்லாம் ஆசை; ஆசை; ஆசை! ஆசையின் விளைவு - அவலம்! அவலம்! அவலம்! வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் நேர்மையைக் கடைபிடிக்கலாம்; நியாயமற்ற செயல்களைத் தவிர்க்கலாம்.

பயிரை அறுவடை செய்யும்போது அத்துடன் முள் செடிகளையும் சேர்த்து நாம் அறுவடை செய்வ தில்லை. கெடுதல் பயக்கின்றவற்றை ஒதுக்குகிறோம். அதேபோல சுவையாயிருக்கிறது, நமக்குப் பிடித்திருக் கிறது, என்று அதிகமாய் சாப்பிட்டால் துன்பம்தான் ஏற்படும். எல்லாவற்றுக்கும் ஒரு எல்லை இருக்கிறது. நம் வாழ்வில் ஒரு கட்டுப்பாட்டுக்குள் மனிதன் சுதந்திரமாகவும் நேர்மையுடனும் சமத்துவ மனோ பாவத்துடனும், உண்மையானவனாகவும், எல்லா வற்றிலும் ஓர் ஒழுங்கு என்ற அழகுடனும் நல்லெண்ணத்துடனும் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும்.

இவைதான் இந்த இயற்கை தரும் கட்டுப்பாடு. வாழ்க்கைக்கு வழிகாட்டும் எல்லைகள். இதன் அடிப் படையில்தான் பிரபஞ்சம் இயங்குகிறது.

பிரபஞ்ச நியதிகள் பிரபஞ்சத்தை ஆள்கின்றன. வாழ்க்கை நெறிகள் வாழ்வை ஆள்கின்றன.

இந்த நிலையை மனிதன் தோன்றிய காலத்தில் இருந்து உணர்ந்துதான் வாழ்ந்து வந்தான். மனிதன் தெரிந்தே செய்யும் இன்றைய தவறுகளை அநியாயங் களைப் பார்க்கும்போது மனித இனமே அழிவை

நோக்கித்தான் போய்க் கொண்டிருக்கிறதோ என்று தான் பயப்பட வேண்டி இருக்கிறது.

எல்லாம் எங்கிருந்து ஆரம்பமாகிறது?

மனிதனிடமிருந்து. ஒரு மனிதன் இயக்கும் - செய்யும் தீய செயல் அவனை பாதிக்கிறது; மொத்த சமுதாயத்தையும் பாதிக்கிறது. எனவே முதலில் நாம் தனி மனிதனைச் சரி செய்ய, புரிந்துகொள்ள - சரியானபடி நடந்துகொள்ள - வைக்க வேண்டும்.

இதை எங்கே ஆரம்பிப்பது?

இன்று அவனுக்குத் தேவை ஆன்மீகம்தான். தனக்குள் ஒரு மாபெரும் சக்தி - இந்தப் பிரபஞ்சத்தின் சக்தி, இப்பிரபஞ்சத்தை உருவாக்கி, இயக்கும் சக்தி— நம் ஒவ்வொருவருள்ளும் இந்த பிரபஞ்ச சக்தி இருக்கிறது என்பதை உணர்ந்துகொள்வதுதான்; உணர வைப்பது தான் ஆன்மீகம்; (ஆன்மா இருப்பதை உணர்தல்)

வாழ்வில் நல்லது கெட்டதைப் புரிந்து கொண்டு நல்லதை மட்டுமே மனத்தில் போடுவது, நல்லதை மட்டுமே செயல்படுத்துவது, என்று நாம் நல்லெண்ணத்துடன் செயல்படுவோமானால் இந்த உலகாயத வாழ்வை நாம் ஓரளவு வெற்றியுடன் நீந்திக் கடந்துவிட முடியும்.

சில சமயம் "கெட்டது - செய்யக் கூடாதது" என்று தெரிந்தும், ஆசை உந்த, "செய்யாதே செய்யாதே!" என்ற கூவிடும் அறிவை சமாதானப் படுத்தி நாம் ஆசைப்பட்டதைச் செய்து விடுகிறோம். பின்னால் அதன் விளைவை அனுபவிக்கிறோம். உலக வாழ்வே துன்ப மயமானது என்று முறையிடுகிறோம்.

"நல்லது எது கெட்டது எது?" என்பதைப் புரிந்து கொள்வதில் சிலசமயம் அதன் விளைவுகளிலிருந்து தான். ஒரு காரியத்தின் முடிவில்தான் – "இது கெட்டது, இதைச் செய்திருக்கக் கூடாது" என்று தெரிந்து கொள்கிறோம்.

இதற்கு ஒரு எளிதான வழியை ஸ்ரீ அரவிந்தர் சொல்கிறார்.

தினந்தோறும் காலையில் எழுந்தவுடன் முதல் நாள் என்ன சம்பவங்கள் நடந்தன, யாரை சந்தித் தோம், என்ன செய்தோம் என்பதையும், அப்படிப் பட்ட ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் நாம் என்ன செய்தோம், எப்படிப் பேசினோம், நடந்து கொண் டோம் என்றும் தெளிவாக எழுதினோமானால் எதைச் செய்திருக்கக் கூடாது, எப்படிப் பேசியிருக்கக் கூடாது, எப்படி நாம் நடந்து கொண்டிருக்கக் கூடாது, அவசரப்பட்டிருக்கக் கூடாது – என்பது தெளிவாகப் புரியும். இப்படி இதைப் பாடம் ஒன்று என்று ஆரம்பியுங்கள். இப்படி தினந்தோறும் முதல்நாள் நிகழ்ச்சிகளைப் பாரபட்சமில்லாமல் ஆய்வோமா னால் இப்படி ஒரு 30 நாள் அல்லது 60 நாட்கள் நாம் செய்து வருவோமானால் எந்த சம்பவங்களில் எந்த நிலையில் நாம் தவறு செய்திருக்கிறோம் என்பது புரியவரும். ஒரு மாத காலத்தில் நாம் செய்யும் தவறுகளை நம் அனுபவத்திலிருந்தே தெரிந்து கொள்வோம். அதை அடிக்கடி படித்து நினைவு வைத்துக்கொள்வோமானால் மீண்டும் அத்தகைய தவறுகளைச் செய்ய மாட்டோம். இதன்மூலம் நாம்

தீமை தரும் விஷயங்களை ஒதுக்கக் கற்றுக்கொண்டு விடுவோம்.

இதன் விளைவாக நாம் சரியான பாதையில் செல்ல முடியும். நம் வாழ்வு உயர் வாழ்வாக மலரும். இது நாம் செய்யக்கூடிய, முன்னுக்கு வருவதற்கான உயர்வாழ்வு வாழ்வதற்கான எளிய வழி.

3

மனித வாழ்க்கையும், மனிதனும்

ஒரு நாடும் சரி, ஒரு நகரமும் சரி; அதில் வாழும் உயர் மனிதர்களாலும் அந்த நாட்டின், நகரின் கலாசாரப் பண்பாடுகளினாலும்தான் சிறப்பைப் பெறுகிறது.

இன்றைய தமிழ் நாட்டின் - இந்தியாவின் - மிகப்பெரிய குறையை அறிஞர்கள் குறிப்பிட்டார் களானால், அது "வாழ்க்கை நெறிகளற்ற அரசியல், அதிகாரிகள், ஆட்சியாளர்கள், பண்பாடற்ற நெறிகளற்ற சமுதாயம்" என்றுதான் சொல்வார்கள்.

என்ன வேண்டும் இன்றைய நாட்டிற்கு? வாழ்க்கை நெறிகளை மதிக்கும் சமுதாயமும் ஆட்சியும்! அப்படிப்பட்ட வாழ்க்கை நெறிகளைத் தான் ஆன்மீக அடிப்படைகள் என்று வேறு வார்த்தை களிலே சொல்கிறோம்.

அஃதே போல இந்த முழுப் பிரபஞ்சமும் சில நியதிகளுக்கு உட்பட்டுத்தான் இயங்குகிறது. எனவே பிரபஞ்ச நியதிகளை மீறி நடப்பது, வாழ்வது, நமக்கும்

கெடுதல்; இந்த சமுதாயத்தில் உள்ள எல்லோருக்கும் கெடுதல்.

செயற்கை உரம் போட்டார்கள், பூச்சி மருந்தை உபயோகித்தார்கள் உற்சாகமாக; அறுவடை செய் தார்கள்; அபரிமிதமாக சம்பாதித்தார்கள். எல்லாம் கொஞ்ச காலத்திற்கு. அந்த நாட்டின் காடுகளைச் சுற்றிப் பார்க்கச் சென்ற ரெய்ச்சேல் கார்சன் என்ற தாவரவியல் விஞ்ஞானி எழுதினார் "இப்போது காடுகளில் வசந்த காலத்தைக் காண முடிவதில்லை. பூக்கள் மணக்கவில்லை; பூக்கள் பூக்கும்போது வரும் மயிலும் குயிலும் அங்கே, இப்போது காணோம். இயற்கைக்கு என்ன நேர்ந்து கொண்டிருக்கிறது?" என்று எழுதினார்.

அடுத்து நமது குளிர்சாதனப் பெட்டியை உபயோகிப்பதன் மூலம் அதிலிருந்து வெளியேறும் ரசாயனம் கலந்த காற்று (புளூரோ கார்பன்) வான வெளியில் ஓட்டை போட்டு மனிதர்களை பாதிக்கும் புற ஊதாநிற ஒளிக்கதிர்களை அனுப்புகின்றன, என்று கண்டார்கள்.

அதாவது நாம் இயற்கையின் நியதியில் கை வைத்தோமானால் அது நம்மையே பாதிக்கும். இதை இன்று விஞ்ஞானிகள் அறிந்த அளவுக்கு இன்னும் அரசியல்வாதிகளோ தொழில் அதிபர்களோ பொது மக்களோ உணரவில்லை.

நாட்டில் வாழ்க்கை நெறிகள் இல்லாத ஒரு ஆன்மீக சூன்யம் ஏற்பட்டு வருகிறது. அதாவது நாடு இன்று புதிய மனிதர்களை, புதிய சிந்தனையாளர் களை, புதிய தலைவர்களை, எதிர்நோக்கி நிற்கிறது.

இவர்கள்தாம் இந்த நாட்டைச் சரியான பாதையில் சரியான திசையில் அழைத்துச் செல்ல முடியும்.

திருட்டும், பொய்யும், அதிகாரமும், ஆணவமும், பதவி மோகமும், பண ஆசையும், அவர்கள் கண்ணெதிரில் அவர்களது அழிவில்தான் கொண்டுவிடும். நாடு சீர்குலையும்.

இதுமட்டுமல்ல. காரும், தொழிற்சாலை யந்திரங்களும், விமானங்களும் விடும் புகை, காற்றில் கலப்பதும், காரும் பஸ்களும் ஏற்படுத்தும் புழுதிகளும் மனித வாழ்வை எப்படிப் பாதிக்கின்றன என்பதும் நமக்குத் தெரியும். காற்றில் இருக்கும் ஆக்சிஜன் நம் வாழ்விற்கு உயிருக்கு இன்றியமையாத தேவையாயிருக்கிறது. அதை மாசு படுத்தினோமானால் என்ன ஆகும்? அதன் பலன் அந்தச் சுமை - அந்தத் தீவினை நம் தலையில்தான் விடியப் போகிறது.

அணுசக்தி உற்பத்தி செய்கிறார்கள். அணு சக்தியின் கழிவுப் பொருட்களைப் பெரிய காரீயப் பெட்டிக்குள் வைத்து அதை இன்னும் பெரிய கனமான காங்க்ரீட் பெட்டிக்குள் வைத்துக் கடலில் போடுகிறார்கள்.

ஒருநாள் இல்லாவிட்டால் ஒருநாள் அந்த அணுசக்தி கழிவுகளின் கதிர்வீச்சு நிச்சயமாகக் கடல்வாழ் உயிர்களை பாதிக்கப் போவது நிச்சயம். கடல்வாழ் மீன்களையும் ஜீவன்களையும் பாதித்து முடிவில் அதை உணவாக உட்கொள்ளும் உலக மக்களை பாதிக்கப் போவது நிச்சயம்.

பால் அதிகம் கொடுக்க பசு மாட்டுக்கு ஒரு மருந்து (ஆக்சிடோசின்) கொடுத்தால் பாதி பால்

அதிகமாகக் கிடைக்கிறது; ஆனால் அந்த மருந்து மனிதனுக்கு எவ்வளவு கெடுதல் பண்ணும், என்று அறியாமல் உலகம் போகிறது.

இயற்கையை மாசுபடுத்தக் கூடாது; இயற்கையுடன் நாம் ஒத்துவாழ வேண்டும் என்பதை மனிதன் இன்னமும் புரிந்துகொள்ளவில்லை.

அதே போல மனிதன் தன் வாழ்விலும் ஆணவம், இறுமாப்பு, தான் பெரியவன், வலு படைத்தவன்; அதிகாரம் படைத்தவன் என்ற திமிர் அவனை விட்டுப் போகவில்லை. இந்த ஆணவம் என்ற மனோ பாவமும் உணர்வும், காமத்தில் முறை தவறிச் செல்ல சினிமா, டி.வி. காட்டும் வழிகளும், தான்தோன்றியாக நடக்கவும், பேராசையில் புத்தி இழக்கும்படியும், ஆசைகளினால் பிறர் உரிமையில் தலையிடவும் பொறாமையினால் பிறர்மீது வஞ்சம் தீர்க்கும் காரியத்திலும் மனிதனை இழுத்துவிடுகிறது. இதனால் மனித வாழ்க்கை ஏமாற்றத்திலும், தோல்வியிலும் வன்முறையிலும், மனக்கவலையிலும் நோயிலும் முடிகிறது.

அவை வாழ்வில் தனக்கு நிகழும்போது, "ஐயோ! ஆண்டவனே! நான் என்ன பாவம் செய்தேன்? என்று ஒரு புண்ணிய ஆத்மா போல அலறுகிறான், பாவி!

ஏன் இப்படி அலறுகிறான், கூக்குரலிடுகிறான் என்று யோசித்துப் பார்த்தால் அவன் தன் வாழ்வில் நிகழும் மோசமான சம்பவங்களுக்கு அவன்தான் காரணம் என்பதைப் புரிந்துகொள்ள வில்லை; புரிந்து கொள்ளப் போவதுமில்லை போலக் காலம் செல்கிறது.

ஒரு மனிதர் நோய் என்று மருத்துவரிடம் போன போது அவர் சோதனை செய்துவிட்டு அறிவுரை கூறினார். "மகனே! நீ இனி பீடி சிகரெட் பிடிக்கக் கூடாது; மது அருந்தக்கூடாது; கண்ட பெண்களுடன் உறவு கொள்ளக்கூடாது!" என்று சொன்னார். "அப்போதுதான் நீ நீண்ட நாள் வாழ முடியும்" என்றாராம். "அவை எல்லாம் இல்லாத வாழ்க்கை வாழ்ந்து என்ன பயன் டாக்டர்?" என்றாராம் அந்த மனிதர்!

மனிதர்களில் பலரும் தவறைத் தெரிந்தே செய்கிறார்கள். ஏன்? மனத்தில், தான் இப்படிப்பட்ட மனிதனாக வாழ வேண்டும், என்ற உயர் லட்சிய மில்லை.

இரண்டாவதாக இவர்கள், 'தன்னைக் கட்டுப் படுத்திக்கொள்ளும் திறமையை'யும் இவர்கள் வளர்க்க வில்லை; இதனால் பழக்கவழக்கங்களை இவர்களால் கட்டுப்படுத்த முடியவில்லை. கெட்ட பழக்க வழக்கங்கள் இவர்களை அவற்றின் இஷ்டப் படி நடத்துகின்றன.

இதையே பாரதியார் "தன்னை வென்றாளும் திறமை பெறாதிங்கு தாழ்வுற்று நிற்போமோ?" என்று பாடுகிறார்.

தன்னை வென்றாளும் திறமை - இதை நினைவில் கொள்ளுங்கள். நமது அறிவும் புத்தியும் நமது ஆசைகளைக் கட்டுப்படுத்த வேண்டும். இன்று என்ன பெரும்பாலோர் வாழ்வில் நடக்கிறது என்றால், மனிதனின் ஆசைகள்தான் அவனது அறிவை புறக்கணிக்கின்றன.

மனிதன் கஷ்டங்களில், துன்பங்களில், தோல்விகளில் உழல்கிறான். இப்படிப்பட்ட நல்ல குணங்களை இளம் பருவத்திலிருந்து, பள்ளியிலிருந்து சொல்லிக் கொடுக்கத் தவறி விட்டோம்.

பள்ளிகளில் (Moral Instructions) என்ற ஒழுக்க நெறிகளைப் பற்றிய பாடம் "தேவை இல்லை" என்று பாடத்திட்டத்திலிருந்து எடுத்து விட்டார்கள் புண்ணியவான்கள்!

4

சிந்தையை அடக்கியே...!

நாம் படபடப்புடன் இருக்கும்போது ஒரு வார்த்தையைச் சொல்வோமானால், சிறிது நேரம் கழித்து நமது படபடப்பு அடங்கிய உடன் அதை யோசித்துப் பார்த்தால், நமது படபடப்பில், கோப உணர்வில் சொல்லக் கூடாததை, சொல்ல வேண்டாததை சொல்லியிருக்கிறோம் என்பதை உணர்வோம்.

வேகமாகப் பேசுபவனின் பேச்சை மக்கள் அதிகம் வாங்கிக்கொள்ள மாட்டார்கள்; மக்கள் கிரகித்துக்கொள்ள மாட்டார்கள். சிலசமயம் வேகமாகப் பேசுகிறவனை அதிகம் மதிக்கவும் மாட்டார்கள்.

அதேபோல கோப உணர்வுடன், வஞ்ச உணர்வுடன் ஒரு முடிவெடுக்கும்போது நமது முடிவு தவறாகவே முடியும்.

அதனால்தான் பெரியோர்கள் கூறுகிறார்கள், நாம் புரிந்துகொள்ளும்படி "உலகம் சாந்தத்திலும் அமைதியிலும்தான் உருவாக்கப்பட்டது." என்று.

ஆகவே நாம் ஒன்றை உருவாக்க வேண்டுமானால் அதை சாந்தத்திலும் அமைதியிலும்தான் உருவாக்க வேண்டும். இதுதான் இப்பிரபஞ்சத்தின் மிகப் பெரிய உண்மை. வாழ்வில் அறிந்துகொள்ள வேண்டிய பலன் தரும் உண்மை.

அதாவது மனத்தை அமைதிப்படுத்த வேண்டும். நம் மனத்தில் ஏதாவது எண்ணங்கள் எழுந்த வண்ணம் இருக்கின்றன. அத்துடன் தொடர்பு கொண்ட எண்ணங்கள் மீண்டும் ஒரு சங்கிலிபோல் தொடர்கின்றன. மனம் என்பது ஒரு நீரூற்றுப் போல.

எனவே மனதில் எண்ணங்களே எழாமல் அதை வெற்றிடமாக ஆக்க வேண்டும்.

ஸ்ரீ அரவிந்தர் தம்முடைய குரு லேலேயிடம் கேட்கிறார், "சுவாமி! பல்வேறு எண்ணங்கள் மனத்தில் எழுந்த வண்ணம் இருக்கின்றனவே, என்ன செய்வது?" என்று கேட்கிறார்.

"எண்ணங்கள் மனத்தில் வரவர, உள்ளே நுழைய நுழைய அதைக் கீழே தள்ளிக் கொண்டே இரு" என்கிறார் குரு. கெட்ட எண்ணங்கள் எழுமானால் உடனே அதற்குப் பதிலாக நல்ல அன்பான வெற்றி தரும் மாற்று நல்லெண்ணங்களை நினையுங்கள். நல்ல உயர்ந்த எண்ணங்கள் மனத்தை நிறைக்கட்டும்.

> "சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம் அரிது
> சத்தாகி என் சித்த மிசை குடி கொண்ட
> அறிவான தெய்வமே தேஜோ மயானந்தமே."

என்று பாடுகிறார் மாணிக்கவாசகப் பெருமான்.

நம் ஆசையை உணர்வுகளை நம்மால் அடக்க முடிவதில்லை. அதே நினைவாக இருக்கிறோம். தூக்கம் வருவதில்லை. "நடக்குமா, நடக்காதா? கிடைக்குமா கிடைக்காதா?" என்ற மோதல்கள் கடல் அலைபோல நம்மை நிலை தடுமாற வைக்கின்றன.

எனினும் நமக்கு நன்றாகத் தெரியும் இது செய்யக்கூடாது; இதன் விளைவு தோல்வியாக முடியும்; ஏமாற்றத்தில் கொண்டுவிடும், விபரீதமாக நமக்கு அவப்பெயரை உண்டுபண்ணும் என்று பலவிதங்களில் நமக்குத் தெரியும். நம் அறிவு நமக்கு அழுத்தம் திருத்தமாக "செய்யாதே!" என்று குரல் கொடுக்கிறது. இருந்தும்...

நாம் ஆசையின் பின்னால் ஓடி துன்பத்திற்கு சங்கடத்திற்கு உள்ளாகிறோம்.

"அது இந்த அளவு தான் சாப்பிடுவேன்" என்றோ "இனி தித்திப்புப் பொருளைத் தொட மாட்டேன்" என்றோ எந்த முடிவாக இருந்தாலும் சரி — நமது ஆசையின் பின்னால் தவறு என்றும் தெரிந்தும் செய்கிறோமே அதை என்னவென்று சொல்வது? **சபலம்.** "சிகரெட் குடித்துப் பார்க்கிறேன்" - **சபலம்.** மது கொஞ்சமாக குடித்தால் பரவாயில்லை - **சபலம்.** அன்று பார்த்த பெண் தனது விலாசமும் போன் நம்பரும் கொடுத்திருக்கிறாள். கூப்பிட்டுப் பேசுவோம் - **சபலம்.** அவள் கணவர் எடுக்கிறார் போனை. அதிர்ச்சி. வாய் குழறுகிறது. நம் ஆசையை அவர் கண்டுபிடித்து விட்டாரோ? - அச்சம், பயம், அவமானம்.

"நான் இனி குடிப்பதில்லை என்றுதான் சொன்னேன். நான் அப்போது நல்ல நிலையில் இருந்தேனா?" — குடிகாரன் பேச்சு!

வேத உபநிடதங்களிலிருந்து சித்தர்களிலிருந்து, நமது ஞானிகள் வரை அனைவரும் இதை எல்லாம் ஆராய்ந்து நமக்கு நல்ல அருமையான அறிவுரைகளை கூறிவிட்டு — எழுதி வைத்துவிட்டுப் போயிருக் கிறார்கள்.

கெட்ட அனுபவங்களில் மாட்டிக்கொண்டு கஷ்டப்படும் மனிதன் பாடத்தை கற்றுக்கொள்ள வேண்டும். கற்றுக்கொள்ளாவிட்டால் படிப்பு பயனில்லை.

5

விரும்பாத நிலையை விலக்கும் வழிகள்

காரண காரிய உலகம், என்பது வினை விதைத்தவன் வினை அறுப்பான் தினை விதைத்தவன் தினை அறுப்பான் என்ற அடிப்படையில் இயங்குவது தான்.

சொல், செயல் முதற்கொண்டு வானிலுள்ள நட்சத்திரங்கள் வரை அனைத்தும் இந்நியதிக்கு உட்பட்டே இயங்குகின்றன. காரணம் சில சமயம் மர்மமாக உள்ளடங்கி இருக்கிறது.

வெறுப்பு, கோபம், பொறாமை, காமம், பேராசை எல்லாம் எரிகின்ற நெருப்புக்கள்.

இவை **மனிதன்** அஞ்ஞான நிலையில் செய்யும் காரியங்கள்.

மனிதன் காரண காரிய நியதியை உதாசீனம் செய்தன் விளைவு: - குழப்பம், கவலை, ஒழுங்கற்ற கெட்ட விளைவுகள், அனுபவங்கள். - நோய், தவறு, கேடு, துன்பம், துயரம், ஏக்கம், ஏமாற்றம்.

மாறாக **அன்பும்** பொறுமையும், தூய்மையும் நல்லெண்ணமும். சாந்தி அளிப்பவை. விளைவு ஆரோக்கியம், பயனுள்ள செயல், வெற்றி, சாந்தம் போன்ற புறச் சூழ்நிலை.

நியாயம், அன்பு, ஒற்றுமை இவை பிரபஞ்சத்தின் மேலான சக்திகள் என்று உணர்வோமானால், அறிவும் பலமும் வலிமையும் கெட்ட நிலை ஏற்படுவதைத் தவிர்க்க அக நிலையை அபிவிருத்தி செய்யத் தீர்மானிக்க வேண்டும், நாம்.

விடாமுயற்சியுடன் மனத்தை ஒழுங்குபடுத்துங்கள். புற வாழ்வில் அற்புதமான மாற்றங்கள் ஏற்படும். சூழ்நிலை மாறும். நல்லது வந்து சேரும். நல்லவர் உதவிகள் கேட்காமலே கிடைக்கும்.

குறை கூறுபவர்கள் நீங்கள் என்றால், அந்த குணம்தான் நமது மோசமான மனநிலைக்குக் காரணம். இதை மாற்றலாம் என்கிற தெளிவும் நம்பிக்கையும் முயற்சியும் நம்மிடம் இல்லை.

பெரிய வசதிகளை அடையுமுன் உங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள சிறிய பணியை சரியாக உபயோகித்துப் பயனடைகிறீர்களா என்பதைப் பாருங்கள். உங்கள் குடிசையை முதலில் மாசு மறுவின்றி வைத்துக் கொள்ளுங்கள். எளிய உணவை மிகுந்த சுவையுள்ளதாகச் செய்ய முடியும். அதுதான் அஸ்திவாரம். முன்னேறும் வழி.

வாழ்வில் கொடுக்கப்பட்ட காலத்தைச் சரியாக உபயோகிக்கிறீர்களா? கவனியுங்கள்.

முதலில் நாம் நம்மைச் சீர்திருத்திக் கொள்ள வேண்டும். அப்போது தீயனவெல்லாம் நல்லவையாக

மாறுவதைப் பார்ப்பீர்கள். வேலை செய்யுமிடத்தில் அன்பையும் பொறுமையையும் அடக்கத்தையும் காட்டுங்கள். மௌன நடத்தையாலும் சக்தியாலும் பிறர் மாறும் நிலை ஏற்படும். சூழ்நிலை மாறும்.

நீங்கள் உங்கள் குடும்பத்திற்கோ, சூழ்நிலைக்கோ வேலை செய்யும் நிறுவனத்திற்கோ அடிமையாக இருப்பதாகக் குறை கூறாதீர்கள். நீங்கள் சரிவர நடந்து கொள்ளாமல் உங்களைத் தாழ்த்திக்கொள்ள இடம் கொடுத்தீர்கள் என்பதுதான் உண்மை.

உலகில் அனைத்தும் சமம். சமநிலையில் தான் இந்தப் பிரபஞ்சம் இயங்குகிறது. எங்கே அடிமைத் தனம் ஆரம்பமாகிறது? மன அளவில், பின் உடல் நிலையில்! மனத்தால் கட்டப்படுகிறீர்கள். நாம் நம்மீது பரிதாபப்படுவது தேவையற்ற ஒன்று; அர்த்த மில்லாத ஒன்று. பலர் தங்களைத் தாழ்த்திக் கொள்வதில் சுகம் காண்கிறார்கள். இதன்மூலம் உங்கள் ஆன்மாவை, உங்களிடம் உள்ள இறை அம்சத்தைத் தாழ்த்துகிறீர்கள்.

நாம் நம்மையே தாழ்வாக எண்ணினோமா னால் நம்மால் எதுவுமே செய்ய முடியாது. இறைவன் எல்லாத் திறமைகளையும் வைத்துத்தான் மனிதனைப் படைத்திருக்கிறான்.

நாம் நம் எண்ணங்களைச் சீரமைத்துக் கொள்ள வேண்டும். **நம்மால் முடியும்** என்று நம்மைத் திருத்திக் கொள்ள முன்வர வேண்டும். முதலாவதாக நம் எண்ணங்களை மாற்றிக்கொள்ள வேண்டும். ஏனெனில் என்ன எண்ணுகிறோமோ நாம் அதுவாக

ஆகிறோம் என்பதுதான் வேத வாக்கு; உபநிடதம் கூறும் உண்மை.

சமீபத்தில் இந்து பத்திரிக்கையில் வெளிநாடு செல்லும் இந்தியர்கள், மிகுந்த பயந்த சுபாவத்துடனும் தங்களைப் பற்றித் தாழ்ந்த மனப்பான்மையுடனும் தங்களுடைய பாரம்பரியத்தை அறியாதவர்களாகவும், தன்னம்பிக்கை இல்லாதவர்களாயும் இருக்கிறார்கள் என்றொரு செய்தி வந்தது.

கம்ப்யூட்டரோ, நிர்வாகக் கல்வியோ, உயிரியல் தொழில் நுட்பமோ, நல்ல மருத்துவ அறிவோ பெற்ற பிறகுதான் நமது மாணவர்கள் அமெரிக்கா செல்கிறார்கள். வெறும் படிப்பு மட்டும் போதாது.

பலரும் கூடிய வரையில், ஒரு ஆறுமாத காலத்திற்குள் தங்களைச் சரி செய்து கொள்கிறார்கள். ஆனாலும் சிறு வயது முதல் நாம் வளர்ந்த விதமும், நம் நாட்டில் இன்று எல்லாத் தொழில் துறைகளிலும் வியாபாரத்திலும் நம்பகத்தன்மை இல்லாத நிலையும் பலருடன் நிழல் போல் வருகிறது. இப்படி நம் இனத்தையே தாழ்த்திவிடக் கூடிய பழக்க வழக்கங்களை நம்முடன் எடுத்துச் செல்கிறோம்.

நம் நாட்டில் வேத உபநிடதங்களும், நாயன்மார்களும், ஆழ்வார்களும், சித்தர்களும், மகரிஷிகளும், யோகிகளும், ஞானிகளும் இருந்திருக்கலாம்; இருக்கலாம். அத்தனையும் இருந்தும் இன்றைய இந்திய சமுதாயம் சீரழிந்த நிலையில்தான் இருக்கிறது. இது தனி மனித வளர்ச்சியிலிருந்து, வாழ்வின் நெறி முறைகளாக ஆகும்போதுதான் நமது சமுதாயத்திற்கு உயர்வும் பெருமையும் வருமே தவிர நாம் பழமையைப்

போற்றிக் கொண்டிருப்பதால் மட்டுமே நடக்கப் போவதில்லை.

சத்தம் போட்டு பேசுகிறார்கள் என்றும், டெலிபோனை அதிகம் உபயோகிக்கிறார்கள் என்றும், கூட்டம் கூடி அவர்கள் மொழியிலேயே பேசிக் கொண்டு உள்ளூர்க்காரனை அந்நியனாக ஆக்கு கிறார்கள் என்றும், எல்லாவற்றிற்கும் மேலாக அலுவலகத்திலிருந்து பேனா, பென்சில், ரப்பர் நோட்புக் என்று இவற்றை வீட்டு உபயோகத்திற்கு எடுத்துச் செல்கிறார்கள் என்ற காரணங்களினாலும் ஓகையோ மாநிலக் கம்ப்யூட்டர் நிறுவனம் ஆறு இந்தியர்களை வீட்டிற்குத் திருப்பி அனுப்பியது!

அடுத்த நாள் அதே செய்தித்தாளைக் காலையில் படித்தேன். அதில் கௌசல்யா என்பவர் ஒரு கடிதம் எழுதி இருந்தார். வீட்டு குழந்தை, ஆறாவது படிக்கும் மாணவன் கேட்கிறானாம். “அப்பா! நான் வெள்ளிக் கிழமையே சொல்லிவிட்டேனே நோட்புக் தீர்ந்து போய்விட்டது என்று. அலுவலகத்திலிருந்து எடுத்து வரவில்லையா?”

எப்படி இருக்கிறது நமது பண்பாடு!

அதாவது எப்படியாவது ஒரு நாலணா பெறுமானமான அலுவலக விஷயங்களை வீட்டு உபயோகத்திற்கு எடுத்து வந்தால்தான், திருப்தி என்பது ஒரு வழக்கமானால் நாளை இவன் அமெரிக்காபோய் என்ன செய்வான்? அதைத்தான் செய்வான்! செய்கிறான்!

வாழ்க்கை நெறிகளற்ற ஒரு சமுதாயத்தை முன் மாதிரியாக இன்றைய அரசியல்வாதிகளும், அரசாங்க

அதிகாரிகளும், காவல்துறையும், தொழிலதிபர்களும், நிதி நிறுவனங்களும் உருவாக்கி வருகிறார்கள்.

சுதந்திரம் வந்து 50 ஆண்டுகளுக்கு மேல் ஆகி விட்டன. வெள்ளைக்காரன் ஆண்டதைவிட இன்னும் சிறப்பாக அல்லவா நாம் ஆகி இருக்க வேண்டும்?

"இயற்கை விதிகளை நாம் மீறுகிறோம்; மீற அனுமதிக்கிறோம்" என்பதைக் கண்டும் காணாமல் தான் நம் தலைவர்கள் நடந்து கொண்டிருக்கிறார்கள்.

வாழ்க்கை நெறிகள் என்று பதஞ்சலி முனிவர் காம குரோத லோப மோக மத மாச்சரியம் என்றார். அதே போல அமெரிக்கக் கலைக்களஞ்சியத்தின் தலைமை ஆசிரியர் "உலகின் ஆறு பெரிய உண்மைகள்" என்று நேர்மை, சமத்துவம், சுதந்திரம், உண்மை, அழகு, நல்லெண்ணம் என்று புத்தகமே எழுதி இருக்கிறார்.

ஒரு தொழிலதிபருடனும் ஒரு பல்கலைக்கழகத் துணை வேந்தருடனும் நான் பேசிக் கொண்டிருந்த போது, "உண்மை பேசு என்கிறீர்கள். பொய் சொல்லாமல் எப்படி வாழ முடியும், தொழில் நடத்த முடியும்?" என்றாரே பார்க்கலாம். நான் விவாதம் செய்ய விரும்பவில்லை!

மோகன்தாஸ் கரம் சந்த் காந்தி என்ற ஒரு மனிதர் வழக்கறிஞராக வாழ்க்கையைத் துவங்கியவர் நம்மிடையே வாழ்ந்திருக்கிறார், உண்மை மட்டுமே பேசிக் கொண்டு. அடுத்து கத்தியேந்தி ரத்தம் சிந்திப் போராடி வந்த ஒரு உலகில், வெறும் அகிம்சையால் மட்டுமே அவர்களை வீட்டுக்கு அவர்கள் நாட்டுக்குத்

திரும்பிப் போகச் செய்து, ஒரு மாமனிதர் காந்தி என்ற பெயரில் நம்மிடையே வாழ்ந்திருக்கிறார்.

மனவியலைப் பற்றி எழுதும் அறிஞர்கள் என்று ஒரு மனிதனிடம் மாற்றம் தோன்றும், அதன்பின் மாற்றம் நிரந்தரமாகும் என்று கேட்டுக் குறிப்பிட்டு, 'இன்றிருப்பது சரியல்ல நான் மாற வேண்டும்' என்ற தணியாத தாகம் இதயத்திலிருந்து கிளம்ப வேண்டும் (Willingness to Change) என்கிறார்கள்.

நமக்கெல்லாம் இதயமே இல்லாமல் போய் விட்டதா? இப்படி இயற்கை நியதிகளை எல்லாம் நாம் மீறுவதால்தான் பிரபஞ்சம் என்ற இயற்கை நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்ற எல்லா இயற்கை சக்திகளும் இன்று தாறுமாறாக எதிர்பாராதவிதமாக நடந்து கொள்கின்றனவா? நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

இன்றைய இயற்கையின் உத்பாதங்களைக் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். இயற்கையை மீறி நாம் வாழ்ந்துவிட முடியுமா?

இது இன்று
ஆன்மீக அடிப்படை இல்லாத சமுதாயம்!
அடித்தளம் இல்லாத சமுதாயம்!

6

நான், எனது, எனக்கு - ஆணவம்! சுயநலம்?

"என்னிடம் மூன்று நகைப் பெட்டிகள் இருக்கின்றன" என்று ஆரம்பிக்கிறார் லாட்சு. அவற்றைத் திறக்கிறார். நாம் ஆச்சரியத்துடன் பார்க்கிறோம், உணர்வுகள் கண்களாக.

ஏன் இந்த மனிதர், ஞானி, நகைப்பெட்டிகளைச் சுமக்கிறார்? ஆச்சரியம் நம்முள் மேவுகிறது. காரணங்களைச் சொல்கிறார்.

'இன்றைய நாட்டைப் பார்க்கிறேன். வீரம் கருணையை அறியவில்லை' என்று தொடங்குகிறார். வீரமுள்ளவன் தன்னால் எதையும் சாதிக்க முடியும் என்று போரில் இறங்குவானானால் - சண்டை போடச் செல்வானானால் - வீரம் விலை போகாது; எடுபடாது. மூக்குடைந்து தோல்வியுற்றுத் தான் திரும்புவான்.

வீரத்திற்குத் துணையாக, நிதானம் வேண்டும், பொறுமை வேண்டும், சூழ்நிலையையும், மாற்றான் வலிமையை அறியும் பக்குவம் வேண்டும். இவை

யெல்லாம் சாதாரணத் தேவைகள். வீரத்தைக் கடந்த வீரம் என்ற ஒன்றிருக்கிறது. அதுதான் கருணை; உயர் தர்ம நெறி. அது சகல வல்லமை படைத்தது. அதனால் நாமும் வாழ்கிறோம். அவனும் வாழ்கிறான். அதனால் அவனும் உயர்கிறான். நாமும் உயர்கிறோம். நிரந்தரத் தீர்வு தருவது அது ஒன்றுதான்! அதைப் பலர் உணர்வதில்லை. ஞானிகள் நம் கண்முன் பலமுறை அதை எடுத்துக்காட்டியும் நாம் காண மறுக்கிறோம். தங்களுடைய சுயகௌரவத்துக்குப் பழுது ஏற்படுமோ என்ற கவலையுடன் பழிவாங்கத் தீர்மானிக்கின்றனர்.

வன்முறையின் எதிர்ப்பதம் அன்பு, பரிவு, கருணை. "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண" என்கிறாரே வள்ளுவர், அப்படி எதிரியே வெட்கப் படும்படி நல்ல காரியம் செய்தல். "பகைவன் பகைவனே அல்ல; நீ தான் அப்படிப் பார்க்கிறாய். அவனிடமும் நல்ல குணம், உயர் பண்புகள் இருக்கின்றன. அதைத் தொடு" என்கிறார் பாரதியார். 'பகைவனுக்கருள்வாய்' என்கிற பாடலில்.

புகையினால் மூச்சுத் திணறுகிறது; கண்கள் கசிகின்றன. பார்வை பழுதுபடுகிறது. ஆனால் புகையைச் சற்று விசிறி, காற்றை அளிப்போமானால் 'ஓகோ' என்று தீ எரிகிறது. குளிரைப் போக்குகிறது. அழுக்குகளை எரிக்கிறது; பாலைப் பொங்க வைக்கிறது! "புகை நடுவினில் தீ" என்று சொல்கிறார்.

நமது ஒவ்வொரு குணத்தையும் நிதானப் படுத்தும் எதிர்க்குணம் நம்முன்னேயே இருக்கிறது. வன்முறையை அன்பினால் மட்டுமே வெல்ல முடியும்; வன்முறையால் அல்ல.

தாராள குணம் மிகமிகத் தேவை. அதன் எதிர்ப்பதம் சிக்கனம். சிக்கனமில்லாத வள்ளல் குணம் மனிதனைச் செலவாளி என்கிறது. மனிதனுக்கு தாராளமும் வேண்டும். சிக்கனமும் வேண்டும். ஒரு காந்தக் கட்டையின் ஒரு முனை தாராளம்; மறுமுனை சிக்கனம் என்றால், இரண்டும் வேண்டும் எனும்போது நாம் நடுவில் நிற்போம். ஒரு முனை தாராளம் மறுமுனை சிக்கனம் என்றால் தாராளத்திலிருந்து விலகிப் போ. அதே போல சிக்கனத்திலிருந்து விலகிப் போ என்றால் காந்தக் கட்டையின் நடுவில் நிற்பது. நடுநிலை, உயர்நிலை. பகவத் கீதையின் தாரக மந்திரம் என்று பாரதியார் சொல்லும் விருப்பு வெறுப்பற்ற நடுநிலை. பற்று நீக்கிய நிலை. பற்று நீக்கித் தொழில் செய் என்பதை வலியுறுத்த 'பற்று நீக்கி' என்ற வாசகத்தைத் திரும்பத் திரும்ப மூன்று முறை சொல்வார் பாரதியார். அதுதான் ஞானி லாட்சு குறிப்பிடும் "தாராளமும் இல்லை — சிக்கனமும் இல்லை; இதுவும் அதுவுமற்ற இடைநிலை; இதுவும் அதுவும் கலந்த நடுநிலை."

தலைமை என்பது உயர்வான மேலிடம்தான்; ஆனால் மேலே போகப்போக எளிமை, அடக்கம் ஆக மாற வேண்டும். அப்போதுதான் அது பரிணமிக்கும். வாழ்விலே எதிர்ப்பதங்களின் அர்த்தத்தையும் கலந்தோமானால் அது தான் சம நிலைச் சிந்தனை. இந்த சமநிலைச் சிந்தனையே யோகம் என்கிறது கீதை. வாழ்க்கை யோகமாக இருக்க வேண்டும்.

தன்னை முன்னிறுத்தாமைதான் தலைவனிடம் இருக்க வேண்டிய தலைமைப் பண்பு. கீழே

இருப்பவர்கள் தான் வேலைகளைச் செய்கிறார்கள்; தலைவன் வழிகாட்டுகிறான். தன்னை முன்னிறுத் தாமல் கீழே இருப்பவர்களைப் பாராட்டும் போது உற்சாகம், நம்பிக்கை, மன நிறைவு என்று எல்லாம் பணிபுரிவோருக்கு ஏற்படுகிறது. இதுவே சரியான அணுகுமுறை.

கருணை என்ற வார்த்தையை நம் நினைவுக்குக் கொண்டுவரும் வாசகம் "அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை" என்கிற அமர வாசகம்தான்.

உலகின் மாபெரும் சக்தி, ஜோதியாக - ஞானியாக இருக்கிறது. ஆழ்ந்து அமைதியான தியான நிலையில் அந்த ஒளிதான் நம்முள் விரிகிறது. நம் வாழ்வையும் புறத்தோற்றங்களையும் மாற்றுகிறது. உலகின் மாபெரும் இயக்கம் அது; கருணையே அதன் வடிவம்.

அப்படிப்பட்ட கருணையை அறிய, உணர, பயன்படுத்த நாம் என்ன செய்ய வேண்டும்? "ஆன்ம நேய ஒருமைப்பாடு" என்கிறார் வள்ளலார் ராமலிங்க அடிகள்.

உன்னுள் இருக்கும் ஆன்மாவை தரிசிக்கும் தாகத்துடன் புறப்படு. நேயத்துடன், ஆர்வத்துடன் பக்தியுடன் அழைத்தால் போதும்; நினைத்தால் போதும். மனம் அதிலே லயிக்க வேண்டும். ஒன்றிவிட வேண்டும். அப்போது நம்மிடமிருந்து பரவுவது அன்பு, பரிவு, கருணை, உதவும் உள்ளம்.

ஞானி லாட்சு முதலில் கருணை என்ற மனத்தின் குணத்தைக் கூறுகிறார். இரண்டாவதாகச் சொல்வது: பொருளியல் உலகில் வாழும் வழிமுறை.

"எதையும் வீணாக்காதே, யாரையும் வீணாக்காதே, சிக்கனமாயிரு" என்பது. மூன்றாவதாக, "உன்னை முன்னிறுத்தாதே" என்று மற்றவர்களுடன் இணைந்து வாழும் உயர்பண்பை ஞானி லாட்சு கூறுகிறார்.

நம்மை முன்னிறுத்துவதை ஆணவம் என்கிறோம். யோசித்துப் பார்த்தால் காம, குரோத, லோப, மோக, மத (ஆணவம்) மாச்சரியம் (பொறாமை) என்ற எல்லாக் கெட்ட குணங்களும் ஆணவம் என்ற ஒன்றிலிருந்து கிளம்புவது புரியும். அதனால்தான் சைவசித்தாந்தத்தில் ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்றில் மொத்த வாழ்வையே அடக்கியும் ஆணவத்தில் நம்மை நெறிபிறழச் செய்யும் குணங்களையும் அடக்கி வைத்திருக்கிறார்கள்.

ஞானி லாட்சு ஆன்மீக சக்திகளை அன்றாட வாழ்வுக்கு அழைத்து வருகிறார்.

7

தியானம் - மன அமைதி

படிக்குமுன் மனம் ஓய்வாக இருக்கட்டும். உடல் தளர்ந்த நிலையில் வேஷ்டி சட்டைகள் இறுக்க மில்லாமல் இருக்கட்டும். நெருக்கடியற்ற தவிப்பற்ற மனம் தேவை.

படிப்பது என்பது மனத்தில் வாங்கிக் கொள்வது தான். அதை அப்படியே உணர்வது, அதில் தோய்ந்து போய்விடுவது, ஆழ்ந்துபோய் ரசிப்பது இருக்கிறதே — அதுதான் சரியான முறை.

படிப்பு எப்போது பூர்த்தியாகும்?

என்று நாம் கற்றதை நடைமுறை வாழ்வில் உபயோகிக்கிறோமோ அப்போது. பலன் பெற்ற பலரது வாழ்க்கைச் சம்பவங்களைப் பற்றிப் படிப்பது நம் மனத்தில் தீவிர ஆர்வத்தை ஏற்படுத்தும்.

இதைத் தொடர்ந்து விடாப்பிடியாக அடிக்கடி உபயோகிக்கும்போது தான், அந்த விடா முயற்சிதான் முழு பயனைத் தரும்.

இதன் பலன், இதன் மதிப்பு பற்றிப் பல பக்கங்கள் எழுதலாம்; பேசலாம். ஆனால் சொந்த

அனுபவத்தில் ஏற்படும் ஆனந்தம், தெளிவு, உணர்வு இருக்கிறதே, அதைச் சொந்த அனுபவம் மட்டுமே தரும்.

எதில் நாம் கவனத்தை செலுத்தி எடுத்த காரியத்தை முடிக்கிறோமோ அப்போது அது எழுத்தாக இருந்தால் உயர் கவிதையாக உருவாகிறது. கல்லில் எழுப்பப்படும் சிற்பமானால் உயிரோவியம் பெறுகிறது.

ஆன்மீகம் — அமைதியில் தான் துவங்குகிறது.

எளிமைக்கு வழிகாட்டுவது — மௌனம் தான்.

அமைதி - மன நிறைவைத் தருகிறது.

மௌனம் — முகத்தில் புன்னகையை வரவழைக்கிறது.

மௌனம் இனிமை நிறைந்தது.

மௌனத்தில் உண்மை பிறக்கிறது.

அமைதி அறிவுடன் செயல்பட உதவுகிறது.

அமைதி நமக்கு நிலையான ஒன்றைத் தருகிறது. பிரச்சினைகளுக்கு தீர்வு தருகிறது.

வலிமைக்கு மார்க்கம் மௌனம். நம்மிடமுள்ள சுயநலத்தை அகற்றுகிறது. மௌனத்தில் நமக்குள் இருக்கும் சக்தியை அறிய முடிகிறது.

மன நெருக்கடியிலிருந்து விடுதலை தருகிறது. துயரங்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி. அமைதி நம்மை இனிமையாக உயரத்தில் இழுத்துச் செல்கிறது. மௌனம் உள் விளைவை உருவாக்குகிறது.

தொண்டு மனப்பான்மை வளர்கிறது. அது புனித உணர்வைத் தருகிறது.

எல்லா உயிர்களிடத்தும் பரிவை ஏற்படுத்து கிறது. மௌனத்தைப் போல் பாதுகாப்பு எதுவு மில்லை. மௌனம் ஏகாந்தத்தின் இனிமை.

மனத்தை அமைதிப்படுத்துகிறது.

நமது சுயமரியாதையை வளர்க்கிறது.

இயல்பான உள்ளுணர்வை வெளிக்காட்டுகிறது. மௌனம் என்பது ஞானம் பெற்ற மோனநிலை. உள்ளதை உள்ளபடி உணர்த்துகிறது.

அமைதியும் சாந்தமும் வாழ்வில்

அமைதியாக இருப்பது பற்றி எவ்வளவோ பேசலாம்; படிக்கலாம்; தெரிந்து கொள்ளலாம். திடீரென்று நாம் உணர்ச்சியால் ஆட்கொள்ளப்படும் போது கோபம் எழுகிறது. முகம் கடுப்பாகிறது. சொல்லில் அம்பைப் பாய்ச்சுகிறோம். செயலில் அதன் இயல்பு வெளிப்படுகிறது.

உணர்ச்சிக் கொந்தளிப்பில், வேகத்தில், பட படப்பில் அநியாயம் என்று தனக்குத் தோன்றும் எண்ணம் வெறியாக மாறி மனிதன் தன்னை இழக்கிறான். கோபமும் பொறாமையும் பழி தீர்க்கும் குணமும் மனிதனிடம் வெறியாக மாறுகிறது. கொலைக்குத் தூண்டுகிறது.

பல கொலைகள் உணர்வின் தூண்டுதலால் செய்யப்பட்டவைதான். தனக்குப் பிறந்த பெண் குழந்தை தன் குடும்பத்தையே ஏழையாக்கித் தெருவில் நிறுத்திவிடும் என்ற மக்களிடையே பரப்பப்பட்டிருந்த எண்ணம், அது கிளப்பிய பயம், தீர்மானமாக மாறித்

தான் பெற்ற குழந்தையைக் கொல்கிறாள் ஒரு இளம் தாய். "குழந்தை தன் இடது கையால் விரலைச் சூப்பினால் குடும்பம் தெருவில் நிற்கும்" என்ற ஒரு நம்பிக்கை அந்த மக்களிடையே. அந்த பயம் உந்த கொலை செய்துவிட்டாள். ஆழமான நம்பிக்கை, செயலைத் தூண்டுகிறது.

அண்ணன் மனைவி மீது ஒரு கண் தம்பிக்கு. பார்வதி ஷா என்ற பத்தினிப் பெண்ணைக் கற்பழித்து கொலை செய்கிறான் வெறியன். காம உணர்வு வெறியாகிறது.

கொலை என்பது உச்சம். பிறர் மீது பொறாமை கொண்டு அவர்கள் தாழ்ந்து போக வேண்டும் என்று எண்ணுகிறார்களே, அதுவும் கொலைக்குச் சமமான மான கீழ் உணர்ச்சிதான். மாறுபட்ட கருத்துக் கொண்டவனை மாறுபட்ட மதத்தினரை, வேறுபட்ட மாநிலத்தவர் மீது வெறுப்பைக் கொட்டிப் பகைவ ராகப் பார்க்கிறார்களே, அதுவும் தீமைதான். அந்தச் செயல் ஓரளவு பிறருக்கும் அதிக அளவுக்கு நமக்கும் தீமை புரிகிறது.

பெரியவர்கள் 'நல்லவனாயிரு.' நல்லதைச் செய் என்று சொன்னால் நமக்குப் புரிவதில்லை. ஆனால் "கெட்டதை ஒதுக்குங்கள்; மனத்தில் கெட்ட எண்ணத்தை வளர்க்காதீர்கள்" என்று சொல்லி யிருக்கிறார்கள். யோக பயிற்சிகளில் இயமம் நியமம் என்று பஞ்சமா பாதகங்களை முதலில் இயமத்தில் சொல்லி கடைபிடிக்க வேண்டிய நல்ல பண்புகளைப் பின்னால் நியமத்தில் சொல்கிறார்கள். தீமையின் விளை நிலம் மனம்தான். மனத்தில் தீய விதைகளைப்

போடாதே என்று பட்டியல் கொடுக்கிறார்கள் பெரியவர்கள். காமம் என்றும், பகைமை என்றும், சுயநலம் என்றும், பேராசை என்றும், ஆணவம் என்றும், பொறாமை என்றும் மறந்தும் இறங்காதே. செயல்படாதே. உன் மனத்தில் இந்த எண்ணங்கள் ஏற்படும்போதே அதனால் உனக்கு ஏற்படும் உடல் கெடுதலை நினைத்துப் பார். உன் சூழ்நிலை உன் கெட்ட எண்ணத்தால் மாறி உனக்கே கேடு விளைவிக்கப் போவதை - உன் முன்னேற்றத்தைத் தடை செய்வதை யோசி. "கேடு பிறர்க் கெண்ண தனக்கதுவாம் எனும் உண்மையை நீ அறிய வில்லையா?" என்று கேட்கிறார் பாரதியார். "கெட்ட எண்ணங்கள் மனத்தில் தோன்றும்போது அது நம் உடலிலுள்ள நோய் எதிர்ப்புச் சக்தியை குறைத்து விடுகிறது. நோய்க் கிருமிகள் உள்ளே புகக் காரணமாக இருக்கின்றன" என்கிறார்கள் மருத்துவ விஞ்ஞானி கள்.

பல சமயங்களில் நோயோ நம் வாழ்க்கைச் சூழ்நிலையோ மாறி நாம் துன்பத்திற்கு உள்ளாகும் போது என்ன காரணத்தினால் இது நிகழ்ந்தது என்ற உண்மை நமக்கு புலப்படுவதில்லை. "எனக்கேன் வந்தது?" என்று புலம்புகிறோம். புலம்புகின்ற நாம், நம் மனத்தில் இருக்கின்ற, நாம் மன்னிக்க விரும்பாத எதிரிகளை எல்லாம் கவனத்தில் கொண்டு வந்தால், நம் மனத்திலிருக்கும் நியாயமற்ற ஆசைகளை எல்லாம் எண்ணிப் பார்த்தால், நமக்கு நமது உண்மை சொரூபம் தெரியும். இந்த சுய சோதனை நமக்கு அவசியம்.

நல்வாழ்வு வாழ - உயர்வாழ்வு வாழ - நாம் நம்மை சதா கண்காணித்துக் கொண்டிருக்க வேண்டும். "ஆணவத்தினால் பேசுகிறேனா? பிறரை அலட்சியம் செய்கிறேனா? மற்றவரைப் பார்க்கும் போது கெட்ட எண்ணம் என் மனத்தில் எழுகிறதா? 'நாம் உயரவில்லை அவன் உயர்ந்துவிட்டானே' என்ற பொறாமை எண்ணம் எழுகிறதா?" இப்படி ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாம் நம்மைக் கண்காணிக்க வேண்டும்; சுய ஆராய்ச்சி செய்ய வேண்டும். இப்படித் தொழில் துறையில் கண்காணிப்பதை ஜப்பானில் கெய்சான் (Keizan) என்பார்கள். அதாவது, முன்பெல்லாம் ஒரு கார் செய்யப்படுகிறது என்றால், அதை உருவாக்கிய பின் அதை ஓடவிட்டுப் பார்த்து அதை முழுமையாகப் பரிசோதித்து அதற்குப் பின் அதை விற்பனைக்கு அனுப்புவார்கள்.

வந்தார் டெமிங் என்ற தொழில் ஆலோசகர். சொன்னார்: "ஐயா! இப்படிக் கடைசியில் முழுப் பரிசோதனை செய்தால் மொத்தப் பொருளும் நஷ்டமடைகிறது. எனவே ஒவ்வொரு கட்டத்திலும் - அச்சை கோக்கும்போது அச்சையும், என்ஜினைக் கோக்கும் போது என்ஜினையும், சக்கரத்தை இணைக்கும்போது சக்கரத்தையும், குறையிருக்கிறதா என்று அங்கங்கு பல்வேறு கட்டங்களிலும் சோதித்தீர்களானால் பொருளும் நேரமும் எவ்வளவோ மிச்சமாகும்" என்றார். இதுதான் அமெரிக்கர் கற்றுக் கொடுத்த ஜப்பானியக் கண்காணிப்பு முறை.

இதை நாம் நம் வாழ்விலும் கடைப்பிடிக்கலாம். எண்ணங்களை ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு

கட்டத்திலும் நமக்கும், பிறருக்கும் நல்லதா என்று யோசித்து சரியில்லாதவற்றைத் தள்ளிக் கொண்டே இருக்க வேண்டும். நேர்மையின் வழி நடக்க வேண்டும். கற்றுக் கொள்ள வேண்டும். பல ஞானிகள் பெரியவர்கள் நமக்கு நல்ல அறிவுரை கூறுகிறார்கள். ஆனால் அது எப்போது பயன்படும் நமக்கு? எப்போது அது நம் பழக்கமாகும்? எப்போது நம்முடைய இயல்பான குணமாக அது மாறும்?

ஒரு விஷயத்தைப் படிக்கிறோம். அது உண்மை, உபயோகமுள்ளது என்பது தெரிகிறது. முதலில் இதில் உள்ள நன்மை தீமைகளைப் புரிந்து கொள்ள வேண்டும். இதில் பெரும் நன்மைகள் இருக்கின்றன. எனவே இதைக் கடைபிடிப்பது நல்லது என்ற தெளிவு; இதனுடன் இதை கடைபிடிக்காமல் அலட்சியம் செய்தோமானால் நாம் நஷ்டத்திற்கு உள்ளாவோம்., அவமதிப்புக்கு உள்ளாவோம், நோய்க்கு உள்ளா வோம் என்கிற பயம், திகில் நம்மை நல்லதை நோக்கி விரட்டுகிறது.

எனவே நாம் தீர்மானிக்கிறோம், “இனி இப்படி நடப்பேன்” என்று. இதை கடைபிடிக்க எழும் இந்த எண்ணம்தான் நம்மிடம் தீவிர ஆர்வமாக, உந்துதலாக எழுகிறது.

நமது தீவிர ஆர்வம் அடுத்த கட்டத்தில் நாம் செய்யும் தீர்மானமாகவும், அதன் அடுத்த கட்டத்தில் “நான் இந்த நல்ல பழக்கத்திலிருந்து மாற மாட்டேன்.” என்ற மன உறுதியாகவும் செல்ல வேண்டும். அதற்கு அடுத்த கட்டமாக வைராக்யம் என்ற ஒரு நிலை வர வேண்டும். இப்போது நாம் நமக்குள் சொல்லிக்

கொள்கிறோம், "எதுவரினும் சரி. நான் உபவாசம் இருப்பேன்; சனிக்கிழமை விரதம் இருப்பேன்; சாப்பிடப் போவதில்லை" என்ற வைராக்யம். பெண்களிடம் உயர் ஒழுக்கத்தில் இருக்கும் இந்த வைராக்யத்தைத் தான் கற்பு என்று சொல்கிறோம். கற்புக்கு மாறாகப் பெண்கள் வேறெதையும் நினைத்துக்கூடப் பார்க்க மாட்டார்கள். வைரம் பாய்ந்த மரத்தை எதுவும் எளிதில் வெட்ட முடியாது.

மனத்தில் வைராக்யம் எப்படி ஏற்படுகிறது? "இது தான் கடைசி உண்மை. இதைக் கடைபிடிக்க வேண்டும், எதுவரினும்" என்று மனிதன் தீர்மானிக் கிறானே, அப்போது!

மகாத்மா காந்தியின் மனைவி கஸ்தூரிபா காந்திக்கு உடல்நிலை சரியில்லை; மிகப் பலவீனமாக இருக்கிறார். 'கோழி சூப் சாப்பிட்டு உடம்பை பலப்படுத்த வேண்டும்' என்று மருத்துவர் சொல் கிறார். காந்திஜியோ, அவரோ சைவம். எனினும் "உடல் நிலை தேற சிக்கன் சூப் சாப்பிடுகிறாயா?" என்று காந்திஜி தன் மனைவியைக் கேட்கிறார். "வேண்டாம். இறந்தாலும் சரி" என்கிறார் கஸ்தூரிபா.

டாக்டருக்குக் கோபம். அசாத்திய கோபம். "நான் சொல்வதைக் கேட்காவிட்டால் இங்கிருந்து வெளியேறுங்கள்" என்று மருத்துவமனையை விட்டு வெளியேறச் சொல்கிறார். மகாத்மா காந்தி தன் மனைவியை அழைத்துக் கொண்டு வெளியேறுகிறார். அது தான் நம்பிக்கை தரும் வைராக்யம்.

வாழ்வின் சாதனைகள் - உயர்நிலைகள் - ஏதோ வாழைப்பழம் சாப்பிடுவது போல எளிதாக நடந்து

விடுவதில்லை. கஷ்ட நஷ்டங்கள் இருக்கின்றன. இதை மீறுவேன் என்கிற மனத்துணிவும் வைராக்யமும் நமக்கு வேண்டும்.

'இதற்கு எளிய வழி என்ன?' என்ற கேள்வி நம்முள் எழுகிறது. இதற்கான பதில், 'மன அமைதியை ஒரு பழக்கமாக்குங்கள்' என்பதுதான். இதை இப்படி சொல்லிவிட்டேனே தவிர இது கடினமான பாதை தான்.

8

தன்னை அறியும் அறிவு

அமெரிக்காவில் நிகழ்ந்த ஒரு சம்பவம். இருபத்தி எட்டு வயதுள்ள ஒரு பெண்மணி. அவருக்கு மூன்று குழந்தைகள். 6 வயது 4 வயது 2 வயது என்ற இளங் குழந்தைகள். கணவனோ இறந்து விட்டார். அவளுக்கு உடல்நிலை சரியில்லை என்று டாக்டரிடம் போகிறார். எல்லாவித சோதனைகளும் செய்தபின் மருத்துவர் சொல்கிறார், "அம்மா! உங்களுக்குப் புற்று நோய் இருக்கிறது. அதுவும் முற்றிய நிலையில். இன்னும் இரண்டு மூன்று மாதம் தான் நீங்கள் இருப்பீர்கள்" என்கிறார்.

அந்தப் பெண்மணிக்கும் தனக்கு இப்படி ஒரு நோய் இருப்பது தெரியும். இருந்தாலும் அவர் சொன்னதை அந்தப் பெண்மணி ஏற்றுக்கொள்ள வில்லை. "என்ன ஐயா இது? நீங்கள் சொல்லி விட்டீர்கள் என்று நான் இரண்டு மாதத்தில் செத்துப் போக முடியுமா என்ன? எனக்குப் பொறுப்பிருக்கிறது. மூன்று குழந்தைகள். அவற்றையெல்லாம் சரியான இடத்தில் ஒப்படைத்து விட்டுத்தான் சாக முடியும்"

என்கிறார். டாக்டர் பதில் ஒன்றும் சொல்லவில்லை. "நீங்கள் நிறைய நாள் இருக்க வேண்டும் என்றுதான் நானும் விரும்புகிறேன்!" என்கிறார்.

ஆனால், நடந்தது என்ன? அந்தப் பெண்மணி அதற்குப்பின் மூன்றாண்டுகள் வாழ்ந்தாள். சரியான, நல்ல இடங்களில் தன் குழந்தைகளை ஒப்படைத்தாள். அதற்குப் பிறகுதான் காலமானார்.

மனித மனம் என்ன எதிர்பார்க்கிறதோ, என்ன தீர்மானிக்கிறதோ அதைச் செய்து முடிக்கும் வலிமை நமது எண்ணங்களுக்கு இருக்கிறது. மனித மனம் அவ்வளவு ஆற்றல் கொண்டது.

இந்தப் பிரபஞ்சத்திலுள்ள அனைத்துமே ஏதோ ஒரு, ஒரே ஒரு மூலப்பொருளிலிருந்துதான் உருவாகி இருக்க வேண்டும். அப்படி அது உருவானபோது, அதற்கு முன் இந்த பிரபஞ்சத்தில் என்ன நிலவி இருக்க வேண்டும்? பேரமைதி நிலை! எங்கும் மோனம்! எங்கும் சாந்தம்!

இதைத் தான் நம் ஞானிகள் கூறுகிறார்கள் "இந்தப் பிரபஞ்சம் ஒரே ஒரு மூலத்திலிருந்து அமைதி யிலும் சாந்தத்திலும் உருவாக்கப்பட்டது" என்கி றார்கள்.

இந்த பிரபஞ்சத்தைப் படைத்தது ஒரு மூலம்; ஒரு மாபெரும் சக்தி அல்லது ஆண்டவன், கடவுள், இறைவன் என்று எந்தப் பெயராலும் அதை அழைக்க லாம்.

இன்று நாம் வாழும் பூமியும் அது சுற்றிக் கொண்டிருக்கும் சூரியனும் அதைச் சுற்றி இருக்கும் கோளங்களும், இந்த மூலம் என்ற இறைவனிடமிருந்து

— ஒரு மாபெரும் சக்தியிடமிருந்துதான் பிறந்தன. போகிற வழியில் ஒரு நல்ல செய்தி! இதிலிருந்து நாம் என்ன தெரிந்து கொள்கிறோம்?

ஏதாவது நாம் படைக்க, உருவாக்க நம் வாழ்வில் ஒன்றைச் சாதிக்க நாம் விரும்புவோமானால் அதை அமைதியிலும் சாந்தத்திலும் தான் உருவாக்க முடியும்; அப்படி சாந்தத்திலும் அமைதியிலும் தான் நாம் அதை உருவாக்க வேண்டும் என்பதுதான் இந்த முக்கியமான விஷயம்; முக்கியமான சாதனையின் வழிகாட்டி அமைதியான மனம்; சாந்தமான அணுகு முறை.

இவ்வுலகில் உள்ள எல்லாமே ஒரு மூலப் பொருளான இறை சக்தியினால் படைக்கப்பட்டிருக் கிறது என்றால், அந்த ஒவ்வொன்றிலும், கல், மண், மலை, ஆற்றுவெள்ளம், ஆகாயம் என்ற எல்லா சடப் பொருள்களிலும் அதன் அடுத்த படைப்பான தாவரங்களிலும் மிருகங்களிலும், மனிதனிலும் - இவை எல்லாவற்றிலுமே அந்த இறை அம்சம் - அதன் ஒரு சிறு பகுதி - இயல்பாக இருக்க வேண்டும்; இருக்கிறது. அதாவது இறை அம்சம் மனிதனிடம் மட்டுமல்ல; எல்லாவற்றிலும் இருக்கிறது.

அடுத்து ஒரு தெளிவு: பௌதிக விஞ்ஞானி டேவிட் பாம் என்பவர் கண்டு பிடித்தது என்ன வெனில்: "இவ்வுலகிலுள்ள எல்லாப் பொருட்களும் உயிர்களும், உயிரற்ற சடப் பொருட்களும் எல்லாம் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டிருக்கின்றன. ஒன்றுக்கு ஒன்று பரஸ்பர உதவி செய்யும்

பணிக்காகவே படைக்கப்பட்டிருக்கின்றன அந்தப் பணியை அவை செய்து வருகின்றன" என்பதுதான்.

இவை எல்லாவற்றிலுமே இறை அம்சம், இறை சக்தி இருப்பதால் - எல்லாவற்றிற்கும், சடம் உட்பட அவற்றிற்கு அறிவும் உணர்வும் இருப்பதனால் நாம் அவற்றைத் துணைக்கு அழைக்க முடியும்.

வாழ்க்கையில் தவறுகள், விரும்பாத விளைவுகள் ஏற்படும்போதும், நாம் கஷ்டத்தில் இறங்கிக் கொண்டிருக்கிறோம் என்று புரியும் போதும், அல்லது ஒரு காரியத்தைச் செய்ய துவங்கும்போதே நாம் கடவுளை - இறை அம்சத்தை - ஆன்மாவை துணைக் கழைத்து வழிகாட்டுமாறு கேட்டுக்கொள்ள முடியும்.

அப்புறம் என்ன? வாழ்வே மகிழ்ச்சி, வாழ்வே சந்தோஷம், வாழ்வே ஆனந்தம் தான்! ஏதோ ஒன்று நம்மைச் சரியாக வழிநடத்திச் செல்கிறது.

ஒரு சரியான வழிகாட்டி, ஆசிரியர் நம்முடன் இருந்து "இப்படிச் செய்! இப்படிச் செய்யாதே!" என்று வழிகாட்டும் போது, நாம் அவர் காட்டும் சரியான பாதையில் நடக்கிறோமே! பிறகு ஏன் கவலை?

அதன்பின் வாழ்க்கை முழுதும் ஆனந்தம்தான். இதை ஏன் மக்கள், படித்தவர்கள் புரிந்துகொள்ள வில்லை; உபயோகிக்கவில்லை?

இப்படிப்பட்ட இறை அம்சம் நம்முள் உடலின் எல்லா செல்களிலும், குறிப்பாக உணர்வாக, அறிவாக, ஜீவன் எனப்படும் நம்முள் நம் இதயப் பகுதியில் இருக்கிறது என்பதை நாம் அறியாததுதான். அறிந்தவர் களும் "இறை அம்சம் நம்முள் இருக்கிறது" என்பதை

நம்பாதது தான்! அதை அடையும் வழிமுறையைக் காணாததற்கு காரணம்.

அதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதை எல்லாம் இந்த நூலில் பார்க்கலாம்.

நான் என்ற இந்த உடல், உள்ளம், வயிறு மற்றும் மூளை, இதயம் என்ற பலவும் வேலை செய்கின்றன. நம் வாழ்க்கை ஓடுகிறது இதன்படி. எல்லோரும் வாழ்ந்தது போல நாமும் வாழ்ந்து விட்டுப் போக வேண்டியதுதான் என்று உலகம் எண்ணிக்கொண்டு வாழ்கிறது. நடை போடுகிறது. ஆனால் அன்றாட வாழ்வில் நாம் அடிக்கடி சந்திப்பது பிரச்சினை, ஏமாற்றம், துன்பம், துயரம், கஷ்ட நஷ்டங்கள், நிம்மதி யற்ற வாழ்க்கை. ஏன் இப்படி...? அறியாமைதான்!

இன்றைய மனிதன் விஞ்ஞானம் என்ற பெயரிலும் சரித்திரம் எனற பெயரிலும் மற்றும் பல்வேறு துறைகளைப் பற்றியும் பூகோளம், கணக்கு, நிர்வாகம், சுகாதாரம், கல்வி என்றும், விமானம், நீர்மூழ்கிக்கப்பல், சந்திரமண்டலப் பயணம் என்றும் என்னென்னவோ படிக்கிறோம், கற்றுக் கொள் கிறோம். ஆனால் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்! நாம் யார் என்று தெரிந்து கொண்டிருக்கிறோமா? நம்முள் ஒரு கடவுளே உள்ளே நம்மோடு குடியிருக் கிறார் என்பதையும், அழைத்தால் அவர் உதவ, வழிகாட்ட தயாராயிருக்கிறார் என்பதையும் தெரிந்து வாழ்க்கை நடத்துகிறோமா?

கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். அதுதான் **தன்னை அறியும் அறிவு.**

நான் ஒரு நாள் காஞ்சி மகா சுவாமிகள் சந்திர சேகரேந்திர சரஸ்வதி அவர்களைப் பார்க்க, ஆசி பெற, காஞ்சி மடத்திற்குச் சென்றிருந்தேன். அதுவரை நான் அவரைச் சந்தித்தது இல்லை. காமாட்சி அம்மன் கோயில் பிரகாரத்தில் பெரியவர் அமர்ந்திருந்தார். ஒரு கையில் காவித்துணி கட்டிய தண்டம் (கழி). வலது கையினால் அவருக்கு அருகில் இருந்த மலர்களை எடுத்து தன் தலையில் போட்டுக் கொண்டிருந்தார்.

நான் இருபது வயதுள்ள இளைஞன். 1940–50 வருடங்களில் திராவிடக்கழகம், ஈரோட்டுப் பெரியார், அறிஞர் அண்ணாதுரை அவருக்குக்கீழ் படித்த ஒரு இளைஞர் பட்டாளம். அப்போது நாடு முற்றிலுமே அவர்களது அலை. மூடநம்பிக்கைகளுக்கு எதிரான கூட்டங்கள்; பிராமண எதிர்ப்பு; இவற்றின் குரல் கிராமங்களில் கூட எதிரொலித்தன. இவர்களது இளைஞர் படையில் நல்ல பேச்சாளர்கள்.

நானும் அதை அதிகம் கேட்டவன். இந்தப் பின்புலத்தில் காஞ்சி பெரியவர் தன் தலையிலேயே பூவைப் போட்டுக் கொண்டு அமர்ந்திருப்பதைப் பார்த்த, என்னுள் ஓடிய முதல் எண்ணம்: “என்ன இது? பூவை சாமிக்குத்தான் சாத்துவோம்! என்ன இந்த மனிதர் பூக்களைத் தன் தலையிலேயே போட்டுக் கொண்டு அமர்ந்திருக்கிறாரே... என்ன இவர் தன்னையே கடவுள் என்று எண்ணிக் கொண்டிருக் கிறாரா?” என்ற எண்ணங்கள், மனதில். இந்த எண்ணங்களுடனேயே வீடு திரும்பினேன். இது என்னைப் பெரிதும் உறுத்திக் கொண்டிருந்தது.

காலம் ஓடிக் கொண்டிருந்தது. நான் மேல் படிப்புப் படித்தேன். அத்துடன் எங்கள் வீட்டிலோ என் தந்தை காலையில் ஐந்து மணிக்கே எழுந்து உட்கார்ந்து கொண்டு தேவாரப் பாடல்களைப் பாடிக் கொண்டிருப்பார்.

ஒருநாள் திருமூலர் திருமந்திரப் பாடல்கள் கிடைத்தன. அந்தப் பாடல்:

"தன்னை அறிந்திடில் தனக்கு ஒரு கேடில்லை!
தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்!
தன்னை அறியும் அறிவை அறிந்த பின்
தன்னை அர்ச்சிக்கத் தான் இருந்தானே!"

என்ற திருமூலரின் பாடலைப் படித்தேன்; அதைத் திரும்பத் திரும்ப படித்தேன். என்ன சொல்கிறார் திருமூலர்? திடீரென்று ஒரு தெளிவு; காஞ்சிப் பெரியவரின் நினைவு.

இந்த மனிதன் இருக்கிறானே அவன் எத்தனையோ நூல்களைப் படிக்கிறான். ஆனால் தான் யார் என்பதைப் பற்றி அறிந்தவன் இல்லை.

"தான் யார், தனக்குள்ளே யார் என்பதை அறிந்து கொண்டான். ஆனால், தனக்குள் இருக்கும் ஆன்மா என்ற கடவுள் தன்மையை உணர்ந்தவன் ஆனால்தானே தன்னுள் இருக்கும் கடவுளை அறிவான்; தானே தன்னை அர்ச்சிக்கத் துவங்கு வான்." என்று பொருள்படப் பாடியிருக்கிறார். எனக்குள் பொறி தட்டியது. 'காஞ்சிப் பெரியவர் தனக்குள் இருக்கும் இறை அம்சமான ஆன்மாவைப் பூஜை செய்து கொண்டிருக்கிறார். ஆகவேதான் தன்

தலையில் பூவைப் போட்டுக் கொண்டு பூஜை செய்கிறார்' என்பதைப் புரிந்து கொண்டேன்.

அடுத்தமுறை அமெரிக்காவிலிருந்து கல்லூரிப் பேராசிரியர் குழு ஒன்றை அழைத்துக் கொண்டு இந்திய குடும்ப கலாசாரப் பண்பாடுகளைப் பற்றி அவர்கள் அறிந்துகொள்ள அழைத்து வந்தேன். அவர்களை எல்லாம் அழைத்துக் கொண்டு காஞ்சிப் பெரியவரைப் பார்த்தேன்.

நான் விடைபெற்றுக் கொண்டு கிளம்பியபோது காஞ்சிப் பெரியவருக்கு உதவியாகக் காரியம் பார்த்து வந்த எங்கள் ஊர்க்காரரர் திருவாளர் நீலகண்ட அய்யர் என்னைப் பார்த்து மகிழ்ந்து, "மாலையில் வாருங்களேன் பெரியவரிடம் எல்லாக் கேள்விகளும் சந்தேகங்களும் கேட்கலாம்." என்றார்.

நான் அடக்கமாகச் சிரித்துக் கொண்டே "என்னிடம் கேள்வி ஒன்றுமில்லை!" என்றேன். என்னுள் அப்படி ஒரு உணர்வு! மனநிறைவு ஏற்பட்ட உணர்வு.

இதன்பின் இந்த "தன்னை அறியும் அறிவு" என்ற மூன்று வார்த்தைகளும் என்னுள் இறுக உறைந்து விட்டன.

வேதியல் (ரசாயனப்) பொருட்கள் பற்றிய அறிவிலும் ஆராய்ச்சியிலும் இருந்த நான், மனிதனின் மனம் எண்ணும் எண்ணங்கள் பற்றியும் மனத்தின் ஆற்றல் பற்றியும், குறிப்பாக புதிய புதிய பொருட்களை ஒரு விஞ்ஞானி கண்டுபிடிக்க எப்படி மனம் உதவுகிறது என்பதைப் பற்றியும் படித்தேன். ஆராய்ந்

தேன். அதுதான் ஒரு விஞ்ஞானியாக வாழ்வைத் துவங்கிய எனக்குத் தேவையாக இருந்தது.

கண்டு பிடிப்புக்களின் சூட்சுமத்தை அறிய, மன ஆற்றலைப் பற்றி, மனித மனத்தின் சிந்தனையைப் பற்றி பஞ்சபூதங்கள் பற்றி, பிரபஞ்ச இயக்கத்தைப் பற்றி... நண்பர்களே இந்தச் சிறிய நமது மனத்திற்குள் தான் எவ்வளவு பெரிய உலகம், எவ்வளவு பெரிய பிரபஞ்சம் எல்லாம், பிரபஞ்சத்தை இயக்கும் மாபெரும் சக்தி எல்லாம் அடங்கிக் கிடக்கிறது என்பதை அறிந்து அதிசயப்பட்டேன்.

விஞ்ஞானிகளின் வாழ்க்கை வரலாற்றைப் படிக்க ஆரம்பித்தேன். மேனாட்டு விஞ்ஞானிகள் எவ்வித ஒளிவு மறைவும் இல்லாமல் "நான் எப்படிக் கண்டுபிடித்தேன்" என்பதைத் தெளிவாகத் தங்கள் வரலாற்றில் எழுதி இருக்கிறார்கள்.

அதிலே திரும்பத் திரும்ப எல்லோர் வாழ்விலும் வந்து உதவிய உண்மைகள் மூன்று இருந்தன.

அவர்கள் எல்லோரிடமும் **கற்பனை** இருந்தது. கற்பனை என்பது இன்று இல்லை. 'ஏன் இப்படி ஒன்று இருக்கக்கூடாது? செய்யக் கூடாது?' என்று இன்று இல்லாததைப் பற்றி விஞ்ஞானி கற்பனை செய்கிறான்; சிந்திக்கிறான். தன் முன் இருக்கும் ஒரு பிரச்சினை பற்றிப் பல்வேறு கோணங்களில் சிந்திக் கிறான். கற்பனை செய்கிறான். நாளை அதையே உருவாக்குகிறான். கண்டுபிடிப்புக்கு கற்பனை மிக அவசியம்.

இரண்டாவதாக: **உள் உணர்வு.** தன் முன் இருக்கும், தான் எடுத்துக் கொண்ட பிரச்சினை

குறித்து அதே நினைவாக அதனுடன் ஒன்றிப் போய் விடுகிறான். இப்போது இது பற்றி மனவியலிலே என்ன கண்டு பிடித்திருக்கிறார்கள் என்றால் "மனிதன் எப்போது ஒரு பொருளைப் பற்றி, அல்லது ஒரு பிரச்சினையைப் பற்றி அதே நினைவாகச் சிந்தித்துக் கொண்டிருக்கிறானோ, அப்போது அந்தப் பொருள் தன்னைப் பூரணமாக வெளிப்படுத்திக் கொள்ளும்" என்பதுதான். எந்தப் பிரச்சினை பற்றி சிந்திக்கிறார் களோ அதனுடன் ஒன்றி விடுகிறார்கள். இதை ஆங்கிலத்தில் மன ஒருமைப்பாடு (Concentration) என்பார்கள். மனத்தில் வேறு எந்த எண்ணமும் இல்லாமல் அதே நினைவாக அமைதியுடன் இருக்கும் போது எதுவும் செய்யாமல் இருக்கும்போது சட் டென்று நமக்கு ஒரு எண்ணம் மனதில் பளிச்சென்று தோன்றும். இதை மிகத் தெளிவாக காஞ்சிப் பெரியவர் மகா சுவாமிகள் தன் தெய்வத்தின் குரல் என்ற நூலில் கூறி இருக்கிறார்.

ஒரு குருவிடம் சென்று அவரது சீடன் கேட்கிறான்: "குருவே! சம்சார வாழ்க்கையின் சாரம் என்ன? அதன் அர்த்தம் என்ன?"

குரு சொல்கிறார் "அதே தான்!" என்று.

"என்ன சுவாமி! சம்சார வாழ்க்கையின் சாரம் - அர்த்தம் என்ன என்று கேள்வி கேட்டேன். 'நீங்கள் அதே தான்' என்று பதில் சொல்கிறீர்களே" என்று மீண்டும் கேட்கிறான்.

குருவும் அதே பதிலை மறுபடியும் அளிக்கிறார். சிறிது நேரத்தில் சீடன் பொறுமை இழக்கிறான் என்பதை அறிந்து கொண்ட குரு சொல்கிறார், "நீ

கேள்வி கேட்டாய் அல்லவா? அதைக் கேட்டுக் கொண்டே இரு. பதில் கிடைக்கும்" என்கிறார்.

இதையே தெளிவாக விளக்குகிறார் அரவிந்தர். "உள் உணர்வு" என்பதைப் பற்றி பேசும் போது 'மனித மனம் 'நினைவு மனம்' என்பதாகவும், 'ஆழ்மனம்' என்ற நிலையில் வாய்பாடு போன்று திரும்பத் திரும்பப் படித்ததை, அனுபவித்ததை நினைவு வைத்துக் கொள்ளும் மனத்தளம் ஒன்று இருப்ப தாகவும், இன்னும் ஆழமாகச் சென்றோமானால் மனத்தின் ஆழமான பகுதியில் உள் உணர்வு எழுகின்றது. இதுதான் உள் உணர்வு தோன்றும் மிக மிக ஆழமான மனத்தளம்.' என்று எழுதுகிறார் ஸ்ரீ அரவிந்தர்.

இன்னும் கொஞ்சம் விரிவாக எழுதப்போனால் இன்னும் அதிசயமான சம்பவங்களையும் இன்னும் அதிசயமான மனத்தின் ஆற்றலையும், நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்ற பஞ்ச பூதங்களுடனும் நாம் உறவு கொள்ளலாம் என்பதிலிருந்து இறைவனது தரிசனம் வரை நாம் செல்ல முடியும், அவர் உறவையும் கருணையும் பெற முடியும் என்பனவற்றை எல்லாம் எளிதாக நாம் அறிய முடியும். உற்சாகமாக நடைபோடுங்கள் உள்ளே!

9

உள் உணர்வு

நமக்குள்ளே நம்மைச் சரியான வழி நடத்தும் ஒரு மாபெரும் சக்தி உள்ளது. அதைப் பலரும் உணர்வதில்லை. இதை உணர்வது இயற்கையிலேயே சிலருக்குத்தான் வாய்க்கும். இதை பார்க்கும் சிலர் இது "இயற்கை அருளிய வரம்" என்று எண்ணி அத்துடன் விட்டு விடுகிறார்கள். அதைத் தெரிந்து கொள்வோம், தெரிந்துகொள்ள வேண்டும் என்கிற எண்ணத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து விடுகிறார்கள்.

ஆனால் இன்று அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் உள்ளுணர்வை வளர்ப்பது எப்படி என்பதை ஒரு பாடமாகச் சொல்லிக் கொடுக்கிறார்கள்! சுமார் இருபதாண்டுகளுக்கு முன் அமெரிக்காவில் டூன் பல்கலைக்கழகம் மற்றொரு பல்கலைக்கழகத்துடன் இணைந்து, தொழிலில் அபரிமிதமாக வெற்றி பெற்ற சாதனையாளர்களை எல்லாம் சந்தித்து "உங்கள் வெற்றிக்கு என்ன காரணம்?" என்று கேட்டு ஒரு ஆய்வை நடத்தினார்கள்.

அதில் 95 சதம் பேர் "என்னுடைய வெற்றிக்குக் காரணம் என் உள்ளுணர்வு தந்த யோசனையை, எண்ணத்தை நான் செயல்படுத்தியதுதான்" என்றார்கள்.

மனித வாழ்வில் ஏராளமான பிரச்சினைகள் நம்மை தினந்தோறும் மோதுகின்றன. நாம் வாழ்வில் நமக்கு நிகழும் சோதனைகளையும், நம் வாழ்வில் ஏற்படும் சம்பவங்களையும் யோசித்துப் பார்த்தோமானால், பல சமயம் நமக்குத் தோல்வியும் ஏமாற்றமும் துன்பங்களும் தான் வருகின்றன என்பதைப் பார்க்கிறோம்.

வாழ்வில் ஏற்படும் தோல்விகளுக்கும் கஷ்டங்களுக்கும் காரணம் நாம் எடுத்த முடிவுதான் என்பது புரியவரும்.

நாம் சரியான முடிவெடுக்கத் தெரிந்து கொள்வோமானால்... அல்லது நமக்கு யாராவது 'இதுதான் சரியான பாதை. இப்படிச் செய்' என்று சொல்லிக் கொடுப்பார்களானால்... பிரச்சினைகளைப் பற்றி கவலைப்பட மாட்டோம்! வாழ்க்கை சரியான திசையில் சந்தோஷமாகப் போகும்! இதற்கு உதவுவதுதான் உள் உணர்வு.

இப்படி ஒன்று நமக்கு உதவ இருக்கிறது என்றால் ஏன் அதை அமெரிக்காவில் பாடமாக வைக்க மாட்டார்கள்? நாம் எதையும் எண்ணி ஏங்க வேண்டாம். படித்துத் தெரிந்து கொண்டால் போதும். தெரிந்துகொள்ள முடியும், நம்புங்கள்!

"என் உள் உணர்வை அறிந்துகொள்ள, வளர்க்க நான் முயற்சி செய்யப் போகிறேன்" என்று

ஆர்வத்துடன் சங்கல்பம் செய்து கொண்டால் போதும். சங்கல்பம் என்பது நமக்கு நாமே "இன்னது செய்யப் போகிறேன்" என்று ஒரு காரியம் செய்யுமுன்னே, சொல்லிக் கொள்வது. எதை நம் மனதிற்குச் சொல்கிறோமோ அதை மனம் நம்புகிறது. அதைச் செயல்படுத்த, நாம் விரும்பும் காரியம் நிறைவேற உதவுகிறது.

நம் மனத்தில், பெரும் நீரூற்றுப் போல, பல்வேறு எண்ணங்கள் சதா எழுந்தவண்ணம் இருக்கின்றன. அவற்றை எல்லாம் ஒரு கணத்தில் ஆராய்ந்து - பிரித்து - எது நமக்கு உபயோகப்படுமோ - அதை எடுத்து நமக்குச் சொல்வதைத்தான் 'உள்-உணர்வு' என்கிறோம்.

ஒரு பிரச்சினை என்று வரும்போது மனம் உடனடியாக அதன் காரணத்தை ஆராய்கிறது. யாரை யாவது சந்தித்தோமானால் உடனே அவர்களை எடை போடுகிறது. நடை உடை பாவனைகளி லிருந்தும் குறிப்பாக முகத்திலிருந்தும் எப்படிப்பட்ட மனிதர் இவர் என்று, நமது மனம் உடனடியாக அவர்களைப் பற்றி, அவர்களுடைய உண்மையான நோக்கத்தைப் பற்றிய செய்தியைத் தெரிவிக்கிறது. அவர்கள் மனத்திலே எழும் உணர்வை ஒரு கால் விநாடி நேரத்தில் நமது முகம் முதலில் தெரிவிக்கிறது. அதற்குமேல் அந்த மனிதனுடைய புத்திசாலித்தனம் அல்லது குணம் அல்லது வெளிவரும் சொற்கள் வேறு எதையாவது மறைத்து சொல்லும்போது, முகம் காட்டும் மாற்றத்தை உன்னிப்பாக இருந்து பார்க்கப் பழக்கப்படுத்தினோமானால் நாம் பிறரை உண்மை யாகப் புரிந்துகொள்ள முடியும்.

காரண காரியங்களை (Cause and Effect) ஆராயும் மனம்தான் - நினைவு மனம் (Conscious Mind) என்பது. அன்றாட வாழ்வில் நாம் அதிகம் உபயோகிக்கும் மனம்தான் இது. இதைக் கடந்து ஆழ்ந்து போனால் அங்கே 'ஆழ் மனம்' என்ற நிலை இருக்கிறது. வாய்பாடு போன்ற திரும்பத் திரும்பச் சொல்லும் வார்த்தைகள் அல்லது திரும்பத் திரும்பச் சொல்லும் மந்திரங்கள் எல்லாம் இருப்பது இந்த ஆழ்மனத்தில்தான். இவை எப்போதும் நமக்குத் தேவைப்படும்போது வந்து உதவுகிறது.

"இந்த ஆழ்மனத்தின் ஆழத்தையும் கடந்து இன்னும் அதிக ஆழமாகச் செல்லுங்கள்" என்கிறார் ஸ்ரீ அரவிந்தர். அப்படி அதிக ஆழமாகப் போகும் போது அதே நினைவாக இருக்கிறோம்; அங்கே வேறு ஒன்றும் இல்லை. ஒரே வெற்றிடம்தான். அங்கே நமது பிரச்சனைக்கு ஒரு தீர்வைக் கொடுக்கும் எண்ணம் தோன்றுகிறது. இதைத்தான் உள் உணர்வு என்கிறோம்.

உள் உணர்வின் வலிமையை இன்னும் அழுத்திச் சொல்ல வேண்டுமானால், விஞ்ஞானி ஐன்ஸ் டைனைப் பார்த்து "எப்படி உங்கள் கண்டு பிடிப்புக்கள் எல்லாம் நிகழ்கின்றன?" என்று கேட் டார்கள். நான் இரண்டு பெரிய கண்டுபிடிப்புக் களைக் கண்டுபிடித்தேன். அந்த இரண்டும் என் உள் உணர்வு தந்தவை" என்றார் அவர்.

மீண்டும் சொல்லிப் பாருங்கள் அந்த வாசகத்தை!

"என் உள் உணர்வு தந்தவை" என்கிறார். "உள்ளே ஒரு உணர்வு — ஒரு சக்தி இருக்கிறது. அது தந்தது" என்கிறார்.

ஏதோ ஒன்று ஒரு எண்ணத்தை நம் மனத்தில் கொண்டு வந்து வைக்கிறது. இது எங்கிருந்தோ வருகிறது.

நாம் வாழ்வில் தோற்றுப் போவோம் என்ற பயத்துடனும், இது நல்ல விதமாக நடக்குமா என்ற சந்தேகத்துடனும் நாம் இருக்கும்போது நம் எதிர் பார்ப்புக்கு எதிராக அது நல்ல விதமாக நடக்கும் போது, நம்மையும் அறியாமல் நாம் "தெய்வாதீனமாக நடந்தது." என்கிறோம். கவியரசு கண்ணதாசனைக் கேட்டீர்களானால் "நமக்கும் மேலே ஒருவனடா! அவன் நாலும் தெரிந்த தலைவனடா!" என்பார். "**அவன்** செய்யும் வேலை" என்று.

நாம் வாழும் உலகம் காரணகாரிய உலகம் - ஒரு காரியம் நல்லதோ கெட்டதோ, செய்கிறோம் என்றால் அதன் விளைவை - நல்லதையோ கெட்டதையோ நாம் அனுபவிக்க வேண்டும்.

ஆனால் சில சமயம் வாழ்வில் காரண காரியத்தைக் கடந்தும் சில காரியங்கள் நிகழ்கின்றன.

நான் இரவு ஒன்பது மணி ரயிலைப் பிடித்தால் தான் கோவைக்குப் போக முடியும். நானோ 9.45 மணிக்குத்தான் சென்ட்ரல் ரயில்வே நிலையத்தை அடைய முடிகிறது. உள்ளத்திலே தவிப்பு. "ரயில் போயிருக்குமே! என்ன செய்யப் போகிறோம்!" என்று. ரயில் நிலையத்திற்குள் நுழைகிறேன். ரயில்வே அறிவிப்பு ஒலிக்கிறது. "இன்று ஒன்பது மணிக்கு

புறப்பட வேண்டிய கோவை எக்ஸ்பிரஸ் பத்து மணிக்குத் தாமதமாகப் புறப்படும்".

அது தாமதமாகக் கிளம்புவதற்கு நான் என்ன செய்தேன்? இது என்னை மீறிய செயல்; எனக்கு உதவும் செயல். காரண காரியத்தைக் கடந்த தெய்வாதீனமான செயல்.

இதை நம்புவது கஷ்டமாக இருக்கும், மேலே சொல்ல இருப்பதைக் கேளுங்கள். டேவிட் பாம் என்ற லண்டன் பல்கலைக்கழக பௌதிக இயல் பேராசிரியர் சுமார் 45 ஆண்டுகளுக்கு முன் 'இந்தப் பிரபஞ்சத்தில் உள்ள எல்லா பொருட்களும் - கல், மண், கடல், ஆகாயம் என்பனவும், தாவரங்களும், விலங்குகளும், மனிதர்களும் எல்லாம் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டிருக்கின்றன. (Inter connectedness) **ஒன்றுக்கொன்று பரஸ்பரம் உதவியாகப் படைக்கப் பட்டிருக்கின்றன; செயல்படுகின்றன**' என்ற மாபெரும் உண்மையைக் கண்டு பிடித்தார்.

இதன் அர்த்தம் என்ன என்றால் இப்பிரபஞ் சத்தில் உள்ள எல்லாவற்றுடனும் நமக்குத் தொடர்பு இருக்கிறது; நாம் அவற்றுடன் உறவு கொள்ள முடியும். அவற்றை அழைக்க முடியும் என்பதுதான். இறை சக்திகளான பஞ்சபூதங்கள் எனப்படும் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்ற எல்லாம் மனிதன் விரும்பி ஈடுபாட்டோடு மனம் ஒன்றி அழைத்தால் எதுவும் சாத்தியமாகும் என்கிற மாபெரும் உண்மையைத் தான் இது தெரிவிக்கிறது.

வெளியில் ஏற்படும் நிகழ்வுகளை நமது மனம் கிரகித்துக் கொள்கிறது. நாம் ஒரு பொருளுடன், ஒரு

பிரச்சினையுடன் சம்பந்தப்பட்டு அதே நினைவாக இருக்கும்போது அந்த மன எண்ணமானது மனித உடலில் உணர்வாக வெளிப்படுகிறது என்று அமெரிக்க மருத்துவர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். பல சோதனைகள் செய்து நிரூபித்திருக்கிறார்கள். செய்யப்போகும் காரியம் சரியானதாக, உள் (மன) உணர்வுக்குட்படாததாக அமையும்போது அது உடல் உணர்வாக மாறி, "ஏதோ சரியில்லை" என்ற எண்ணம் நம்முள் தோன்றி ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகிறது' என்கிறார்கள் மருத்துவ ஆய்வாளர்கள்.

ஒரு பெண்ணை அறுவை சிகிச்சைக்காக அழைத்துப் போனபோது, பாதி வழியில் அந்தப் பெண்ணைப் பார்த்து வழியோடு போய்க் கொண்டிருந்த ஒரு பெண் டாக்டர் சொன்னார்: 'அறுவை சிகிச்சை செய்யுமுன் அவள் இதயம் சரியாக இருக்கிறதா என்று பார்த்துவிட்டுச் செய்யுங்கள்' என்றாராம். எக்ஸ்ரே எடுத்துப் பார்த்ததில் இதயத்தில் ஒரு சிறிய கட்டி, புற்று நோயின் துவக்கம் இருந்ததைக் கண்டார்கள். இதயத்தில் அப்படி ஒரு கட்டி இருக்கும்போது மயக்க மருந்து கொடுத்து அறுவை சிகிச்சை மேற்கொண்டால் இதயம் தாங்காது. செயல்படுவது நின்று விடுமாம். நல்லவேளை அந்தப் பெண் காப்பாற்றப் பட்டாள்.

எப்படி வழியோடு போன அனுபவமிக்க பெண் டாக்டருக்கு இது தெரிந்தது. இப்படி ஒரு பிரச்சினையை அவர் சந்தித்திருப்பதால் இந்தப் பெண்ணைப் பார்த்தபோது 'இப்படி இருக்கலாம்' என்ற எண்ணம் ஏற்பட்டதாம்.

'மனம் ஒரு பிரச்சினை என்று வந்தவுடன் அது சம்பந்தமாக தான் படித்த, அனுபவித்த எல்லா விஷயங்களையும் ஆராய்கிறது. அதை உணர்வாக உடலில் மாற்றி உடல் உணர்வை ஏற்படுத்தி எச்சரிக்கிறது' என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்.

நம் உடலில் உள்ள ஒவ்வொரு செல்லிலும் இறை அம்சம், தெய்வீகப் பேருணர்வு இருக்கிறது. இதனுடன் தொடர்பு கொள்ள வேண்டும் என்ற முனைப்பை ஏற்படுத்திக்கொள்ளும்போது அது நமக்கும் எட்டு கிறது.

இதையே 2600 ஆண்டுகளுக்குமுன் புத்தர் கண்டுபிடித்து சொல்லி இருக்கிறார். புத்தமதத் துறவி பூகியான் என்பவர் பர்மாவின் காடுகளில் வசிப்பவர். ஒரு தியான முறையை எஸ்.என். கோயங்கா என்ற ஒரு மார்வாடி இந்தியருக்கு சொல்லிக் கொடுத்தார். கோயங்காவுக்கு இருந்த, எதற்கும் மசிந்து கொடுக்காத ஒற்றைத் தலைவலியைப் போக்கினார். அதுமட்டு மல்ல புத்தர் சொல்லிக் கொடுத்த தியான மார்க்கத்தையும் சொல்லிக் கொடுத்தார். இது எளிய தியான மார்க்கம்.

அவர் உங்களை நீங்கள் மூச்சு விடுவதையும் இழுப்பதையும் மிக கவனமாக அதையே உற்றுப் பார்க்கும்படி சொல்கிறார். வேறெதையும் செய்யா மல். அமைதியாக அதை மாத்திரம் மனம் கவனிக்கும் போது மனத்திற்குப் பூரணமான வேலை கொடுக்கப் பட்டுள்ளதால், மனத்திலிருந்து சகஜமாக எழும் எண்ணங்கள் எதுவும் எழாமல் ஒரு வெற்றிடம் உருவாகி விடுகிறது. அதே நிலையில் இருக்கும் போது

நமது கெட்ட அநுபவங்கள் பிரச்சினைகள் எல்லாம் ஆழ்மனதிலிருந்து மேலே மிதந்து வருகின்றன.

தியானம் செய்பவா அப்படி மனத்திலே எழும் எண்ணங்களை உற்றுப் பார்ப்பதன் மூலம் அந்தக் கெட்ட எண்ணங்கள் அழிந்துவிடுகின்றன.

இப்படிப்பட்ட கெட்ட எண்ணங்களும், அடுத்து அத்துடன் முற்பிறவியில் நாம் செய்த தவறுகளும் மிதந்து வருவதால் அவை அனைத்தும் தியானிப்பவர் அதை உற்றுப் பார்ப்பதன் மூலம் அழிக்கப்படுகிறது.

இதன்மூலம் தியானம் செய்யும் மனிதன் எந்த விதமான துன்பங்களும் துயரங்களும் ஏமாற்றங்களும் இல்லாத வாழ்வு நடத்த முடியும் என்பதை விபாசனா தியான முறை நிரூபித்துக் காட்டி இருக்கிறது.

ஒரு சம்பவம்

ஆறாவது அறிவு எனப்படும் உள் உணர்வு. முற்றிய காவல்துறை அதிகாரி ஜான் யாட்பரோ என்பவர். சிவப்பு விளக்கில் நிறுத்தாமல் காரை ஓட்டியதற்காக நிறுத்தியபோது காரில் இருந்து இறங்கிய மாணவன், தன் கைத்துப்பாக்கியை எடுத்தான். ஆறு அடி தூரத்தில் நிற்கிறார் காவல் துறை அதிகாரி. "எனக்குப் புரிந்தது அவன் சுட தயாராயிருக்கிறான் என்று. நான் பதிலுக்கு சுட்டிருக்க வேண்டும். என்ன காரணமோ நான் சுடவில்லை. நான் சுடாமல் இருந்தது சரியான காரியம். சிறிது நேரம் நான் அவனுடன் பேசியபோது, அவன் துப்பாக்கியைக் கீழே போட்டான், தவறு செய்ததை ஒப்புக்கொண்டான் அமைதியாக. தற்காப்புக்காக

சுட்டிருக்க வேண்டியது கடமை." என்றார் காவல் அதிகாரி.

அவரால் முகத்தை பார்த்து அனுமானிக்க முடிந்தது. மனத்தின் நுண்உணர்வுகள் எழுகின்றன. இது ஒரு கால் வினாடி தான் முகத்தில் தென்படுகிறது. ஆனால் அவனுடைய முகபாவனை அகன்று உண்மையான உணர்வுகளை வெளிப்படுத்துகின்றது. மறைக்க முயன்றாலும் பார்க்க முடியும். உள் உணர்வை மதியுங்கள் மற்றவை தவறேற்படுத்தக் கூடும்! இதுதான் பாடம்.

உள் உணர்வை முகம் காட்டிவிடும் என்பதைப் பார்த்தோம்.

ஜார்ஜ் கோராஸ் என்ற பெரிய ஐரோப்பியப் பணக்காரர் உள் உணர்வை உபயோகித்து ஸ்டாக் மார்க்கெட்டில் மிகுந்த பணக்காரர் ஆனார்.

அவரது முதுகில் ஒரு வலி ஏற்படுமாம். "உடலில் அப்படித் தோன்றும் உணர்வு, வியாபாரச் சந்தை நல்லதல்ல என்பதை உடல் தெரிவிக்கிறது. நான் என் பங்குகளை உடனே விற்றுவிடுவேன். மறுநாள் பங்கின் விலை இறங்கிவிடும் வேகமாக." என்கிறார் கோரஸ். "உடல் உணர்வின் எச்சரிக்கையால் எந்தவிதமான நஷ்டமும் ஏற்படுவதில்லை" என்று கூறுகிறார்.

உள் உணர்வு என்பது நமக்கு உள்ளிருக்கும் ஒரு மாபெரும் சக்தி. நம் வாழ்க்கை, பிரச்சினையின்றி துன்பங்களின்றி வாழப் பெரிதும் உதவும் மன ஆற்றல்.

இதை நாம் பயிற்சியின் மூலமும் தணியாத ஆர்வத்தின் மூலமும் பெறலாம்.

10

மனக்கதவுகளைத் திறக்கும் வழிகள்

எனது நண்பர் ஒருவர் - வட இந்தியர் - அமெரிக்காவில் தன் நண்பர் வீட்டில் தங்கி இருந்தார். அவர் ஒரு தொழிலதிபர். அவர் தங்கி இருந்த நாட்கள் இரண்டு மூன்று மாதம் என்று ஓடிக் கொண்டிருந்தது. இவர் எப்போதுமே அமைதியாக ஏதோ பொழுதைக் கழிக்க வந்தவர் போல உலவிக் கொண்டிருந்தார். நான் ஒருநாள் அந்த நண்பரைப் பார்த்துக் கேட்டேன். “நீங்கள் இவ்வளவு நாள் இங்கு தங்கி இருக்கிறீர்களே, அங்கே உள்ள உங்கள் தொழில் என்ன ஆகும்? எப்படி இதை எல்லாம் சமாளிக்கிறீர்கள்?”

அவர் சொன்னார் “நான் இதுவரை செய்து வந்த பழைய தொழில், அது பாட்டுக்கு ஓடிக்கொண்டிருக் கிறது. ஒரு புதிய துறையில் புதிய தொழிலைத் துவங்க உள்ளேன். அதுபற்றி இங்கு சிலரை சந்தித்தேன். நான் எப்போதும் அதைப்பற்றியே சிந்தித்துக் கொண்டிருப் பேன். ஒரு தெளிவு பிறந்தவுடன் - இனித் துவங்கலாம் என்று தீர்மானித்தவுடன் - நான் இந்தியா

போய்விடுவேன். இங்கே வந்தால்தான் நான் அமைதியாகச் சிந்திக்க முடிகிறது” என்றார்.

அமெரிக்காவில் இருக்கும் என் நண்பர் என்னிடம் தனியே கூறினார், “அவர் மகா புத்திசாலி. எல்லாவற்றையுமே மனத்தில் திட்டமிட்டு விடுவார். பின்பு எல்லாம் தானாக ஓடும்.”

“எப்படிப்பட்ட மனிதர்!” என்று நான் அவரை மனதில், எண்ணி யோசித்துக் கொண்டிருந்தேன். ‘இவ்வளவு திறமையுடன் எல்லோருமே நடந்து கொள்ள முடியுமென்றால் - எல்லோருமே இப்படி மனத்தை உபயோகிக்கக் கற்றுக்கொண்டு விட்டால்...’ என்ற எண்ணம் அழுத்தத்துடன் நெற்றி சுருக்கத் துடன் என் மனதிற்குள் ஓடிக் கொண்டிருந்தது.

அரவிந்தரைப் பற்றிப் படித்துக் கொண்டிருந் தேன். அரவிந்தர் வங்காளத்தில் பல பணிகளில் இருந்துவிட்டு, நாட்டின் சுதந்திரத்திற்காகப் பாடுபட வேண்டும் என்று இறங்கிவிட்டார். வங்காளத்தில் ‘புரட்சி இளைஞர் பேரணி’ என்ற அமைப்பின் தலைவராக இருந்தார். பிரிட்டிஷ் அரசாங்கம் சும்மா இருக்குமா? இவனை எப்படியாவது பிடித்து நிரந்தரமாக சிறைக்குள் போட வேண்டும் என்ற முடிவுக்கு வந்துவிட்டார்கள்; சிறையில் அடைத் தார்கள்.

அப்படிப்பட்ட போராட்ட வீரர். தன் வாழ்வில் ஒரு முடிவெடுத்து பிரெஞ்சு நாட்டினரின் ஆளுமையில் இருந்த பாண்டிச்சேரிக்கு வருகிறார்; ஆசிரமம் அமைத்துத் தங்கி இருக்கிறார்.

அப்போது வங்காளத்திலிருந்து வந்த அவருடைய நண்பர் ஒருவர் அரவிந்தரைப் பார்த்து கேட்கிறார்: "நாங்கள் எல்லோரும் அங்கே சுதந்திரத் திற்காக ரத்தம் சிந்துகிறோம்; செத்து மடிகிறார்கள் போராட்ட வீரர்கள். நீங்கள் இங்கே வந்து சும்மா உட்கார்ந்திருந்தால் எப்படி?"

சிறிது நேர அமைதிக்குப் பிறகு அரவிந்தர் சொல்கிறார் "நான் சும்மா உட்கார்ந்திருக்கிறேன் என்று ஏன் நீங்கள் நினைக்கிறீர்கள்?" என்று கேட்கிறார்.

ஒரு கணம் நீங்கள், ஸ்ரீ அரவிந்தர் சொன்ன அந்த வாக்கியத்தை மனதில் எண்ணி யோசித்துப் பாருங்கள்!

'அவர் தன் பாதுகாப்பிற்காக வந்தார்' என்று பலர் சொல்லக்கூடும். 'பாண்டிச்சேரியில் இருந்தால், பிரிட்டிஷாருக்கு எதிராக அதிகம் சுதந்திரப் போராட்டத்திற்காக செய்யலாம் என்று அரவிந்தர் எண்ணி இருக்கக்கூடும் என்று பலர் சொல்லலாம்.

ஆனால் உண்மைக் காரணம் அதுவல்ல.

இங்கே தான் வருகிறது மன ஆற்றல் பெரிதா? உடல் ஆற்றல் பெரிதா? என்பது. அதிகம் போவதற்கு முன் ஒரு கணம் சிந்திப்போம். மகாத்மா காந்தி இந்தியாவிற்குச் சுதந்திரம் பெற்றுத் தந்த முறை எதனால்? மனத்தில் எழுந்த ஒரு எண்ணத்தின் வலிமையிலா அல்லது போர்ப்படைகளைத் தயாரித்து, அந்நிய நாடுகளுடைய ராணுவப்படை உதவி பெற்று இந்தியாவுக்கு சுதந்திரம் வாங்கப்

பெற்றதா, என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நண்பர்களே அது மன ஆற்றல்தான். மன ஆற்றலுக்குத் தேவையாக உடல் ஆற்றல் இருந்து ஒத்துழைக்குமே தவிர உடல் ஆற்றலினால் மட்டும் இவ்வுலகில் அதிகம் சாதிக்க முடியாது. மன ஆற்றலை – "தார்மீக உண்மைகள் தரும் சக்தி" என்று காந்திஜி சொல்வார். அதே மன ஆற்றலைத் 'தவம்' என்று ஸ்ரீ அரவிந்தர் சொல்வார். 'உண்மைகளுக்கு சக்தி உண்டு. அதில் வைராக்கியம் சேரும்போது அது சாதனையாக மாறுகிறது' என்பது காந்திஜியின் பாதை.

தவத்தின் மூலம் – தியானத்தின் மூலம் உலகின் மாபெரும் சக்தியை உதவிக்கு அழைக்கலாம் என்பது அரவிந்தரின் அனுபவம்.

இனி கதைக்குச் செல்வோம். அரவிந்தர் வங்காளத்தில் ஏற்படுத்திய, பிரிட்டிஷ் அரசாங்கத் திற்கு எதிரான இயக்கத்தைக் கண்டு, பம்பாயிலிருந்த கோபாலகிருஷ்ண கோகலேயும் மற்றும் பலரும் அப்படித்தான் வெள்ளைக்காரர்களுக்கு எதிராக நாம் போராட வேண்டும், வங்காளம் தான் வழிகாட்டி' என்று சொன்னார்கள். அப்படி இருந்தது வங்கா ளத்தின் வீரம்.

இந்த நிலையில் இருந்த ஒரு புரட்சி இயக்கத் தலைவரான அரவிந்தரைச் சிறையில் அடைத்த போது, அரவிந்தர் கேட்டார்:– "ஓஆண்டவனே ! நான் என் தாய் நாட்டு மக்களின் சுதந்திரத்திற்காக – உரிமைக்காகப் போராடிக் கொண்டிருக்கிறேன். அது முடியும் வரை உன் பாதுகாப்பு இருக்கும் என்று நம்பிக்

கொண்டிருந்தேனே! ஏன் இப்படி குற்றம் சாட்டப் பட்டு இங்கே நிற்கிறேன்?" என்று கேட்கிறார்.

"காத்திருந்து பார்" என்று குரல் முதலில் கேட்கிறது. "சில நாட்களில் உனக்கு நான் வேறு ஒரு வேலை வைத்திருக்கிறேன். உன் பந்தங்களை எல்லாம் நீ அறுத்தெறிய இயலாத நிலையில், நானே தான் உன் பந்தங்களை அறுத்தெறிய உன்னை இங்கே கொண்டு வைத்திருக்கிறேன். நீ கற்க முடியாததைக் கற்றுக் கொள்வதற்கான தனிமைதான் இந்த சிறைவாசம்." என்கிற குரல் கேட்கிறது. அவர் கற்றுக்கொள்ள வேண்டியதற்காக பகவத் கீதை அவருக்கு கிடைக் கிறது.

அதன்பின் சிறையில் பல நல்ல சாதகமான சம்பவங்கள் ஒன்றன்பின் ஒன்றாக நிகழ்கின்றன. அரவிந்தர் விடுதலை செய்யப்படுகிறார். சிறையி லிருந்தபோது தனக்காக வாதிட வந்த சித்தரஞ்சன் தாஸ் என்ற பிரபல வக்கீல், தீர்ப்புக் கூறிய நீதிபதி, அந்த நீதிமன்றம் என்று எல்லாவற்றிலுமே கடவுளின் தரிசனத்தைக் காண்கிறார் ஸ்ரீஅரவிந்தர்.

'ஆன்மீக வளர்ச்சியின் மூலம் நீ உன் நாட்டுக்கு - நாட்டு சுதந்திரத்திற்கு அதிகம் செய்யலாம்' என்பது தான் மேலேயிருந்து வந்த குரல்.

பொருளைக் கடந்த ஒரு உலகம், இறந்த காலம், எதிர்காலம் என்று, காலத்தைக் கடந்த ஒரு நிலை இருக்கிறது. அதிலே நாளை நிகழும் சம்பவங்களை ஞானிகள் இன்றே பார்க்க முடிகிறது. ஏனெனில் அங்கு எல்லாமே நிகழ்காலம்தான்!

'மன ஆற்றலைப் பற்றி சொல்கிறீர்களே மகாத்மா காந்தி இல்லாமலிருந்தால் - உப்பு சத்தியாக்கிரகம் செய்யாமலிருந்தால் நாட்டில் மக்கள் எழுச்சி பெற்றிருப்பார்களா?' என்று பலர் கேட்கக் கூடும்.

கவியரசு கண்ணதாசன் பாடினாரே: "நமக்கும் மேலே ஒருவனடா! அவன் நாலும் தெரிந்த தலைவனடா!" என்று. அது போல நமக்கும் மேலே ஒரு மாபெரும் சக்தி பிரபஞ்சத்தை இயக்கிக் கொண்டிருக்கிறது. அதிலேதான் கால காலத்திற்கும் அந்தந்த காலத் தேவைகட்கும் ஏற்ப அப்பர் சுந்தரர் மாணிக்கவாசகர் ஞானசம்பந்தர் என்றும், திருமூலர் பதஞ்சலி என்றும், காந்தி அரவிந்தர் என்றும் தெய்வீக நிலையில் உள்ள தெய்வ அம்சம், உலகை வழிநடத்திச் செல்ல மனித ரூபத்தில் அவதரிக்கிறார்கள்.

ஒரு இருபது சத மக்களின் எண்ணம் நல்லெண்ணமாக இருக்கும்போது அந்த ஆக்க சக்தி நாட்டை உருமாற்றம் செய்கிறது. இப்படிக் காலந் தோறும் நன்மையும் தீமையும், ராமரும் ராவணனும் என்பது போல. அசுர சக்திகளின் உருவாக ஹிட்லரும், ஆன்மீக சக்திகளின் உருவாக சர்ச்சிலும் அந்தந்தக் காலகட்டத்தில் தோன்றுகிறார்கள். இவர்கள் எல்லாம் கருவிகள்தான். இவற்றை இயக்குவது மாபெரும் பிரபஞ்ச சக்தி. நல்லோர்களும் ஞானி களும் யோகிகளும் மகரிஷிகளும் தங்கள் மன ஆற்றலினால் நல்லது எல்லாவற்றையுமே அவர்களால் செய்ய முடிகிறது. மனிதனாய்ப் பிறந்த நிலையில் அத்தகைய மனிதன் தன் மன ஆற்றல் மூலம் அந்த மாபெரும் சக்தியுடன் தொடர்பு கொள்கிறான்.

அதைத்தான் அரவிந்தரும், திருஞானசம்பந்தர் போன்ற பலரும் செய்தார்கள்.

அன்றாட வாழ்வில் இன்ன காரியம் செய்வது என்று தெரியாது நாம் திண்டாடிக் கொண்டிருக்கும் வேளையில், "ஆண்டவனே!" என்று பிரார்த்திக் கிறோம்; வேண்டிக் கொள்கிறோம்; "நிலைமை மாறாதா?" என்று உள்ளம் பொங்க நம் மனச்சாட்சி பேசுகிறது.

பல சமயம் வாழ்விலே பார்க்கிறோம், அன்றாட வாழ்வில் அதிசயங்கள் நிகழ்வதை. "எப்படி நிகழ்ந்தது? இப்படிப்பட்ட அதிசயம்?" என்றெல்லாம் சொல்வதறியாமல் திகைக்கிறோம்; மகிழ்கிறோம்.

எல்லாம் மன ஆற்றல்தான்! மனத்தில் எழும் எண்ணங்கள் சொல்லாக வெளியே வராமல் ஆழ்ந்த உணர்வுடன் பிரார்த்தனையாக இருந்தால், அந்தப் பேசப்படாத எண்ணம் சொல்லப்படும் சொல்லை விட வலிமை மிக்கது என்று உபநிடதங்கள் கூறு கின்றன. (வேதங்களின் விளக்கங்களே உபநிடதங்கள்) எண்ணங்கள் மனம் உடல் முழுவதுமாகப் பரவி பூரணமாக ஆண்டவனுடன் ஒன்றி நிற்கும்போது அந்த எண்ண சக்தி எடுத்த லட்சியத்தை நிறை வேற்றும் பணியைச் செய்கிறது. எண்ணங்கள் மின் சக்தி போல ஓட்டம் கொண்டவை.

சுமார் 40 ஆண்டுகளுக்கு முன் ஒரு விஞ்ஞான சோதனை செய்தார்கள். ஜோடியாக இணைந்து ஒரே திசையில் சுழலும் இரண்டு ஹைட்ரஜன் அணுக் களை, ஒன்றிலிருந்து ஒன்றை பல மைல் தொலைவில் வைத்தார்கள். ஓரிடத்தில் இருந்த அணுவின் சுழலும்

திசையை காந்தக் கட்டையால் மாற்றினார்கள். வெகு தொலைவில் இருந்த ஹைட்ரஜன் அணு தன்னுடைய சுழலும் திசையும் உடனடியாகத் தானே மாறிக் கொண்டது.

இவ்வளவு தொலைவில் மிகச் சின்னஞ்சிறிய அணுக்கள். எப்படி ஒன்றுக்கொன்று செய்திகளைப் பரிமாறிக்கொள்கின்றன. அப்படி ஒரு சக்தி இப் பிரபஞ்சத்தில் இருக்கிறது. அதை மனித மன ஆற்றலுடன் சம்பந்தப்படுத்தி விஞ்ஞான பூர்வமாக மன ஆற்றலை - எண்ண ஆற்றலை விளக்கும் ஆய்வு நடந்து கொண்டிருக்கிறது.

நல்லெண்ணமோ கெட்ட எண்ணமோ நம் எண்ணங்களுக்கேற்ப நம் எண்ணங்கள் நம் முகத்தையே மாற்றி விடும்; நம் உடல் உறுப்புகளைப் பாதிக்கும் என்றும் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆகவே நல்லதை மட்டுமே எண்ணுங்கள். துயரத்தை யும் கோபத்தையும் ஆணவத்தையும் சாப்பாட்டு வேளையிலோ சாப்பாட்டுடன் சேர்த்தோ சாப்பிடா தீர்கள்! ஜீரண உறுப்புக்கள் சரியாக வேலை செய்யாது.

அதுமட்டுமல்ல. நம் எண்ணங்கள் பிறரது மன எண்ண அமைப்பை நல்லதை நோக்கி மாற்றவும் உதவும் என்றும், அதைவிட நமது சூழ்நிலையையே மாற்றி நம் லட்சியத்திற்கேற்ற சூழ்நிலையை உருவாக்கும். என்றும் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆகவேதான் எண்ணங்களின் வலிமையை, அதை இயக்கும் திறனை நாம் அறிந்துகொள்ள வேண்டும். எண்ணங்கள் நம் மனத்தில் எழுபவை. நமது

கட்டுப்பாட்டில் நாம் விரும்பும்படி நல்ல வீரமான பெரிய லட்சியம் கொண்ட சாதனைக்கான லட்சியங் களையும் போடலாம். அல்லது இந்த நாடே மோசம், வாழ்வே கடவுளின் ஏமாற்று வித்தை. வாழ்வு துன்பம் நிறைந்தது என்று சொல்லிக்கொண்டு நம் எண்ணங் களால் நம்மையே சீரழிக்கலாம்.

எதைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று மன இயல்பையும் அதன் ஆற்றலையும் தெரிந்துகொண்டு வாழ்வில் பயன்படுத்துகிறோமோ அதுதான் "தன்னை அறியும் அறிவு" எனப்படுகிறது. நம் மனத்தில் எழும் எண்ணங்களைப் புரிந்துகொண்டு, சரியான எண்ணங்களை எண்ணுவோமானால் நம் வாழ்வு இன்பமயமானதாக ஆனந்தமயமானதாக அமையும். எண்ணங்கள் தான் நம் வாழ்வை அமைக்கின்றன. அதைப் புரிந்து கொள்ளும்போது அது சாதாரண வாழ்வை நடத்தும் அறிவு என்பதிலிருந்து, நல்லது கெட்டதைப் புரிந்து கொள்ளும் விவேகமாக மாறி அதன்பின் உள்ளதை உள்ளபடி அறியும் ஞானமாக மாறி நமக்கு உதவுகிறது. அதுதான் வாழ்வாங்கு வாழும் ஞானநிலை. தன்னை அறியும் அறிவு. எண்ணங்கள் எழும் மனத்தை நாம் நம் மன உறுதியின் மூலம் சரியான விதத்தில் பண்படுத்த முடியும்; வாழ்வின் பிரச்னைகளில் சரியான முடிவை எடுக்க முடியும். உயர் வாழ்வும் ஆனந்தமான வாழ்வும் வாழ முடியும்.

உண்மை இப்படியிருக்க ஏன் "என்னால் முடியாது?" என்று பயத்துடனும் கோழையாகவும் விஷயத்தை அணுகுகிறீர்கள்?

நம் கை, வாயில் போடுவதைத்தான் நம் வாய் விழுங்குகிறது. மூளை நமது மூளை; மனத்திற்குள் துணிவை, நம்பிக்கையை, வீரத்தை, நல்லெண்ணத்தை, சாதனையை, ஆனந்தத்தை அமைதியை உள்ளே நுழைய விடுங்கள்; வெளி உலகம் உங்கள் விருப்பத்திற்கேற்ப அப்படியே மாறி வருவதைக் கண்டு வியப்பீர்கள்!

மனக்கதவுகளைத் திறக்கும் வழிகள்

இதை மறுபடியும் சொல்கிறோம். இது அதிகம் உங்களுக்கு உதவும் என்பதால்.

1) அன்றாடம் நடந்த விஷயங்களை மறுநாள் காலை விருப்பு வெறுப்பில்லாமல் அது பற்றிய உண்மையான விவரங்களை உங்கள் டயரியில் எழுதுங்கள். என்ன செய்தோம்? என்ன செய்திருக்கக் கூடாது, எப்படிப் பேசினோம், எப்படி வரவேற்றோம். வந்தவர் சொன்ன நியாயம் என்ன? எது நாம் செய்த தவறு, திருத்திக்கொள்ள வேண்டிய தவறு எனப்படுகிறதோ அதை அலசி ஆராய்வது.

'இனி இப்படி செய்ய மாட்டேன் பேச மாட்டேன். நடந்து கொள்ள மாட்டேன். பாடம் 1' என்று தினந்தோறும் எழுதி வாருங்கள். 30 நாட்களில் குறைந்தது 10 பாடமாவது நமக்கு கிடைக்கும். இவற்றை ஒரு தனித்தாளில் குறித்துக் கொண்டு மனப்பாடம் செய்து வாருங்கள். இது எப்போதும் உங்கள் நினைவில் இருக்கும், எது செய்யக்கூடாது, எது தவறு என்பன எல்லாம் நினைவுக்கு வரும்போது நாம்

அவற்றை மீண்டும் செய்ய மாட்டோம். இதனால் வாழ்க்கை நல்ல விதமாக அமையும்.

2) மந்திரங்கள் வாய்பாடு இவற்றைத் திரும்பத் திரும்பப் படித்து நினைவில் வைத்துக் கொள்கிறோம். அது ஆழ் மனத்தில் பதிந்து விடுகிறது. வேண்டும் சமயத்தில் நினைவுக்கு வந்து உதவுகிறது. அப்போது திரும்ப நினைக்கும்போது ஒரு கணம் நினைவுக்கு கொண்டு வருவதற்காக யோசிக்கிறோம். மனத்தின் ஆழமான இடத்திற்கு செல்கிறோம். அதே போல இன்னும் அதைவிட ஆழமான இடத்திற்குச் சென்று உங்கள் பிரச்சினைகளை அங்கே வையுங்கள். அமைதியாக அழ்ந்த மௌனத்தில் சில நிமிடங்கள் ஈடுபடுவோமானால் அங்கே வெட்டவெளி எனப் படும் வெற்றிடம் மனத்தில் உருவாகும். அது நமக்குச் சரியான தீர்வை தெரிவிக்கும். இதைத்தான் ‘உள் உணர்வு’ என்று சொல்கிறோம்.

3) மூன்றாவதாக மனத்தில் எந்தப் பிரச்சினை அல்லது கேள்வி இருக்கிறதோ அதே நினைவாக அதை மட்டுமே தீவிரமாக எண்ணிக் கொண்டு இருங்கள். அமைதியாக நிச்சலனமாக இருக்கும்போது நம் கேள்விக்கு பதில் கிடைக்கும். நம் முன்னோர்கள் பல விஷயங்களையும் இப்படியே செய்து வழி கண்டிருக்கிறார்கள்.

4) கிராமங்களில், நமது பாட்டனார் காலத்தில் பெரியவர்கள் எதைப் பற்றியாவது முடிவெடுக்க வேண்டுமெனில் அது திருமணமாய் இருக்கலாம், வெளிநாடு செல்வதாக, அல்லது மனை வாங்குவதாக அல்லது வீடு கட்டுவதாக இருக்கலாம். ஆண்டவனின்

யோசனையைக் கேட்பார்கள். கோயிலுக்குச் சென்று அங்கே விபூதி குங்குமப் பொட்டலங்களை வேறொருவர் மடித்து வைக்க குழந்தையையோ பெரியோரையோ எடுக்கச் சொல்வார்கள். அதைக் கடவுள் காட்டிய முடிவாக எடுத்து செயல் படுவார்கள்.

ஸ்ரீ அரவிந்த அன்னை பெரிய மகான்களுக்கு சமமான பெண்மணி. அவர் மகேஸ்வரி, சரஸ்வதி, லட்சுமி, காளி என்ற தெய்வங்களின் அம்சம் பெற்றவர் என்று ஸ்ரீ அரவிந்தர் சொல்வதுண்டு. எழுதியும் இருக்கிறார்.

அப்படிப்பட்ட தெய்வீகப் பெண்மணி யாராவது பிரச்சினையுடன் வந்தால் தான் வைத்திருக்கும் நல்ல நூல்களை எடுத்து கண்களை மூடியவண்ணம் பிளாஸ்டிக் கத்தியை எடுத்து ஏதாவது ஒரு பக்கத்தில் செல்லுமாறு சொருகுவார். (இதையே பழைய காலத்தில் கயிறு சாத்திப் பார்த்தல் என்பார்கள்.) இது வழிகாட்டும்.

தூய்மையான மனத்துடன் வழிகாட்டுமாறு சங்கல்பம் செய்து கொண்டு செய்தால் சரியான பதில் கிடைப்பதை பலமுறை நான் பார்த்திருக்கிறேன். நான் எடுத்துக்கொள்ளும் புத்தகம் "அன்னையின் ஒளி பொருந்திய பாதை."

11

அரவிந்தர் மனைவிக்கு எழுதுகிறார்:

“எனக்கு மூன்று பைத்தியங்கள்!”

உன் சம்மதத்தை அளி. வெகு சாதாரண மனிதனைப் போல ஜீவித்துக் கொண்டு, கேவலம் உடலிலே உயிர் தரிப்பதற்கு வேண்டிய விஷயங்களில் மட்டும் செலவிட்டுக் கொண்டு வாழ்வது, மிஞ்சியதை எல்லாம் நான் தெய்வ கைங்கரியத்திற்கு விநியோகம் செய்யப் போகிறேன். இது என் விருப்பம். நீயும் இதற்கு சம்மதம் கொடு. இந்த ஆத்ம யக்ஞத்தைச் செய்ய ஆசீர்வதிப்பாயானால் எனது விருப்பம் நிறைவேறுதல் எளிதாகும். **இது எனது முதல் பைத்தியம்.**

இரண்டாவது பைத்தியம்! நேருக்கு நேராக பரமாத்மாவைக் காண வேண்டுமென்பதே அந்த எண்ணம்.

தற்காலத்திலும் மக்கள் எடுத்ததற்கெல்லாம் ஈசன் பெயரைச் சொல்கிறார்கள். எல்லோர் கண் முன்பும் நின்று தொழுது தன் பக்தியை உலகத்தார் முன் காட்டி பாராட்டுகிறார்கள்.

பரமாத்மா என்ற உண்மையை நேருக்கு நேராக காணும் ஒரு வழி இருந்தே தீர வேண்டும். அதை அடைந்தே தீர வேண்டும் என்ற அசைக்க முடியாத எண்ணம் நிச்சயம் மனதில் இருக்கிறது. அவ்வழி நமக்குள்ளேயே இருக்கிறது என்று இந்து சாஸ்திரத்தில் சில விதிகள் சொல்கின்றன. இவ்விதிகளை ஆரம்பித்து வாங்கி விட்டேன். போதனை பொய்யல்ல என்பது எனக்கு தெளிவாகி விட்டது. ஒரு மாத காலத்திற்கு உள்ளாகவே! சாஸ்திரம் கூறும் அடையாளங்கள் சித்தியாகி வருகின்றன.

எனது மூன்றாவது பைத்தியம்

இந்த நாடு வெறும் மைதானங்களும் வயல்களும் காடும் குன்றுகளும் நதிகளும் கொண்ட உயிரற்ற பொருளல்ல, பிறர் எண்ணுவது போல.

நான் என் மண்ணை, செடி கொடிகளை, மலையை, நதிகளை, உயிர் வாழ்வனவை என் தாயாகவே அறிந்திருக்கிறேன்.

அதனை மதித்துத் தொழுகிறேன்.

இன்று தாயின் மார்பிலே அரக்கன் அமர்ந்து கொண்டு ரத்தத்தை உறிஞ்சும் நிலை ஏற்பட்டிருக் கிறது. மகனாகிய என் பணி என் தாயைக் காப்பாற்ற வேண்டும் என்பதே.

வீழ்ச்சி அடைந்து போயிருக்கும் என் நாட்டைக் காப்பாற்றும் வல்லமை எனக்கு உண்டு என்பதை அறிந்திருக்கிறேன். சரீர பலம் இல்லாதிருக்கலாம். புத்தி பலத்தில் யுத்தம் நடத்தப் போகிறேன்.

ஞானத்தை ஆதாரமாகக் கொண்ட ஆத்ம பலம் என்றோர் சக்தி இருக்கிறது. இது என் இயற்கையிலே ஊறிப்போய் என் உள்ளத்தில் ஆழமாக வேரூன்றிப் போயிருக்கிறது.

இந்த உன்னதமான கர்மத்தை நிறைவேற்றும் பொருட்டே என்னை ஈசன் இவ்வுலகிற்கு அனுப்பி இருக்கிறார். 14ஆம் வயதிலே முளைவிட்டுப் பதினெட்டாம் வயதிலே மனம் கலங்காத அசைக்க முடியாத உறுதி பிறந்து விட்டது.

இது நிறைவேறியே தீரும் என்பது மெய்.

என் அன்பான மனைவியே நீயும் இதில் பங்கு கொள்ள தைரியமும் அறிவும் இல்லை என்பாய்...

சுலபமான வழியைச் சொல்கிறேன்.

நீ ஈசனைச் சரண் அடை. அச்சம் ஓடிவிடும். நம்பிக்கை கொள். என் சக்தியை உனக்குத் தருகிறேன். உடையும் உணவும் ஆடுவதும் பாடுவதும் சுகங்களிலே விருப்பமுமா வாழ்க்கை? இன்று நம் நாட்டுப் பெண்கள் மகா பரிதாபமான ஈனத்தன்மை கொண்ட மனநிலையில் இருக்கிறார்கள்.

தெய்வ காரியத்தை நிலைநிறுத்தும் பொருட்டு இங்கே நாம் வந்திருக்கிறோம். பலர் சொல்வதை எல்லாம் கேட்காதே. ஒருவர் பேச்சை மட்டும் கேட்டு அறிவை வளர்த்துக்கொள்.

இன்றைய காலகட்டத்தின் மாபெரும் பிழை இதுதான். தர்மம், அருள், லட்சியம், உயர்ந்த முயற்சிகள் இவை போன்ற நம்பிக்கை கொள்ள வேண்டிய பெரிய விஷயங்களை மக்கள் எளிதாகப் பேசி நகைத்து விடுகின்றார்கள். இதை, திட

சித்தத்துடன் புரிந்து கொள்ளாமல் பேசுவதை ஒழிக்க வேண்டும்.

இதை ஒரு முறை செய்ய முயலும்போது இவை பழக்கமாகிவிடும். நமக்கு வேண்டியது மனோ பலமே. அந்த பலத்தை ஈசனைத் தியானம் செய்வதன் மூலம் பெறலாம்.

தினம் அரை மணி நேரம் உனது விருப்பங்களை பிரார்த்தனை மூலம் வெளியிடு. ஈஸ்வரனை எண்ணி தினமும் தியானம் செய். இது போதும். நாளடைவில் நீ பக்குவநிலை அடைந்து விடுவாய். நீயே உணர்வாய்.

இந்தியாவின் எழுச்சி, விழிப்புணர்வு, உலக நாடுகளிலேயே அதன் இடம், பணி முதலியவற்றை ஸ்ரீ அரவிந்தர் விளக்குகிறார். இது இன்றைய இந்தியா விற்கு குறிப்பாகத் தேவைப்படுகிறது.

12

காரண காரியத்திற்கு அப்பால்...

சமீபத்தில் ஒரு தலைவரைக் கிண்டல் செய்து ஒரு பேட்டியை எழுதி இருந்தார்கள்.

நிருபர்: "ஏன் நீங்கள் தேர்தலில் தோற்றுப் போனீர்கள்?"

"மக்கள் ஓட்டுப் போடலே"

"மக்கள் ஏன் ஓட்டுப் போடலே?"

"அது அவங்களைத்தான் கேக்கணும்"

தலைவர் தன் கட்சி தோற்றதற்கு ஆழமான காரணங்களைக் கூறுவார் என்று எதிர்பார்க்கிறார் நிருபர். ஆனால் தலைவரோ எல்லோருக்கும் தெரியும் வெளிப்படையான காரணங்களைச் சொல்கிறார். சொல்லப்போனால் அந்த தலைவர் அதை தட்டிக் கழிக்கிறார்.

வெளிப்படையான காரணங்களோ அல்லது ஆழமான காரணங்களோ, அது எதுவானாலும் நாம் காரண காரியம் நிகழும் ஒரு உலகில் வாழ்கிறோம். ஒவ்வொரு காரியத்திற்கும் ஒரு காரணம் இருக்கிறது. ஒவ்வொரு காரணமும் நோக்கமும் ஒரு காரியத்

திற்குக் காரணமாகிறது; விதையாகிறது. சோளம் போடுகிறோம் என்றால் சோளம் விளைகிறது. காரணம், காரியம். நம் வீட்டு ஜன்னல் கண்ணாடி திடீரென்று உடைகிறது. எட்டிப் பார்த்தால் பக்கத்து வீட்டுப் பையன் அடித்த கிரிக்கெட் பந்து ஜன்னலின் வழியாக உள்ளே விழுகிறது. ஜன்னல் கண்ணாடி உடைந்தது காரியம். காரணம் கிரிக்கெட் பந்து.

"பாவம் செய்தான், அனுபவிக்கிறான்" என்கிறோம். காரண காரியம்: இப்படி நாம் வாழும் உலகம் - காரண காரிய உலகம். சில சமயம் நாம் தெரிந்தோ தெரியாமலோ செய்த தவறுகள் காரண மாக நாம் கஷ்டப்பட நேரிடும். சில சமயம் எவ்விதக் காரணமுமின்றி தோல்வியை, ஏமாற்றத்தை கஷ்ட நஷ்டங்களை அனுபவிப்பார்கள். இதற்கு முற் பிறவியில் செய்த வினைகள் தொடர்கின்றன என்பார்கள் நம் பெரியோர்கள். இது உண்மைதான் என்று மனவியல் மருத்துவப் பேராசிரியர் பிரையன் ஒய்ஸ் என்பவர் நிரூபித்திருக்கிறார்.

புவியீர்ப்பு சக்தியைக் கண்டுபிடித்த நியூட்டன் என்ற விஞ்ஞானி இதைத்தான் விஞ்ஞான விதியாகச் சொன்னார் "ஒவ்வொரு செயலும் ஒரு எதிர் விளைவை ஏற்படுத்துகிறது" என்று.

வாழ்விலே சில சமயம் நமக்கு எதிர்பாராத சம்பவங்கள் நிகழ்கின்றன. நமக்கு வீடு வாங்கப் பணம் தேவை. நம்மிடமிருக்கும் பணம் எல்லாவற்றையும் திரட்டியாகிவிட்டது. போதவில்லை. திடீரென்று ஒரு பழைய நண்பர் வருகிறார். "நீங்கள் உங்களுக்கென்று ஒரு வீடு வாங்கிக்கொள்ள வேண்டும்" என்று

சொல்லிக்கொண்டு சில லட்ச ரூபாய்களை மேஜையில் வைக்கிறார்! நீங்கள் திகைத்துப் போகிறீர்கள்! "ஆண்டவா!" என்று அசந்துபோய்க் கை கூப்புகிறீர்கள்.

ஒரு விமானப் பயணத்தைத் தவற விட்டுவிட்டீர்கள். மறுநாள் தெரிகிறது, அந்த விமானம் விபத்துக்குள்ளாகியது என்று. "நான் போயிருந்தால் என்ன ஆகி இருக்கும்?" என்று எண்ணுகிறீர்கள். யார் உங்களை தப்பச் செய்தது? நம் எல்லோருடைய வாழ்விலும் இப்படி ஒரு உலகம் இருக்கிறது. காரணத்திற்கு கட்டுப்படாத உலகம், காரணம் நமக்குப் புரிவதில்லை. ஆனாலும் காரியம் நமக்கேற்ப நடக்கிறது. அதிசயம் என்கிறோம்.

அதாவது வேறோர் உலகம் இருக்கிறது. அது காரண காரியத்தைக் கடந்த உலகம். "அது நம் வாழ்விற்கு உதவுகிறது" என்று சொல்லலாமா? ஆம்!

நிஜ வாழ்வில், ஒரே சமயத்தில் பிறந்த இரட்டையர்களை எடுத்துக்கொள்கிறோம், என்று வைத்துக் கொள்ளுங்கள். ஒருவர் சென்னையில் இருக்கிறார்; ஒருவர் டெல்லியில் இருக்கிறார். சென்னையில் இருப்பவரை ஒருவர் கீழே பிடித்து தள்ளுகிறார் என்றால், அதே சமயம் டில்லியில் இருப்பவரும் மாடிப் படியிலிருந்து கீழே விழுந்து காலை ஒடித்துக் கொள்கிறார் என்றால் என்ன சொல்வீர்கள்? இது எப்படி நேர்கிறது? எது காரணம்?

சென்னையிலே இருக்கிற ஒருவருக்கு நேர்கின்ற விஷயம் அதே சமயத்தில் டெல்லியிலே இருப்ப

வருக்கும் நேர்கிறதென்றால் சென்னைக்கும் டெல்லிக்கும் உள்ள தூரம் என்ன ஆயிற்று? தூரமே இல்லையா? இரண்டும் அருகருகில்தான் இருக்கின்றனவா?

தூரம் இல்லையானால் நாம் உடனே அங்கிருக்கலாமே? ஆகவே காலம் என்பதும் இல்லையா? அதாவது தூரம், காலம் கடந்த ஒரு உலகமா இருக்கிறது? இதுதான் நமக்குள் எழும் கேள்விகள்.

கிடைக்கும் பதில் என்ன?

"நமது கண்ணுக்குப்புலன் ஆகாத ஒரு உலகம் இருக்கிறது. அங்கு காலம் இல்லை, தூரம் இல்லை, தேசம் இல்லை. அப்படித்தான் இந்த அணுத்துகள்கள் உலகம் இயங்குகிறது." இப்படித்தான் விஞ்ஞானிகள் சொல்கிறார்கள்.

இந்த விஞ்ஞானம் காட்டும் அணுத்துகள் உலகம் நாம் சகஜமாக வாழும் காரண காரிய உலகம் போல இல்லை. அங்கே காலம், தேசம், தூரம் என்பதெல்லாம் இல்லை என்பது தெரிய வருகிறது.

இந்தக் காரணகாரியமற்ற உலகைப் பார்த்துப் பார்த்து விஞ்ஞானிகள் அதிசயப்படுகிறார்கள். ஆனால் இதை எல்லாம் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அன்றாட வாழ்வில் நம் ஞானிகள் கண்டு பிடித்திருக்கிறார்கள்; உபயோகித்திருக்கிறார்கள். அதாவது எதைஎதை எல்லாம் ஞானிகள் தங்கள் மன ஆற்றலினால் செய்தார்களோ - கண்டுபிடித்து உபயோகித்தார்களோ - அதெல்லாம் நிஜந்தான்,

உண்மைதான் என்று இன்றைய விஞ்ஞான உலகம் கண்டுபிடித்து வருகிறது. அதாவது விஞ்ஞானம், நம் மெய்ஞ்ஞானத்தில் சங்கமமாகிறது.

இப்போது நம் ஞானிகளிடம் வருவோம். 1900 வாக்கில், ஏறத்தாழ நூறாண்டுகளுக்கு முன்னால், கல்கத்தா உயர்நீதிமன்றத்தில் சர். ஜான் உட்ரப் என்ற ஒரு நீதிபதி இருந்தார். அப்போது முதல் உலக மகா யுத்தம் நடந்து கொண்டிருந்தது. உட்ரப்பின் குடும்பம் லண்டனில் இருந்தது. லண்டனில் குண்டு மாரி பொழிந்து கொண்டிருந்தது. உட்ரப்பிற்கு மிகுந்த கவலை 'தன் குடும்பம் என்ன ஆயிற்றோ' என்று. அந்த சமயம் ஒரு இந்துப் பெரியவர் வந்தார். உட்ரப் கவலையோடு இருப்பதைப் பார்த்தார். விஷயத்தை அறிந்தார். உட்ரப்பிடம் சொன்னார், "ஒரு அரை மணி நேரம் என்னை இந்த அறையில் போட்டுப் பூட்டிவிடுங்கள். பிறகு திறவுங்கள்" என்றார். அப்படியே செய்தார் உட்ரப். அரை மணி கழித்து அந்த அறையிலிருந்து வெளியே வந்த அந்தப் பெரியவர் சொன்னார்:

"ஐயா! உங்கள் குடும்பம் பத்திரமாயிருக்கிறது. லண்டனில் குண்டு விழவே, அவர்கள் வேறோர் ஊருக்கு இடம் மாறி விட்டார்கள். உங்கள் பெண் வளர்ந்திருக்கிறாள். மகன் நன்கு படிக்கிறான். மனைவி சுகம்" என்றார்.

உட்ரப்பிற்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை. அப்படியா என்று ஆனந்தித்தார். எனினும் ஆழ் மனத்தில் ஒரு சந்தேகம் "இது நிஜமாயிருக்குமா அல்லது மனிதர் நம்மைத் திருப்தி செய்ய கதை

விடுகிறாரா?'' என்று. இரண்டு மாதத்தில் யுத்தம் நின்றது. அவர் மனைவியிடமிருந்து கப்பல் தபால் வந்தது.

"டார்லிங்! நீங்கள் அனுப்பிய இந்து பெரியவர் நம் வீட்டுக்கு வந்து எங்களைப் பார்த்தார். நீங்கள் கவலைப்படுவதைச் சொன்னார். அனைவரும் நலம். நீங்கள் நலமாயிருப்பதை அறிய மகிழ்ச்சி'' என்று. அதைப் படித்தபோது உட்ரப் உண்மையிலேயே பிரமித்துப் போய்விட்டார்!

"இந்த இந்துக்களிடையே எத்தனை அறிவும் திறமையும் ஞானமும் இருக்கின்றன!'' என்று வியந்தவர் வேதங்களையும் உபநிடதங்களையும் குண்டலினி யோகத்தையும் படிக்க ஆரம்பித்தார். அவர் மூலம் முதன் முதலாக மேனாடுகள் குண்டலினி யோகம் பற்றியும் அதன் மூலம் மனிதன் அட்டமா சித்திகள் அனைத்தையும் அடைய முடியும் என்பதையும் தெரிந்து கொண்டன.

கல்கத்தாவில் இருக்கும் ஒருவர் நினைத்த மாத்திரத்தில் லண்டன் சென்று அரை மணி நேரம் தங்கிவிட்டு வருகிறார் என்றால் தூரம் என்னாயிற்று? காலம் என்னாயிற்று? யோசியுங்கள்.

இன்றைய பௌதிக விஞ்ஞானிகள் குறிப்பாக அணுத்துகள் உலகை ஆராயும் (குவாண்டம் துறையை) விஞ்ஞானிகள், அந்த மென்மையான மிக மென்மையான கண்ணுக்குத் தெரியாத உலகிலே

"காலம் இல்லை, தூரம் இல்லை" என்று கண்டு பிடித்திருக்கிறார்கள்.

ஆனால் நமது ஞானிகள் இந்த புலன் ஆகாத உலகத்தை அறிந்தது மட்டுமல்ல, தங்களது கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வரும் வழிகளை எல்லாம் அறிந்திருந்தார்கள். அன்றே அதை 'பரகாமியம்' என்று பெயரிட்டுச் செய்முறையையும் எழுதி வைத்து விட்டுப் போயிருக்கிறார்கள் பதஞ்சலி யோக சூத்திரத்தில்.

13

வளைந்து கொடு; இருப்பதை ஏற்றுக்கொள்

வாழும் மனிதனிடம் விட்டுக்கொடுக்கும் குணம்; வருவதை ஏற்கும் மனப்பக்குவம்.

இறந்த மனிதனோ கட்டையைப் போல், இணக்கமில்லாத திட நிலையில்.

நாணலும் மரங்களும் வளைந்து கொடுத்து இணக்கத்துடன் வாழ்கின்றன.

செத்த பிறகோ சருகாய் உலர்ந்து காய்ந்து போகின்றன.

ஆகவே,

வளைந்து கொடுக்காமல் வாழ்பவன்

சாவின் நண்பன்

செத்த நிலையில் ஜீவிக்கிறான்.

வளைந்து கொடுத்து வாழ்பவர்கள்

வாழ்வின் நண்பனாய்

வாழ்வை அனுபவிக்கிறார்கள்.

வளைந்து கொடுக்காத வியூகம் வெல்லாது சாய்ந்து கொடுக்காத மரத்தைக் காற்று கீழே தள்ளும்

நியாயத்துடன் நாட்டை நிர்வகி

வியக்க வைக்கும் வியூகத்துடன் படைகளை நகர்த்து.

உலக இயக்கத்தை அதன் போக்கில் விட்டுவிட்டால் உலகை வெற்றி கொள்வாய்.

இது எப்படி எனக்குத் தெரியும்?

இப்படித்தான்!

இது சீன ஞானி லாட்சு எழுதிய கவிதை:

வாழ்க்கைக்கு; கணவன் மனைவி வாழ்க்கைக்கும் பெற்றோர்–குழந்தைகள் உறவுக்கும், தொழிலில் வெற்றிபெறும் சாதனையாளர் அனுபவத்திலும் நாம் பார்ப்பது இந்த விட்டுக்கொடுக்கும் – வளைந்துகொடுக்கும் குணம்தான்.

இங்கே நாம் இயற்கையுடன் ஒத்து வாழ்கிறோம்.

14

“உனக்கு நல்லது எது? உன்னைவிடக் கடவுளுக்கு நன்கு தெரியும்”

நமது மனத்தில் எழும் எண்ணங்கள்தாம் நாளடைவில் நம்பிக்கையாகின்றன. இது செய்யக் கூடியது தான். இதைச் செய்ய வேண்டும்; என்னால் செய்ய முடியும் என்கிற நம்பிக்கை பிறக்கிறது.

வேலையும் நடக்கிறது. எனினும் சில வேலைகள் அதிகம் முனனேறிச் செல்வதில்லை. தேக்கம் ஏற்படுகிறது. மனிதனின் உற்சாகத்தில் தேக்கமா? லட்சியத்தில் நம்பிக்கை இழந்து வருகிறானா? சும்மா இருப்பதில் சுகம் காணும் மனிதனாக சோம்பல் அவனை ஆட்கொண்டு விட்டதா?

இந்தக் கேள்விகளின் பதிலை ஆராய்வோமா னால் நமக்குத் தேக்கத்தின் காரணம் புரியவரும்; மேலும் செல்ல வேண்டிய பாதை தென்படும். இதைத்தான் “காரண காரியத்தை ஆராய்தல்” (cause and effect analysis) என்பார்கள். ஏனெனில் நாம்

வாழும் இவ்வுலகில் காரண காரியத்தால் சம்பவங்கள், காரியங்கள் நிகழ்கின்றன. காரண காரியங்களை ஆராய்ந்து, செய்யக்கூடாததை அடுத்த முறை தவிர்ப்பது ஒவ்வொரு முறையும் சரியான முடிவெடுக்க உதவும். நாம் மீண்டும் பழையபடி முன்னை விட வேகமாக, நமது பணியில் ஈடுபடவும் சாதனை புரியவும் இது அதிகம் உதவும்.

இதற்கு மேலும் எப்படிச் செல்லலாம் என்பதை மிக அழகாக, தெளிவாக அரவிந்த அன்னை விளக்குகிறார். நம் மனத்தில் எழும் எண்ணங்களை நாம் பார்க்க முடியாது. அது நம் கண் பார்வைக்கு அப்பால் உள்ள மனத்தில் இருக்கிறது. நமது எண்ணங்கள் தான் ஒருநாள் செயல்களாகின்றன. செயல், உழைப்பு என்ற நிலை எல்லோருக்கும் தெரிகின்ற பார்க்கக்கூடிய உலக நிலை.

மனத்தில் எண்ணமாக இருக்கும் நிலை பார்க்க முடியாத சூட்சும நிலை; மறைந்த நிலை. அந்த சூட்சும உலகில் - நம் மனத்தில் எழுந்த எண்ணங்கள்தான் சாதனையாகப் போகின்றன அல்லது மனத்திலேயே கிடந்து நாளடைவில் மறைந்தும், மறந்தும் போகப் போகின்றன!

ஆகவே சாதனை புரியும் இயக்கத்தின் சாவி எங்கிருக்கிறது என்றால் அது நம் மனத்தில்தான்! அங்கே எழும் எண்ணங்களில்தான்!

மன உலகில் இரண்டு செயல்கள் நடக்கின்றன. ஒன்று சிந்தனை; இரண்டாவது மன உறுதி என்கிற வைராக்கியம். அவை என்ன செய்கின்றன? எப்படிச் செயல்படுகின்றன?

நமது சிந்தனையில் நமக்கு தெளிவு வேண்டும். எப்படிப்பட்ட முடிவை - விளைவை நாம் விரும்பு கிறோம் என்பதைத் தெளிவாக, மனம் படமாகப் பார்க்க ஆரம்பிக்கிறது. தினமும் அதுபற்றி தீவிரமாகச் சிந்தித்தோமானால் அந்தப் படத்தில் நாம் விரும்பும் எல்லாவித அமைப்புக்களும் கொஞ்சம் கொஞ்சமாக இடம்பெறும். அதாவது தெளிவு பெறும் மனம் நம் லட்சியத்தைப் படமாகப் பார்க்கிறது.

நாம் படமாகப் பார்க்கும் நம் லட்சியம் இன்று இவ்வுலகில் இல்லை. அது நாம் காணும் கனவு; நாம் காணும் கற்பனை; ஆனால் ஒரு நாள் நிஜமாகப் போகிறது! நேற்று இல்லாத ஒரு புதிய படைப்பு இங்கே உருவாகி இருக்கிறது. சொல்லப்போனால் அதற்கு ஜீவன் உயிர் (உணர்வு) உண்டாகிறது. பிறந்த ஒரு குழந்தை எப்படிக் கையையும் காலையும் உதைத்துக் கொள்ளுமோ அப்படி. அது போல நமது எதிர்கால லட்சியம் சுதந்திரமாக இயங்கக்கூடியது. எனவே அது தன்னை நிறைவேற்ற - தன்னை வெளி யில் உருவாக்கிக்கொள்ளத் தயாராக இருக்கிறது.

எண்ணங்களின் வேலை நம் லட்சியத்தை நிறைவேற்றுவது மட்டுமல்ல; அத்துடன் அதற்கேயுரிய சூழ்நிலையையும் உருவாக்குகிறது என்கிறார் ஜேம்ஸ் ஆலன்.

ஒரு காரியம் துவங்கியவுடன் பல சமயம் நமக்குப் பல இடையூறுகள் ஏற்படும். அதனால் அதைரியம் ஏற்படும். இது நடைபெறுமா என்ற சந்தேகம் ஏற்படும்.

அப்போதுதான் நமக்கு மன உறுதி வேண்டும். பயத்திற்கோ, சந்தேகத்திற்கோ, பிறர் மூட்டும் அதைரியத்திற்கோ இடம் கொடுக்கக் கூடாது. இப்படிப்பட்ட பல எதிர்மறை எண்ணங்கள் மனத்தில் எழுவதனாலேயே நமக்குச் சங்கடம் ஏற்படு கிறது. நம் சக்தி செலவாகிறது.

இப்போது நாம் முன்பு பார்த்த சாதனையின் விளைவுகளை மனத்தில் கொண்டுவர வேண்டும். "இந்த இடையூறுகள் என்னை நிறுத்திவைக்கப் போவ தில்லை" என்ற சங்கல்பம் செய்து கொள்ளவேண்டும். அதாவது நாம் நம் மன உறுதியையும் வைராக் யத்தையும் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

அதைவிட முக்கியமாக அத்துடன் இறைசக்தி ஒன்றிருக்கிறது என்பதை நாம் உணர வேண்டும். அதை நோக்கிப் பிரார்த்தனை செய்ய வேண்டும். "ஆர்வத்துடனும் பாசத்துடனும், நம்பிக்கையுடனும் இறைவனை அழைத்து நம் பிரச்சினையை இறைவன் திருவடியில் அர்ப்பணியுங்கள்" என்கிறார் ஸ்ரீ அன்னை.

அப்படி இறைவனிடம் ஒப்படைக்கும்போது எது நல்லதோ அது நடக்கும். ஏனெனில் எது நமக்கு நல்லது என்பது நம்மைவிட இவ்வுலகை இயக்கும் மாபெரும் சக்திக்கு நன்கு தெரியும்.

"நாம் கேட்டது கிடைக்காத நிலை ஏற்பட்டால் மனம் உடைந்து போக வேண்டாம். எந்தவிதக் கிளர்ச்சியும் அடையத் தேவை இல்லை. அது உனக்கு நல்லதில்லை. அது தான் உண்மை" என்கிறார் ஸ்ரீ அன்னை.

வாழ்வில் இப்படிப்பட்ட சம்பவங்கள் ஏற்படும் போது நாம் குமைந்து போகிறோம். என்னை சென்னையில் பொறியியல் கல்லூரிக்கு குடந்தையி லிருந்து இடமாற்றம் செய்தபோது, நான் தவித்தேன்! 'சென்னையா? பிக்பாக்கெட்காரர்கள் உள்ள ஊரா யிற்றே! வீடு குடியிருக்க கிடைக்காதே!' என்றெல் லாம் மன உளைச்சல் ஏற்பட்டது. மேலதிகாரிகளிடம் முறையிட்டேன். அவர்கள் என் முறையீட்டைப் பொருட்படுத்தவில்லை.

அதனால் நான் சென்னைப் பணியை ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று. சொன்னால் நீங்கள் நம்ப மாட்டீர்கள்! சென்னைக்கு வந்தது எல்லா விதங்களிலும் எனக்குப் பெரும் வாய்ப்பாய் அமைந்தது!

பத்திரிகைகளில் எழுதத் துவங்கினேன். பத்திரி காசிரியர்களுடைய நேரடித் தொடர்பு கிடைத்தது. அமெரிக்கா சென்று மேல்படிப்புப் படிக்க விண்ணப் பித்தேன். அமெரிக்க தூதரகத்தின் கல்விப்பிரிவு என்னை அமெரிக்காவுக்கு அனுப்பியது. அண்ணா பல்கலைக் கல்லூரியின் பெருமையும் புகழும் கல்வித் துறையும் என் வருமானத்தை இரட்டிப்பாக்கின. சென்னைக்கு வந்ததைப் பற்றி மகிழ்ச்சியில் திளைத்தேன்.

இதெல்லாம் நடந்தபோது எனது டயரியில் எழுதி வைத்தேன். என்ன தெரியுமா?

"உனக்கு நல்லது செய்வது எப்படி என்று உன்னைவிடக் கடவுளுக்கு நன்றாகத் தெரியும்" என்று!

15

"என் உளமே புகுந்த அதனால்"

'திருநாவுக்கரசரின் பாடல்களில் புராணக் கதைகள்' என்ற தலைப்பில் ஜெயவாணிஸ்ரீ எழுதி யுள்ள நூலைப் படித்தேன்.

சைவம் போற்றும் நால்வரில் ஒவ்வொருவரும் ஒரு தனிச்சிறப்பு பெற்றவர்கள் என்றாலும், நான் தினந்தோறும் படிப்பது - பிரார்த்தனையில் சொல்லும் பாடல் திருஞானசம்பந்தர் பாடிய கோளறு பதிகமும், 'இடர்களையாய்' பதிகமும்தான். சென்னைக்கு அருகில் உள்ள நெடுங்களம் என்ற ஊரில் எழுந்தருளியுள்ள சிவபெருமானை நோக்கி ஞானசம்பந்தர் பாடியதுதான் சங்கடங்களைத் தீர்த்து அருள் பெறும் இடர்களையாய் பாடல். அதிலும் கோள்அறு பதிகத்தில் வரும் ஒரு அழகிய சொல்லமைப்பு என்னைப் பெரிதும் கவர்ந்தது; ஈர்த்தது. அந்தச் சொல்லமைப்பு "இப்படிப்பட்ட இறைவன் என் ஆண்டவன் சிவன்" என்று சொல்ல அடுத்த வரியாக "என் உளமே புகுந்த அதனால்" என்று பாடுவார்.

அந்த வாசகங்கள்தான் என்னை மிகவும் கவர்ந்தன. அவன் "என் உளமே புகுந்த அதனால்" அதற்குப் பிறகு எனக்கு என்ன பயமிருக்க முடியும்? என்ன கவலை இருக்க முடியும்? எந்த எதிரி இருக்க முடியும்?

அதுதான் நம்முள் நிகழ வேண்டியது. இறைவன் நம் உள்ளே புக வேண்டும். எப்போதும் நம்முள் நிலையாக இருக்க வேண்டும். அதற்குப் பிறகு நம் வாழ்வில் உருமாற்றம் பெறுகிறது. நடை உடை பாவனையில் அமைதி, சாந்தம், முகத்தில், உடலில் தேஜஸ், வாயிலிருந்து எந்த வார்த்தை உதிர்ந்தாலும் அது இறைவனின் குரலாக, சொன்னசொல் பலிக்கும் நிலை.

அதுமட்டுமல்ல, "உளமே புகுந்த அதனால்" என்ற வாசகத்தை ஆங்கிலத்தில் கூற வேண்டு மானால், (Concentration or Power of Attention) என்பார்கள். கவனம் அதிலேயே அதில் மட்டுமே இருக்கும் நிலை. அந்த நிலையில் நாம் செய்யும் எந்தக் காரியமும் சிறப்பாக அமையும். அப்படி மனம் அவன் நினைவாகவே இருப்பவர்களைத்தான் பக்தி மார்க்கம் கண்டவர்கள் என்கிறோம். அப்பரும் சரி மற்ற மூவரும் சரி, அறுபத்து மூவர் என்று நாம் கொண்டாடும் அத்தனை பேரும் அப்படி ஒன்றான வர்கள்தாம் - தான் அதுவாக ஆனவர்கள். சாந்தோக்ய உபநிடதம் கூறுமே "தத்வமசி" என்று. அதன் பொருள் "நீயே அது" என்பதுதான். அப்படி அவர்கள் அதுவாக, இறைவனாக ஆகிவிட்டார்கள். இறைவனுடன் ஒன்றி அதுவாகி விட்டார்கள்.

அப்படிப்பட்ட மாமனிதர்கள், ஞானிகள், சித்தர்கள், மகரிஷிகள், சிவஞானச் செல்வர்கள், ஆழ்வார்கள் நிறைந்த நாடு நம் நாடு.

அப்படிப்பட்ட ஒரு மகத்தான மனிதரின் - பக்தரின் பாடலில் என்ன இருக்கும்?

அவருக்கேற்பட்ட சம்பவங்கள்தான் இருக்கும். எப்படிப்பட்ட சம்பவங்கள்? அரசர் அவரைத் தண்டிக்கத் தீர்மானித்துப் பாறாங்கல்லுடன் இணைத்துக் கடலில் எறிந்துவிட்டு வருமாறு கூறுகிறார். என்ன நேர்கிறது? பாறாங்கல்லை கடல் அலைகள் உருட்டிக் கொண்டு கரைக்கு வந்தனவோ அல்லது கல்லே மிதக்க ஆரம்பித்ததோ அல்லது கட்டப்பட்ட கயிறு, தளர்ந்ததோ — மனிதர் கரைக்கு வந்து சேருகிறார். சந்தேகம் இருக்கிறதா? கடலூருக்கு வந்தீர்களானால் இன்றும் அவர் “கரையேறிய குப்பம்” என்ற ஊர்ப் பெயரைத்தாங்கி அந்த சம்பவத்தை நினைவுபடுத்தும் உண்மையை உலகுக்கு சொல்லிக் கொண்டு நிற்கிறது சரித்திரச் சான்று.

புராணங்கள் எல்லாம் அதீத விஷயங்களை மனித யத்தனத்திற்கு அப்பாற்பட்டு நடக்கும் அதிசயங்களைக் கூறுபவை, மிகைப்படுத்தப் பட்டவை என்று பலர் எண்ணுகிறார்கள். பெரும் சக்தி படைத்தவர்களான கடவுள் பக்தர்களின் வாழ்வை விளக்குவதைப் புராணம் என்கிறார்கள். புராணக் கதைகள் என்கிறார்கள். சரித்திரமும் கதைதான். ஒரு மனிதன் வாழ்ந்த கதை அல்லது ஒரு நாடு வாழ்ந்த கதையைத் தான் சரித்திரம் என்கிறோம்.

நமது பக்தர்கள், ஞானிகள், சித்தர்கள் வாழ்வில் நடந்த சம்பவம் எல்லாம் நடந்த சம்பவங்கள்தான் என்று உறுதியாகச் சொல்ல முடிவதற்குக் காரணம் இன்னமும் நம்முடன் ஊரறியாமல் உலகமறியாமல் தங்களைக் காட்டிக்கொள்ளாமல் வாழும் நூற்றுக் கணக்கான யோகிகள் இன்றும் இந்தியாவிலும் இருக்கிறார்கள் என்பதுதான்!

இறை நிலையை அடைய ஏராளமான வழிகள் இருக்கின்றன. அவற்றை நம் முன்னோர்கள் எழுதி வைத்துவிட்டுப் போயிருக்கிறார்கள். அவற்றை ஞான மார்க்கம், பக்தி மார்க்கம், கர்ம மார்க்கம் என்று குறிப்பிடுவார்கள்.

மன நிலையில் மூன்றுவகை இருக்கின்றது. (1) நினைவு மனம்.

(2) ஆழ் மனம்.

(3) 'அதிமனம்' (super conscious).

அங்கே மனிதன் இறை நிலையில் இருக்கிறான். அவனை ஞானி என்பார்கள். ஞானம் என்றால் 'உள்ளதை உள்ளபடி அறியும் அறிவு' என்று பொருள். அவர்கள் எதிலும் எப்போதும் உண்மை நிலையைப் பார்க்கிறார்கள். அவர்கள் சக்தி நிலை அபாரமானது. இயற்கை அல்லாமல் இறை சக்தியுடனும் அவர்கள் தொடர்பு கொள்கிறார்கள். பஞ்சபூதங்களுடன் தொடர்பு கொள்கிறார்கள்.

ஆகவே அவர்களுக்கு இத்தகைய 'சித்து' வேலைகள் எல்லாம் முடியாத காரியமல்ல.

பகுத்தறிவு உலகில் வாழும் நாம் 'இதெல்லாம் சாத்தியமா?' என்று கேட்கிறோம்; சந்தேகப் படுகிறோம். நம் நாட்டு சித்தர்களும் ஞானிகளும் எழுதி வைத்துவிட்டுப் போயிருக்கும் அவர்கள் செய்த அட்டமாசித்திகள் எனப்படும் பலவற்றையும் இன்றும் மனிதன் செய்ய முடியும் என்பதற்கு உதாரணமாக, அட்டமாசித்திகளில் முதலாவதாக வரும் அணிமா* என்ற அணுவின் அமைப்பை ஆராய்தல் என்ற காரியத்தை சென்னை பிரம்மஞான சபையில் 70 ஆண்டுகளுக்கு முன் இருந்த அன்னிபெசன்ட் அம்மையாரும் பிஷப்-லெட்பீட்டர் என்பவரும் செய்தார்கள். இருவரும் அடையாறு ஞானசபையின் உறுப்பினர்கள்! அவர்கள் ஞானிகள். லண்டன் விஞ்ஞானிகள் கேட்டுக் கொண்டதற்கு இணங்கி அணுவின் அமைப்பை 1875–80ஆண்டுகளிலேயே கண்டு எழுதினார்கள்.

அதை சமீபத்தில் தான் விஞ்ஞான உலகம் கண்டு ஏற்றுக்கொண்டது.

பகுத்தறிவைக் கடந்து ஒரு உலகம் இருக்கிறது. பஞ்சபூதங்களாகட்டும், அல்லது இறைசக்தி யாகட்டும், இப்பிரபஞ்சத்தில் உள்ள எல்லாவற்றுட னும் தொடர்புகொள்ளும் மார்க்கத்தை நம்

---

* அணிமா என்பது அட்ட (எட்டு) மா சித்திகளின் மா = பெரிய (சித்தி என்பது = சாதனை) முதலாவது காரியம். அணுவுக்குள் புகுந்து அணுவை ஆராய முடியும் என்பதுதான். அன்று செய்து காட்டினார்கள். அதை சுமார் 10 ஆண்டுகளுக்கு முன் விஞ்ஞான உலகம் ஏற்றுக்கொண்டது.

பிரம்மஞான சபை இருப்பது தமிழ்நாட்டில் சென்னையில் அடையாறு என்ற பகுதியில். அது இன்றும் இருக்கிறது.

முன்னோர்கள் செய்துகாட்டி யிருக்கிறார்கள். விஞ்ஞானிகளுக்கும் மெய்ஞானிகளுக்கும் மட்டுமே தெரிந்த விஷயங்கள் எல்லாம் நமக்குத் தெரியாமல் இருப்பதால் பொய்யாகிவிடாது என்பதை நாம் உணரவேண்டும்.

நமக்கு முன்னரே சர்ஜான் உட்ரப் போன்ற பல அயல் நாட்டு அறிஞர்கள், இவற்றை எல்லாம் எடுத்துக்காட்டி இருக்கிறார்கள். நாம் பெருமைப்பட வேண்டும்.

16

இயற்கையை போற்றுதும்

நம்மை வாழ வைக்கும் நம்மைச் சூழ்ந்துள்ள இயற்கைக்கு நாம் மதிப்பு அளித்து, வணங்கிப் போற்ற வேண்டும்.

அதற்கு இன்று நாம் என்ன செய்யலாம்

உங்களது சூழ்நிலையை வீட்டிற்கு வெளியே வந்து ஒரு கணம் பாருங்கள். காற்றுக்கும் மண் ணுக்கும், மழைக்கும் வெப்பத்திற்கும், வானுக்கும், மரஞ்செடி கொடிகளுக்கும் பூக்களுக்கும் வண்டு களுக்கும் ஒருமுறை நன்றி கூறுங்கள். கை கூப்பி வணக்கம் சொல்லுங்கள்.

இவற்றை எல்லாம், நாம் "என்றும் பார்ப்பவை தானே!" என்று சாதாரணமாக எடுத்துக்கொள் கிறோம். மிருகங்களை வாழ்த்துங்கள். வெளிச்சம் தரும் சூரியனை, நீர் தரும் மழையை, மூச்சாக நம்மை வாழ வைக்கும் காற்றை, மரத்தை, நாம் நிற்கும் பூமியை, மனத்தால் பூஜை செய்யுங்கள். ஒவ்வொரு நாளும் நன்றி கூறும் நல்லநாள்.

காற்றும் மண்ணும் நீரும் வானும் மாசுபடாமலிருக்க பாடுபடுபவர்களுக்கு உதவுங்கள் - பணமாக உழைப்பாக. காற்றை மாசுபடுத்தக்கூடாது என்பதை உணர்ந்து செயல்படுங்கள். குப்பைகளைக் கண்ட இடத்தில் கொட்டாமல் கண்ணாடி, தகர டப்பா, பேப்பர், பிளாஸ்டிக் என்று தனித்தனியாகப் பிரித்து அவற்றை மீண்டும் உபயோகிக்க உதவும் நிறுவனங்களுக்கு அனுப்புங்கள்.

நீங்கள் தனிமனிதனாகச் செய்யும் காரியம் மீண்டும் இயற்கைக்கு நாம் செய்யும் மரியாதையாகும். பூமிக்கு நன்றி சொல்வதாகும். ஏனெனில் நாம் வாழும் பிரபஞ்சத்திலுள்ள எல்லாம் ஒன்றுக்கொன்று உதவியாக படைக்கப்பட்டிருக்கிறது. அவற்றை மாசுபடுத்தினால் பின்னால் நமக்கே நச்சுப் புகையாக, கெட்ட தண்ணீராக நமக்கே வந்து சேருகிறது.

“தனிமை கண்டதுண்டு அதிலே சாரம் இருக்குதம்மா” என்று பாடுகிறார் பாரதியார். கூடுமானவரை தனிமையை அனுபவியுங்கள். தோட்டத்தில் தனிமையாக நின்று மாந்தோப்பை, மலையை, அருகில் தெரியும் காடுகளை, கொட்டும் மழையை ரசியுங்கள். காலை மண்ணில் பதித்து வெறுங்காலோடு நடந்து பூமியுடன் தொடர்பு கொள்ளுங்கள். அண்ணாந்து பார்த்து ஆகாயத்துடன் தொடர்பு கொள்ளுங்கள். நகரும் மேகங்களை, வானில் ஏற்படும் வர்ண ஜாலங்களை மாலையில் கண்டு மகிழுங்கள், ரசியுங்கள். கடலின் அலையில் காலை நனையுங்கள். கையால் அள்ளுங்கள்.

என்ன ஆனந்தம்! ஆகா! இப்போது இப் பிரபஞ்சத்திலுள்ள எல்லாவற்றுடனும் தொடர்பு கொண்டிருக்கிறோம்; உறவு கொண்டிருக்கிறோம்; நட்புக் கொண்டிருக்கிறோம். 'காக்கை குருவி எங்கள் சாதி, நீள்கடலும் மலையும் எங்கள் கூட்டம்' என்றாரே பாரதி, அதுதான் இது.

ஏன் நீங்கள் ஒரு எடுத்துக்காட்டாக இருக்கக் கூடாது? தெருவோரத்தில் பிளாஸ்டிக் இருந்தால் பொறுக்கி எடுத்து ஒன்று சேருங்கள் சாக்குப்பையில். தகரக் குவளைகள், தாள்கள், ரப்பர் டயர்கள் என்று எப்படி தெருவை, நம் குடியிருப்பை மக்கள் அசிங்கப் படுத்தி அதன் அருகிலேயே வாழ்கிறார்கள். நாலைந்து பேராக செய்யுங்கள். நீங்கள் செய்வதை மற்றவர்கள் பார்க்கட்டும். என்ன செய்கிறீர்கள் என்பதையும் ஏன் செய்கிறீர்கள் என்பதையும் அவர்களிடம் சொல் லுங்கள்.

ஒஜிப்வா பழங்குடி மக்களின் பிரார்த்தனைப் பாடலை தினம் ஒருமுறையாவது பாடுங்கள். ஏனெனில் அது "நாம் அன்போடும், கருணையோடும் பெருமையோடும், இயற்கையை மதித்து நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம், எனவே அதை நாம் பாதுகாக்க வேண்டும்" என்பதை நமக்கு நினைவுறுத்தும்.

17

அர்த்தமுள்ள வாழ்வு

வாழ்க்கை அர்த்தமுள்ளதாக, பயன் உள்ளதாக, ஆனந்தம் நிறைந்ததாக இருக்க வேண்டும். இன்று அப்படி இல்லை! ஏதோ யந்திர வாழ்க்கை போல ஓடுகிறது. அதுமட்டுமல்ல; பல நெருக்கடிகளை - மன உளைச்சல்களை நாம் சமாளிக்க வேண்டி இருக்கிறது. ஆராய்ந்து பார்த்தால் பலவும் நமக்கு நாமே உருவாக்கிக் கொண்ட பிரச்சினைகள்!

இன்று நேரடியான மருந்து இதற்கு ஏதும் இல்லை. ஆனாலும் கூட நமக்கு முன் வாழ்ந்த ஞானிகளும் யோகிகளும் பெரியோர்களும் - அவற்றை திருக்குறள் நாலடியார் போன்ற நூல்களாக வும், அவர்களது வாழ்க்கை பற்றிய அனுபவங்களி னாலும், வாழ்வைக் கடந்த யோக நிலையினாலும் பல புதிய வழிகளையும் அனுபவங்களையும் விட்டுச் சென்றிருக்கிறார்கள். பல காரியங்களில் நாம் ஈடுபடும் போது நமக்கு ஏற்படும் அனுபவங்களை ஆராய்வோ மானால் நம்மைச் சுற்றி எங்கும் ஒரு மாபெரும் சக்தி இருக்கிறதென்பதையும் அது நமக்குள்ளும் இருக்கிற

தென்பதையும் உணரலாம். இதை நமது ஞானிகளும் பெரியோர்களும் அனுபவித்திருக்கிறார்கள். நாமும் நம் வாழ்வில் உணர்கிறோம். அதைவிட, சூரியனும் சந்திரனும், மழையும் காற்றும், வெப்பமும் ஒளியும், மலையும் காடும், ஆறுகளும் கடலும், பூக்களும் காய்கறிகளும் கனிகளும் எப்படி நமக்குத் துணை புரிகின்றன; தென்னை மரங்களும், பால்தரும் பசுக்களும், தனக்காக மட்டும் வாழாமல் வளர்ப்பவர் களுக்கும் உதவியாக வாழ்கின்றன என்கிற அதிச யத்தையும் பார்க்கிறோம். இயற்கைச் செல்வங்களும், இயற்கையின் ஒழுங்கும் நியதிகளும் நம்மை பிரமிக்க வைக்கின்றன.

ஞானிகளையும் யோகிகளையும் அறிந்து கொள்வதும் பழகுவதும், நமக்கு நாம் இதுவரை நம் கல்வியிலும் அறியாத ஒரு புதிய உலகத்தையே காட்டுகின்றன. இப்படியும் ஒரு உலகமா என்ற அதிசயம்! நம் கண்களைத் திறக்க வைக்கும் புதிய அனுபவங்கள்! ஆனந்தங்கள்! வாழ்விற்கு வலிமை சேர்க்கும் சம்பவங்கள்! அர்த்தம் கொடுக்கும் அனுபவங்கள் நிறைய ஏற்படுகின்றன.

பொருளால் ஆன உலகம்

இன்றைய வாழ்வில் விஞ்ஞானம் கடந்த 300 ஆண்டுகளாக மனித வாழ்வை மேம்படுத்தி இருக்கிறது; உண்மை. விஞ்ஞானம் புகுந்து பொருட் களின் உற்பத்தியைப் பெரிய தொழிற்சாலைகளாக உருவாகி இருக்கின்றன. விமானத் தொழிற்சாலையி லிருந்து கோழி வளர்ப்புக்கூடம் வரை பெரும் அளவில் செய்யப்படும் தொழிலாக மாறி இருக்கிறது.

பொருளைப் பற்றிய அறிவும், தொழிலும் வாழ்க்கை வசதியும் ஒரு பக்கம். மறு பக்கத்தில்...?

மனிதனும் மன ஆற்றலும்

மனிதனது எண்ண ஆற்றல், பிரமிக்கத் தக்கதாய் இருக்கிறது. புதிராக இருந்த ஒரு பெரிய துறை இன்று அனைவரும் அறியும், உணரும் தென்றலாகப் பரவி வருகிறது. இறப்பிற்கு பின்னும் வாழ்வு; ஆத்மா சாவதில்லை; அனுபவம் பெற மீண்டும் மீண்டும் பிறக்கிறது; வாழ்க்கை ஒரு முழுமையை நோக்கிய பயணம், தேவனாகும் முயற்சி — என்றெல்லாம் அறியும்போது, "மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" என்று பாடினாரே திருநாவுக்கரசர், அதுதான் நினைவுக்கு வருகிறது, நாமும் பாடுகிறோம்!

மேலேப் படிக்குமுன் இந்த விளக்கத்தையும் சற்றுப் படியுங்கள்.

இதை எல்லாம் பற்றி எழுதும்போது எது நம்மை நமது பிறவி உரிமைகளை அறிய விடாது - அனுபவிக்க விடாது - தடுக்கிறது என்று நாம் யோசிக்க வேண்டும்!

ஆழ்ந்து யோசித்துப் பார்த்தால் நம்மை முன்னேற விடாமலும் வாழ்க்கையின் இன்பங்களை அனுபவிக்க விடாமலும் தடை செய்வது நமது பழக்க வழக்கங்கள்தான். இது கலாசாரம் என்று கூடச் சொல்ல முடியாது. ஏனெனில் நமது கலாசாரம் - அதாவது பாரம்பரியமாக வந்த சிந்தனை முறைகள், பழக்கங்கள் எல்லாவற்றையும் பார்க்குமிடத்து, படிக்குமிடத்து, பெரிய ஆய்ந்தறிந்த அறிஞர்

பெருமக்கள் வாழ்ந்த நாடு, வளர்த்த நாடு இது என்பது புரியவரும்.

குறைப்படும் குணத்தை குறையுங்கள்

நம்மைத் தடுக்கும் இன்றைய சமுதாயக்குறைகள் என்ன? குறை சொல்வதுதான் நமது குறை! என்ன இது, நீங்கள் சொல்வதும் குறைதானே என்கிறீர்களா? இதை நாம் புரிந்துகொண்டால்தான் நாம் திருத்திக் கொள்ளலாம். அதற்காக சொல்கிறோம்!

உழைப்பில் பூரண நம்பிக்கை இன்மையையும், ஈடுபாடு இல்லாமையையும் மிக முக்கியமாக நாட்டையும் சமுதாயத்தையும் அரசையும் கல்வியை யும் எல்லாவற்றையும் பற்றி அப்துல்கலாம் அவர்களைத் தள்ளிவிட்டு பார்த்தால் எல்லாவற்றை யும் குறை சொல்லி அழுவதே, தொழிலாய் விட்டது நமக்கு. "இது மாறாது. இது சாபம். வேண்டும் நமக்கு" என்பன போன்ற எண்ணங்கள் மலிந்து நிற்கின்றன. முதலில் நாம் நமது சிறப்புக்களை, பாரம்பரியப் பெருமைகளை எண்ணி மகிழ, பாராட்ட, பெருமைப் படத் தெரிந்துகொள்ள வேண்டும்.

முடியும் என்ற எண்ணம் முடித்துக் கொடுக்கும்

"என்ன எண்ணுகிறோமோ, அடிக்கடி என்ன பேசுகிறோமோ அதுவாக நாம் ஆகிறோம்" என்பது உண்மை. தோல்வியைப் பற்றி நினைத்தால், நாம் தாழ்ந்தவர்கள், நம்மை மாற்ற முடியாது - என்றெல் லாம் நினைத்தால் அதுதான் நிகழும்! அப்படி மக்கள் நினைத்துக் கொண்டே கடந்த 30 வருடங்களாக இருப்பதனால்தான் இப்படிப்பட்ட நிலைமை இன்று நாட்டில் நிலவுகிறது.

எனவே இனியாவது உற்சாகமாக இருப்போம். நிலைமை இன்று மோசமாய் இருக்கலாம். ஆனால் "**எது வரினும் சரி.** இனி இப்படி இருக்கப் போவதில்லை. அதற்கு நான் பாடுபடப் போகிறேன்" என்று சொல்லிக் கொள்ளுங்கள். சபதம் எடுங்கள். எண்ணங்கள் சுத்தமானால் நாடு சுத்தமாகும்.

இயற்கை அளித்துள்ள நன்மைகளை யோசித்துப் பாருங்கள்

ஆங்கிலப் பழமொழி ஒன்றிருக்கிறது. (count your blessings) என்பார்கள். "உனக்கேற்பட்டிருக்கும் நல்ல விஷயங்களை விரல்விட்டு எண்ணிப் பாருங்கள்!" என்பதுதான் அர்த்தம். அது இல்லாதவரை புலம்பல் தான்! போதும் புலம்பல்! எப்போதுமே உற்சாகமாக வாழத் துவங்குங்கள். எல்லாமே நல்ல எண்ணத்தினால் மாறும்.

இப்போது மேலே படியுங்கள்!

1. உழைப்பில் பூரண நம்பிக்கை இன்மை.
2. உணர்வு தூண்ட செயலில் இறங்கும் மனோ பாவம்.
3. எப்போதும் எங்கும் குறைகாணும் குணம்.
4. குறை கூறுவதை நிறுத்திக் குறையைப் போக்க முயற்சி எடுத்தால் போதும் என்ற தெளிவு இல்லாமை.
5. நமக்குள்ள நல்ல குணங்களை, நாட்டு நடப்புக் களை எழுதிப் பாருங்கள்.
6. மன ஆற்றலை வளர்க்கும் கல்வி.

7. கிராமத்து வறுமையைப் போக்கும் சிறுதொழில் வளரப் பயிற்சியும் உதவியும் செய்யாமை.

பொது நலத்தில்தான் நம் நலம்

திருநாவுக்கரசர் பாடியது போல நாமும் 'மனிதப்பிறவி வேண்டும்' என்று கேட்கும் நாள் அதிக தூரத்தில் இல்லை. "ஆகா! என் பிறவி எப்படிப்பட்ட அற்புதம்! எப்படிப்பட்ட அனுபவம்! அறிவும் ஞானமும் பெறும் பள்ளிக்கூடம் அல்லவா இது? எனக்குமட்டும் வாழாமல் பிறருக்கும் பணி செய்து பேரானந்தத்தை அடையும் பெரும்பேறு அல்லவா வாழ்க்கை! எங்கும் சுற்றிப்பார்த்தால் இயற்கை என்னை எப்படிப் பாலூட்டித் தாலாட்டி வளர்க் கிறது, அவற்றிற்கு நான் என்ன பதில் கைம்மாறு செய்ய முடியும்?" என்றெல்லாம் எண்ணும்போது, வாழ்க்கை ஒரு மகத்தான வாய்ப்பு! என்பதை உணர்கிறோம்.

"அன்னை! அன்னை! ஆடும் கூத்தை நாடச் செய்தாள் என்னை! என்னை!" என்று நாமும் ஆடுகிறோம்! அதை அனுபவிக்கத்தான் பிறந்திருக் கிறோம். கொஞ்சம் சிந்தியுங்கள்.

நமது ஆசை ஒரு லட்சியமாகிறது. அது முதலில் ஒரு எண்ணமாகத்தான் மனத்தில் எழுந்தது. உங்கள் மன உலகம் உங்களுக்கு சொந்தம். அதை யாரும் அசைக்கவோ உடைக்கவோ முடியாது. அதை யாரும் பார்க்கவும் முடியாது. அது நமக்குத்தான் சொந்தம். இந்த மனம் எண்ணத்தின் இருப்பிடம் மட்டுமல்ல. உங்கள் வைராக்கிய உணர்வுகளின் இருப்பிடம். உங்கள் முன்னேற்றத்தின் இருப்பிடம். நேர்மை,

உண்மை என்ற உயர் குணங்களுடன் வாழ்க்கை நடத்துகிறீர்களே, அப்படி நல்லது கெட்டதைப் புரிந்து கொண்டு உங்களைச் சரியான திசையில் அழைத்துச் செல்லும் விவேகம் என்ற மாலுமியின் இருப்பிடம். உங்கள் மனச்சாட்சியின் இருப்பிடம். உங்கள் மனம்.

இதுதான் நம்வாழ்வில் வாழ்க்கை நெறிகளைச் சீர்தூக்கிப் பார்க்குமிடம். "நம்மால் முடியும்" என்ற நம்பிக்கையை எழுப்பி ஆனந்தத்தை அளித்து நம்மைத் தட்டிக் கொடுத்துச் செயலில் இறக்கும் தூண்டு கோலின் பிறப்பிடம்.

எண்ணிப் பார்த்தோமானால் நமக்குள்ளே மனம் எனும் மாபெரும் சக்தி இருக்கிறது. அது பெரும் கோட்டை போன்று உறுதியாக வைராக்கியத்தினால் அதைக் கட்ட முடியும்.

நாம் பயப்படத் தேவை இல்லை; சந்தேகப்படத் தேவை இல்லை.

திருநாவுக்கரசர் பாடுகிறார்.

"அஞ்சுவது யாதொன்றுமில்லை. அஞ்ச வருவதுமில்லை"

என்று நாம் பயப்பட வேண்டியது எதுவுமில்லை; நம்மை பயப்பட வைக்க இனி எதுவும் வரப்போவது மில்லை!

மனம் என்பதை விளக்குகிறார் ஒரு மனவியல் அறிஞர்

"மனம் லட்சியத்தை நாடி ஓடும் தன்மை கொண்டது. கஷ்ட நஷ்டம் வருமானால் தன்னைத் தானே சரி செய்து சமாளித்துக்கொள்கிறது" நம் மனத்திற்கு அவ்வளவு வலிமை இருக்கும்போது அது நம்முள் இருக்கும்போது நாம் பயப்படுவானேன்?

18

லயத்துடன் வாழ்வு

பாடுவதற்கு முன்னால் பாடகர் "ம்ம்ம்ம்....." என்று மெதுவான குரலில் 'ஹம்' செய்வதை நீங்கள் கேட்டிருப்பீர்கள். அந்த 'ம்' தான் - அந்த 'ஹம்' தான் லயம். பாட விரும்புபவரை ஒரு அடிப்படை ஓட்டத்தில் சேர்த்துவிடும் துவக்கம் அது.

அதே போல, பாடுபவருக்கு ஒரு நாத அடிப் படையைக் கொடுக்கத் தம்புரா மீட்டப்படுகிறது. தம்புரா இல்லாவிட்டால் ஆர்மோனியப்பெட்டியைக் குரலுக்கு வளம் சேர்க்க உபயோகிக்கிறார்கள்.

எல்லாம் ஒரே லட்சியம் தான்.

ஒரு அடிப்படை 'சுநாதம்' - ஒரு லயம் - அதில் இசை துவங்குகிறது.

ஹார்மோனி (Harmony) என்ற சொல்லை எடுத்துக்கொள்ளுங்கள். அதன் பொருளே "எல்லா நாதங்களும் இனிமையாக இணைந்தது" என்பதுதான்.

இணைந்த நிலை; ஒன்றை ஒன்று தழுவிய நிலை; பேதமில்லாத சேர்க்கை; பிசிறில்லாத இசை; ஒரு இனிமையான அடித்தளம்! அந்தப் பாதையில், ஒரு

கதியில், ஒரு ஒழுங்கான ஓட்டத்தில் செல்வதுதான் லயம்.

வாழ்க்கை உண்மையிலேயே இனிமையான அடித்தளம் கொண்டது.

இசையில் காணப்படும் அந்த லயத்துடன், அழகுடன், தானாக ஓடும் கதியில் நாம் நம் வாழ்க்கையை ஓட்டிச் செல்லலாம்.

மனிதன் பிறவியிலே அறிவு நிரம்பியவன். அவனது அறிவை அறியாமை திரையிட்டு மறைப்பதனால் அவன் தன் அறிவின் எல்லையைத் தொடுவதில்லை. "அவனுக்கே, அவன் உள்ளே யார் இருக்கிறார் என்பது தெரியாது" என்பார்கள். அது போல லயத்தில் செல்லும் இனிமையான வாழ்க்கை நமது அடிப்படை இயற்கை. ஏனெனில் பிரபஞ்சம் ஒரு லயத்தில்தான் செல்கிறது. பின் ஏன் மனிதன் துன்பங்களினாலும் அவலங்களினாலும் அலைக் கழிக்கப்படுகிறான்?

காரணம்: அவனுக்குள்ளே எப்படிப்பட்ட இனிமையான இயற்கை ஓட்டம் உள்ளே இருக்கிறது என்பதை அவன் அறியமாட்டான். அன்றாட விஷயங்களுக்கும் பிரச்சினைக்கும் ஈடுகொடுப்பதே வாழ்வு என்று எண்ணி அவன் ஓடிக் கொண்டிருக் கிறான். அவனுக்கு அவனைப் பற்றிச் சிந்திக்க நேர மில்லை; நேரம் எடுத்துக் கொள்வதில்லை.

நேரம் எடுத்துக்கொண்டோமானால் லயத் துடன் வாழ முடியும். இனிமையான அந்த அடித்தள ஓட்டம் நம்மோடு எப்போதுமிருக்கும்.

என்ன செய்ய வேண்டும்?

பிரபஞ்சலயம் என்பது ஒரு ஓட்டம், ஒரு பாதை, ஒரு துடிப்பு, ஒரு ஒழுங்கு, ஒரு இனிமை, ஒரு அடித்தளம்.

பிரபஞ்சத்தில் உள்ள கோள்கள், பூமி, சந்திரன், செவ்வாய், சனிக்கிரகங்கள் எல்லாம் ஒரு ஓட்டத்தில், ஒரு கதியில், ஒரு லயத்தில் ஒரு ஒழுங்கில் ஓடுகின்றன.

எல்லாம் ஒரு ஈர்ப்பு சக்தியால் இயங்குகின்றன. அந்த ஈர்ப்பு சக்தி, கோள்களை இழுத்து அவற்றை விழுங்கி விடுவதுமில்லை; அவற்றை விட்டுவிட்டு நகர்ந்து விடுவதுமில்லை. 'அகலாது அணுகாது' என்பார் வள்ளுவர். "பற்றுக பற்றுவிடற்கு" என்பார் வேறிடத்தில். ஆசையற்ற ஆசை. ஆங்கிலத்தில் Detached Attachment என்பார்கள்.

அந்த மன நிலை - மூலத்தின் ஓட்டத்துடன் ஆத்மாவைத் திருப்பிவிடுவதுதான் அந்த மனநிலை.

அங்கே ஆசை இருக்கிறது; ஆனால் எப்படிப் பட்ட ஆசை? தனது ஆசைகளையே மூன்றாவது மனிதனைப் பார்ப்பதைப் போல் பார்க்கும் மனநிலை. "ஏ ஆசையே! நீ இதையா விரும்புகிறாய்?" என்று கேட்கும் கேள்வி. அதுதான் பற்றை விட்டுவிட்ட பற்று. அது "கிடைத்தாலும் சரி, கிடைக்காவிட்டாலும் சரி" என்ற பக்குவ நிலை.

ஆசையின் துடிப்பு இல்லை; வெறி இல்லை. வேகம் இல்லை. நிதானம், பொறுமை, சாந்தம் இதைத்தான் "ஞானம் பெற்ற மோனநிலை" என்கிறார் ஜேம்ஸ் ஆலன்.

இந்த நிலையில் பகைமை, பொறாமை, பொறுப்பு, சினம், காமம், கஞ்சத்தனம், எல்லாம் சமநிலையடைந்து விடுகின்றன. அதாவது முனை மழுங்கி அவை அடங்கிய நிலையில் செயல்படு கின்றன. அவை அனைத்தும் ஒரு கட்டுப்பாட்டுக்குள் வந்து விடுகின்றன. விளக்கமாகச் சொன்னால், ஒரு சுய கட்டுப்பாட்டில் இயங்குவதுதான் இந்தப் பிரபஞ்சம். அந்த சுயக் கட்டுப்பாடு மனிதனுக் குள்ளும் ஏற்படும்போது உள்மன எண்ணங்கள் சீராகின்றன. இதனால் வெளி உலக வாழ்க்கையும் சீராகிறது. பிரச்சினைகள் அனைத்தும் தானே அவிழ்ந்து விடுகின்றன.

லயத்தில் செல்ல மற்றொரு சுலப வழி இருக்கிறது.

நாம் சந்திக்கும் ஒவ்வொருவரையும், வணக்கம் தெரிவிக்கும் போது, மனத்தினால் ஒரு கணம் வாழ்த்துங்கள். மனத்தால் அவர்கள் வாழ, அவர்கள் குடும்பம் வாழ, அவர்கள் தொழில் சிறக்க, ஒரு பிரார்த்தனை செய்யுங்கள். உங்கள் முகம் தானாகவே மலர்ந்து விடும்!

அதே போல ஒரு வீட்டுக்குப் போகிறீர்கள், ஒரு தொழிற் கூடத்துக்குப் போகிறீர்கள்; அங்கும் மனத் திற்குள் ஒரு வாழ்த்தையும், பிரார்த்தனையையும் சொல்லுங்கள்.

எப்படிப்பட்ட மனநிறைவும் மகிழ்வும் ஏற்படுகிறதென்பதை உணருங்கள்.

பதஞ்சலி கூறுகிறார்:

"தன்னலமற்ற ஒரு பொதுநோக்கால் ஒரு மனிதன் தூண்டப்படும்போது எல்லாத் தளைகளும் உடைபடுகின்றன. மனிதன் எல்லா எல்லைகளையும் மீறுகிறான். ஒரு மாபெரும் சக்தி அவனுக்குத் துணைபுரியக் காத்திருக்கிறது" என்கிறார்.

அதாவது பிரபஞ்ச லயம் நம்மை அழைத்துச் செல்கிறது. ஞானம் பெற்ற மோனநிலையை அப்போது நாம் தொடுகிறோம்.

19

வாழ்வின் தேவை - மனநிம்மதி

நமது வாழ்க்கை, இளவயதில் விளையாட்டிலும் தாய் தந்தையரின் பாதுகாப்பிலும் ஆனந்தமான சூழ்நிலையில் தொடங்குகிறது. பள்ளியில் படிக்கத் தொடங்கும் போது நமது எதிர்காலம் பற்றிய கற்பனையில் மூழ்கித் தடைகளை எல்லாம் தாண்டு கிறோம். திருமணம் செய்து கொள்ளும் போதோ சொர்க்கமே பூமிக்கு இறங்கிவிட்டதாக நம்புகிறோம்!

அதன்பின் ஓர் அலுவலகத்தில் வேலை, குடும்பம் குழந்தை குட்டிகள், என்று உலகம் விரியும் போது பல சமயம் நம்மால் சமாளிக்க முடிவதில்லை. சங்கடங்கள் முளைக்கின்றன.

வாழ்வில் தோல்விகளைச் சந்திக்கிறோம். அதன்பின் பார்த்தால் ஒன்று மாற்றி ஒன்றாக, ஏமாற்றம், துக்கம், தோல்வி, அசாதாரண ஆசைகள் அவை நிறைவேறாதபோது ஏக்கம் என்று பல விதங்களிலும் நாம் அல்லாடத் தொடங்குகிறோம்.

சர்க்கஸில் கயிற்றின் மீது நடக்கும் பெண்கூட சாமர்த்தியமாக நடந்து முடிக்கிறாள். நாமோ

வாழ்வில் பலமுறை விழுந்து அடிபட்டு, மறுபடி எழுந்து விழுந்து என்று நம் வாழ்க்கை ஓடுவதைப் பார்க்கிறோம்.

‘சற்றே ஏறுமாறாக நடப்பாளேயாயின் கூறாமல் சந்நியாசம் கொள்’ என்றார் ஓர் அனுபவ ஞானி. மனைவிக்காக யாரும் அப்படி சந்நியாசம் வாங்கிக் கொள்வதில்லை! அன்றாட வாழ்வைச் சமாளிப்பது, பெரும் சோதனையாகவே இருக்கிறது. ஒவ்வொரு மாதமும் புகழ்பெற்ற ஆங்கில மாத இதழான Readers Digestஐப் பார்த்தோமானால் ‘கவலையிலிருந்து நீங்க...’ என்ற தலைப்பில் ஒரு மாதமும் ‘தோல்வியைச் சமாளிக்க’ என்று மறுமாதமும் ‘குடும்ப சுமை கனக்கிறதா? என்று நம் புண்ணை முள்ளால் குத்துவது போல கட்டுரைகளும் அறிவுரைகளும் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன. விஷயம் என்னவென்றால் எல்லோரும் அப்படித்தான் கஷ்டப்படுகிறார்கள்!

எனவே நீங்கள் கவலைப்பட வேண்டாம். ஏதோ கடவுள் நம்மை மாத்திரம் தனியே கண்டுபிடித்து எல்லாச் சுமைகளையும் ஏற்றிவைத்து வேடிக்கை பார்க்கிறார் என்று எண்ண வேண்டாம். வாழ்க்கை, அமெரிக்கா போனாலும் அப்படித்தான்! இந்தியாவில் இருந்தாலும் அப்படித்தான். காரணம் நாம் எங்கு சென்றாலும் நம்மையும் கூட்டிச் செல்கிறோம்; நம் கவனம், நம் எண்ணங்கள், நம் கவலைகள்... இவற்றையும் சுமந்து கொண்டு!

நாம் கவலைப்படத் தேவை இல்லை. கவலையைப் போக்குவதற்கான மார்க்கங்களை

கண்டுபிடித்திருக்கிறார்கள். யார் தெரியுமா? நம்மைப் போல நமக்கு முன்பு கஷ்டப்பட்ட மகான்களும் யோகிகளும் மகரிஷிகளும் ஞானிகளும் இதை எல்லாம் பார்த்து, வழிகண்டு, எழுதி வைத்துவிட்டுப் போயிருக்கிறார்கள்.

இதை எழுதும் போதே தெருவில் ஒரு குரல் கேட்கிறது. யார் என் சிந்தனைத் தொடரைச் சலனப் படுத்துவது? பார்த்தால் தெருவிலே ஒரு பெருமாள் மாடு. அதன்மீது பல்வேறு பழைய கலர் துணிகளால் தைக்கப்பட்ட ஒரு போர்வை, மாட்டுக்கு. பெருமாள் மாட்டுக்காரரர் உடுக்கடித்துக் கொண்டே பாடுகிறார்.

மலை போல வந்தாலும் கலியபெருமாள்
பனிபோல நீங்குண்டா கலியபெருமாள்

உங்கள் கவலையைப் பற்றித்தான் பாடுகிறார், பெருமாள் மாட்டுக்காரரர். அடே அப்பா! நல்ல சேதி வருகிறது!

தற்யெலாக ஸ்ரீ அரவிந்தரைப் புரட்டிப் பார்க்கிறோம். அவர் எழுதுகிறார்.

'நல்லது கெட்டது என்று எதுவுமே இல்லை. எல்லாம் நீங்கள் எடுத்துக் கொள்கிற விதத்தில்தான் இருக்கிறது. உங்கள் மனோபாவத்தைப் பொறுத்தது தான்' என்கிறார்.

இது நல்லது எடுத்துக் கொண்டால் நிச்சயம் கவலையும் சுமையும் குறையும். ஒரு வழி பிறக்கும். 'ஐயோ மாட்டிக் கொண்டேனே!' என்று அதைப் பற்றி எண்ணினோமானால் நாம் நிச்சயமாகச் சங்கடப் படத்தான் போகிறோம்!

ஒரு வீட்டிலே கிறிஸ்துமசுக்கு இரண்டு மகன் களுக்கும் பொம்மைகள் வாங்கி, அதைப் பெட்டியில் வைத்துக் கொடுத்தார்கள். பெரியவன் திறந்தான். உள்ளே ஒரு ரயில்வண்டி, என்ஜினுடன் ஓடும் தண்டவாளங்களுடன் முடுக்கினால் ஓடும் வண்டி. பார்த்தான் திருப்பித் திருப்பி பலமுறை. சொன்னான், "ஹூம் மறுபடியும் ஒரு என்ஜின் ரயில்தானா? யாருக்கு வேண்டும் ரயில்!" என்று முகத்தைத் துருத்திக் கொண்டான்.

மற்றவன் தனது பரிசுப் பெட்டியைத் திறந்தான். அதிலே குதிரைச் சாணம் இருந்தது. பார்த்துக் கொண்டிருந்த எல்லோரும் சிரித்தார்கள். அந்தச் சிறுவன் சொன்னான். 'குதிரைச் சாணம் இருக்கிற தென்றால், எங்கிருந்தோ இங்கே குதிரைக் குட்டியை வாங்கிக் கொண்டு வந்திருக்கிறீர்கள்! அதுதான் விஷயம்' என்று குதித்தான்.

என்ன சொல்கிறது கதை? எதை எடுத்தாலும் அதில் நல்லதைப் பாருங்கள். அது நிச்சயமாக உண்மை நிலவரத்தையே மாற்றும் நிஜமாக அவனுக்கு குதிரைக் குட்டி ஒன்றைத்தான் வாங்கி இருந்தார்கள்!

குறைந்தபட்சம் நம் மனத்திலாவது ஏமாற்றம் இல்லாமல் மகிழ்வுடன் வைத்துக் கொள்வது மிகவும் நல்லது. துக்கப்பட்டுக் கொண்டே-குறை சொல்லிக் கொண்டே-எந்த ஊருக்குப் போகப் போகிறீர்கள்? ஒரு ஊருக்கும் போக முடியாது!

மிக முக்கியமான மனவியல் அறிவுரை, ஞானிகளின் தீர்வு **'இருப்பதை ஏற்றுக் கொள்'** 'எந்தக் கஷ்டம் வந்தாலும் அதை ஒத்துக் கொள். அதற்கு மேல்

அதைப் போக்க, சமாளிக்க என்ன செய்யலாம் என்று யோசி. ஆயிரம் வழிகள், ஆயிரம் எண்ணங்கள் உதிக்கும்' என்பதுதான்.

வெறும் குறைப்பட்டு நம்மையே நொந்து கொண்டு, "நான் அதிர்ஷ்டக் கட்டை, எனக்கு என்று எல்லாம் இப்படித்தான் நடக்கிறது" என்று சொல்லிக் கொண்டிருந்தால் துயர சிந்தனைகள்தான் நம் முடனே இருக்கும். சோகத்துடன் இருக்கும் மனம் எதையும் சாதிக்காது. எப்போதும் குறைப்பட்டுக் கொண்டே இருப்பவனுக்கு நண்பர்கள் இருக்க மாட்டார்கள்! நமது சூழ்நிலை மிகவும் மோசமாகி விடும். முதலில் வாழ்க்கை ஒரு வாய்ப்பு; நல்ல காரியங்களை, பிரமாதமான சாதனைகளை எல்லாம் புரியக் கிடைத்த ஒரு வாய்ப்பு. இதைத்தான் நாம் முதலில் உணரவேண்டும். அடுத்தபடி. வாழ்க்கை ஒரு சவால்! எதையும் சவாலாக எடுத்துக் கொள்ளுங்கள். 'ஓடி ஜெயித்துக் காட்டேன்!' என்றே சொல்கிறார்கள் என்றால், சரி ஓடிப் பழகினோமானால், 'நான் வெற்றி அடையாமல் விடப் போவதில்லை' என்று உடும்புப் பிடியான ஆர்வம் நம்முள் இருக்குமானால் நிச்சயம் நம்மால் ஜெயித்துக்காட்ட முடியும்.

அடிப்படையில் நாம் பல்வேறு வழிகளில் நமது துன்பங்களை, தவறான முடிவெடுப்பதை அல்லது பயத்தை, தோல்வியை எல்லாம் நம்மைப் பாதிக்க விடாதபடி செய்ய வேண்டும்.

முடியாத காரியம் இல்லை. எப்போது? மக்களாய் பிறந்த எல்லோரிடமும் அது மட்டுமல்ல விலங்குகளிடமும் தாவரங்களிடமும் கல் - மண்

போன்ற சடப்பொருள்களிலும் கூட எந்த மூலத்தி லிருந்து இவை எல்லாம் ஒரு நாள் வந்ததோ. அந்த 'இறை அம்சம்' நம்மிடமும் இருக்கிறது. இதை உணர்ந்து நம்பிச் செயல்பட்டால்-சிந்தித்தால்-வேண்டினால் போதும். முடியாத காரியமும் முடியும்.

வாழ்வில் வரும் கெட்ட சம்பவங்கள், கெட்டவையே அல்ல. அவற்றை மாற்றிவிடலாம்-நம் மனோபாவத்தை மாற்றுவதன் மூலம்; நம்முள் இருக்கும் இறை நம்பிக்கையின் மூலம்; இறைசக்தியை ஒரு முனைப்பட்ட மனத்துடன் அழைப்பதன் மூலம்.

சில வழிமுறைகளைப் பார்ப்போமா?

ஸ்ரீ அரவிந்தருக்கு அவருடைய குரு லேலே என்பவர் கூறுகிறார். அரவிந்தரின் கேள்வி இதுதான்:

"'தியானம் செய்யும்போது மனத்தில் பல்வேறு எண்ணங்கள் வந்து கொண்டிருக்கின்றனவே, என்ன செய்வது?"

குரு லேலே சொல்கிறார்: "வருகிற மாறுபட்ட, தேவையில்லாத கெட்ட எண்ணங்களை எல்லாம் கீழே தள்ளிக் கொண்டே இரு." மேஜையிலே குப்பை இருக்கிறது. அந்தக் குப்பையை எல்லாம் தள்ளிக் கொண்டிருந்தால் என்ன ஆகும்? மேஜை சுத்தமாகும். அது போல மனம் தூய்மையாகும். தூய்மையான மனத்தில் நம் வேண்டுகோளை வைத்தோமானால் நமக்குச் சரியான பதில் கிடைக்கும்.

நாம் சொல்வதை நமது மனம் நம்புகிறது. அதை ஏற்றுக் கொண்டு அந்தப் பாதையிலே கடைசி வரை நம்மை அழைத்துச் செல்கிறது.

கெட்டதை நினைத்தால் கெட்ட நிலைக்குத் தான் போவோம். எனவே கஷ்டம் வரும் போது கஷ்டத்தைக் கட்டி அழுது கொண்டிருப்பதில் பயனில்லை. மாற்றாக, வெற்றி கிடைத்த பழைய சம்பவத்தை நினைப்பதிலோ 'நிலைமை மாறும்' என்ற நம்பிக்கையிலோ அல்லது ஆண்டவனை வேண்டும் மனநிலையிலோ இருக்க வேண்டும். இது பலன் தருமா என்பதல்ல கேள்வி. மாறாக அழுது கொண்டே இருப்பது பலன் தருமா? என்பதை யோசிக்க வேண்டும். அத்துடன் நல்லதை எண்ணினால் நல்லது விளையும் என்ற உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும்.

மற்றும் ஓர் வழி: அதாவது அந்தக் கெட்ட எண்ணத்துடன் போரிடுகிறீர்கள். அதை துவம்சம் செய்கிறீர்கள். அப்படிப்பட்ட மனநிலையை உருவாக்கிக் கொண்டு அதற்கேற்ற ஒரு மனிதரை அல்லது ஒரு தெய்வத்தை உங்கள் முன் நிறுத்துங்கள்.

ஏன், ஸ்ரீமான் ஆஞ்சநேயர் உங்கள் நினைவுக்கு வரவில்லையா? அவரை நினையுங்கள். அவரை அணுகுங்கள்; அழையுங்கள். இராமாயணம் சுந்தர காண்டம் முழுவதிலும் ஆஞ்சநேயர் செய்யும் வெற்றிச் சம்பவங்களைத்தான் படிக்கிறோம். எனவே அவர் நமக்குச் சரியானவர். வெற்றிபெற அவரை நினையுங்கள், வழிபடுங்கள். மனவியல் உண்மை அதைத்தான் சொல்கிறது. நல்லது நினைத்தால் நல்லது விளையும் என்று. சோளம் போட்டால் சோளம்தானே விளையும்? பின் ஏன் கவலை?

நீங்கள் பூரண சிவ பக்தர் என்றா சொல்கிறீர்கள்? அப்படியானால் நீங்கள் முருகனைத் துணைக்கு அழையுங்கள்.

பாரதியார் அப்படித்தான் அழைத்தார். அவர் பாடுவதைக் கேளுங்கள்.

'சுற்றி நில்லாதே போ பகையே
துள்ளி வருகுது வேல்'

என்று பாடுகிறார்.

நீங்களும் சும்மா அந்த முருகனது வேலை வாங்கிக் கொண்டு மனத்தால் சுழற்றினீர்களானால் போதும்! இவை எல்லாம் 'வெறும் கதைகள்' என்று எண்ணிவிடாதீர்கள். இவை எல்லாம் நிரூபிக்கப்பட்ட உணமைகள். இதிலே வெற்றி எதில் தங்கி இருக்கிறது என்றால் நீங்கள் மனம் ஒன்றி எதைச் சொல்கிறீர்களோ அது உங்கள் உடல் பொருள் ஆவி அனைத்திலுமிருந்து கிளம்பும் உணர்வாக இருக்கவேண்டும்.

'நமக்கு ஏற்பட்ட கெடுதலுடன் நீங்கள் பேசிப் பாருங்கள்' என்கிறார் அப்பர் சுவாமிகள். என்ன பேசுவது? அதாவது நீங்கள் யார் என்று சொல்லுங்கள். எப்படிப்பட்ட வலிமை உங்களிடம் இருக்கிறது என்பதை எதிரிகள் தெரிந்து கொள்ளட்டும். "நம்மிடம் இல்லையே அப்படிப்பட்ட வலிமை?" என்று வருத்தப்படத் தேவை இல்லை.

அப்பர் சுவாமிகளின் அப்படிப்பட்ட ஒரு பாட்டு நமக்குத் தெம்பு கொடுக்கும்.

'ஓடும் கெடிலப் புனலும்
உடையார் ஒருவர் தமர்தாம்.

அஞ்சுவது யாதொன்று மில்லை;
அஞ்ச வருவது மில்லை!

கெடில நதி ஓடுகிறதே, திருப்பாதிரிப்புலியூரில் அதற்குச் சொந்தக்காரர் யார் தெரியுமா? அந்த மனிதரின் உறவினன் நான். நான் எதற்கும் பயப்படப் போவதில்லை! என்னைப் பயமுறுத்த யாராலும் முடியாது என்று சொல்லி, திருப்பாதிரிப்புலியூரில் உறையும் சிவபெருமானுக்குத்தான் சொந்தக்காரரர் என்பதைச் சொல்லி அப்பர் சுவாமிகள் மிரட்டு கிறார்! சில சமயம் காவல் துறையினர் நம்மை மடக்கும் போது நாம் காவல் துறையினரிடம் நமது செல்வாக்கு உள்ள உறவினர்கள் அதிகாரிகளாக இருப்பதைச் சொல்கிறோமே, அதைப் போல் சொல்கிறார், அப்பர் சுவாமிகள்! பின் ஏன் பயப்பட வேண்டும்? அப்பர் சுவாமிகளின் பாடலை ஓர் இரண்டு மூன்று முறைகள் மனதிற்குள் சொல்லிக் கொண்டால் போதும். மற்றவை எல்லாம் அவர் பார்த்துக் கொள்வார்!

ஞானசம்பந்தர் பாடிய கோளறு பதிகத்தைப் படித்திருப்பீர்கள் என நினைக்கிறேன். அதிலே, “எந்தவித நோய் வந்தாலும் சரி, எந்தவிதப் பகை வந்தாலும் சரி, அலைகடலிலே உங்களைத் தூக்கிப் போட்டாலும் சரி, ‘என்னை எதுவும் ஒன்றும் செய்யாது! அவை எல்லாம் நல்ல குணங்கள் கொண்டவை!’ என்று சொல்லுங்கள் **‘நல்லவை போல அவை திரும்பிப் போகும்!’** எதனால் என்றால் கங்கையையும் சந்திரனையும் கொன்றை மலரையும் சூடிய இறைவன் சிவபெருமான், என் உளமே புகுந்த

அதனால்!" என்று பதினொரு பாடல்களைப் பாடி இருக்கிறார் ஞானசம்பந்தர். அதை மனப்பாடம் செய்தீர்களானால் போதும். நோய்களிடமும் அப்படியே "நீ நல்லவனாயிற்றே" என்று சொல்லும் போது அந்த நோய் என்ற மனிதன் தன் பெயரைக் காப்பாற்றிக் கொள்ள திரும்பித்தான் போக வேண்டும்!

அமெரிக்காவில் ஒரு சம்பவம் நடந்தது. ஒரு பள்ளிக்கூடம், பள்ளி காலை எட்டு மணிக்குத் தொடங்கும். சற்று முன்னதாகவே பேருந்துகள் சென்று குழந்தைகளை அழைத்து வந்துவிடும். முன்பாக பள்ளிக்கு வந்த சிறுவர்கள் விளையாட இடம் ஒதுக்கப்பட்டிருக்கும். அதற்கு அருகிலேயே பட்டையான மஞ்சள் கோடிட்டு பஸ் வந்து நிற்கும் இடத்தைக் குறிப்பிட்டிருப்பார்கள். மாணவர்கள் அந்த மஞ்சள் கோடிட்ட பகுதியில் யாரும் விளை யாடக் கூடாது என்று எச்சரிக்கப்பட்டிருக்கிறார்கள்.

எனினும் அன்று அங்கே பல சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அப்போதுதான். பள்ளிக்கு வந்த பள்ளி முதல்வர் பார்த்தார், பையன்கள் அதற்குள் விளையாடிக் கொண்டிருப் பதை. அவருக்குக் கோபம் வந்தது. அவர்களை நோக்கி நடந்தார். "இங்கே விளையாடக் கூடாது என்று உங்களுக்குத் தெரியுமல்லவா?" என்றார். மாண வர்கள் முகத்தை தொங்கப் போட்டுக் கொண்டு பேசாமல் நின்றனர். "உங்கள் அனைவருக்கும் சரியான உதைதான் கேட்கிறது" என்றவருக்கு

திடீரென்று ஓர் எண்ணம்! "அது சரி! யார் உங்களை இங்கே விளையாட இழுத்து வந்தது? யார் உங்கள் தலைவன்?" என்றார். எல்லோரும் 'அசோகன்' என்று அவனைச் சுட்டிக் காட்டினார்கள். "அசோக் உன்னை என்ன செய்யப் போகிறேன் தெரியுமா? வா என் அறைக்கு! உன்னை நன்றாக உதைக்கப் போகிறேன்!" என்றார். சிறிது நேரம் அசாதாரண மௌனம். சிறுவன் அசோகன் அவர் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான். "நீங்கள் அப்படி அடிக்கின்ற மனிதர் இல்லை, மிஸ்டர் சர்ச்சில்!" என்றான். சர்ச்சில் என்பதுதான் பள்ளி முதல்வரின் பெயர். அவ்வளவுதான்! அங்கே மீண்டும் மௌனம். பள்ளி முதல்வர் முகத்திலே புன்னகை பிறந்தது. "மாணவன் அப்படிச் சொன்ன போது எனக்கு அவனை என்ன செய்வதென்றே தெரிய வில்லை" என்று சிரித்துக் கொண்டே ஒரு நாள் இந்த சம்பவத்தை விவரித்தார்.

"நீங்கள் நல்ல மனிதர் அல்லவா? ஏன் இப்படிப் பேசுகிறீர்கள். உங்களை நான் கோபமூட்டி விட்டேனா? மன்னிக்கவும்" என்று சொன்னோமானால், அவ்வளவுதான் எதிரில் நம்முடன் சண்டை போட வந்தவர்கள் கூட ஒரு கணம் யோசிப்பார்கள். சாந்தமடைவார்கள்!

அதனால்தான் சொல்கிறார்கள். நெருப்பை நெருப்பால் அணைக்க முடியாது. அதில் தண்ணீரை ஊற்றினால் தான் அணையும். அதேபோல கோபத்திற்கு எதிரான சக்தி, சாந்தமும் இனிமையும் தான். நயமான பேச்சும் உண்மையான நட்பும்தான். இவற்றால் எல்லாமே, மாறிவிடும்.

இரும்பு உற்பத்தி செய்யும் இரண்டு பெரிய நிறுவனங்கள். அமெரிக்காவின் ஒரே மாநிலத்தில் இருந்தன. இரண்டு நிறுவனங்களும் ஒன்றுடன் ஒன்று கடுமையாகப் போட்டியிட்டன.

ஒருவரை ஒருவர் எதிரியாகப் பாவித்தனர். இதனால் இரண்டு நிறுவனங்களுக்குமே நட்டம்தான்.

முதல் நிறுவனத்தின் புதிய நிர்வாகி தன் முதலாளியிடம் சொன்னார். "இப்படிப் போட்டி போடுவது நல்லதல்ல. நமக்கு ஏற்படுவது நஷ்டம் தான்! நாம் அந்த நிறுவனத்தின் தலைவரைப் பார்த்து பேசிவிட்டு வருவது நல்லது!" என்றார். "சரி அப்படியே செய்" என்றார் முதலாளி.

புது நிர்வாகி, போட்டி நிறுவனத்தின் சொந்தக் காரரைப் பார்க்கச் சென்றார். அவரை சந்தித்தார். போட்டி நிறுவனத்தின் சொந்தக்காரரிடம் சொன்னார் "ஐயா நாம் இப்படிப் போட்டிபோடுவது நல்லதில்லை. இரண்டு பேருக்கும் அதிக நஷ்டம் ஏற்படுகிறது. நம் இரண்டு நிறுவனங்களையும் இணைத்து விடலாம் என்று எங்கள் முதலாளி அபிப்பிராயப்படுகிறார். அந்த இரண்டு நிறுவனத் திற்கும் உங்கள் பெயரைத் தான் வைக்க வேண்டும் என்றும் எங்கள் முதலாளி பிரியப்படுகிறார்!" என்றார்.

அவ்வளவுதான்! எந்த எதிரி இப்போது என்ன சொல்ல முடியும்? உற்சாகமாக "சபாஷ்! அப்படியே செய்வோம்!" நான் வந்து உங்கள் தலைவருடன் பேசுகிறேன்" என்றார்.

முதலில் பெரிய பிரச்சினையாக, சங்கடமாக இடையூறாகத்தான் இருந்தது நிலைமை. ஆனால், புது நிர்வாகி எப்படி அதைக் கையாண்டார் என்பதைக் கவனியுங்கள்.

நம் நாட்டு மாபெரும் தலைவர் மகாத்மா காந்தி, ஆப்பிரிக்காவுக்குச் சென்று சந்தித்த முதல் வழக்கைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

தென் ஆப்பிரிக்காவில் தொழில் செய்துவந்த இரண்டு இந்திய தொழிலதிபர்களிடையே வாக்கு வாதம், பகைமை, மோதல்; முடிவில் நீதிமன்ற வழக்கில் போய் நின்றது. தொழிலதிபர் தாதா அப்துல்லா, மோகன் தாஸ் காந்தியைத் தன் வழக்கை நடத்தும்படி இந்தியாவிலிருந்து அழைக்கிறார். காந்தி அங்கு சென்றார். வழக்கு எப்படித் தொடங்கியது என்பதிலிருந்து எல்லாவற்றையும் படிக்கிறார். எதிர்க் கட்சிக்கு எது சாதகம். எது நியாயம் என்பதையும் படிக்கிறார். முடிவில் தாதா அப்துல்லா அவர்களிடம் சென்று "நாம் இதில் சமரசமாகப் போவதுதான் நமக்கும் நல்லது. அவருக்கும் நல்லது" என்கிறார். வழக்கின் எதிர்க்கட்சி நபரான தயாப் சேத் என்பவரிடம் நேரடியாகச் சென்று எல்லாவற்றையும் விளக்குகிறார். அதற்கு அவர், உங்கள் முதலாளி ஒத்துக் கொள்வாரா?" என்று கேட்கிறார். "நான் பேசுகிறேன்" என்று சொல்லி, இருவரிடமும் பேசி, ஓர் இனிய சூழலை உருவாக்கினார். இவ்வளவு நாள் நாம் ஒருவர் மீது ஒருவர் வழக்குப் போட்டோமே என்ற எண்ணத்தில் பேசமுடியாமல் இருந்தவர்கள்,

இப்போது ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டு கை குலுக்கினார்கள்!

எதிரி என்று யாரும் இல்லை! நியாயம் என்ற ஒன்றின் மூலம், அன்பு என்ற ஒன்றின் மூலம் இருவரும் சமரசம் பேசி நண்பர்களாகும் போது ஏற்படும் மகிழ்ச்சியை எண்ணிப் பாருங்கள்!

மகாத்மா காந்தியின் வாழ்வில் இப்படித் தொடங்கிய சமரசக் கொள்கையை எண்ணிப் பார்த்தால் இந்தக் குணம் அவருடைய இயல்பாகவே மாறிவிட்டதைப் பார்க்கலாம்.

அனுபவங்களிலிருந்து நாம் தெரிந்து கொள்ளும் அறிவு, உயர்தரமான வாழ்க்கை நெறியைக் கற்றுக் கொடுக்குமானால் நாம் அதை வாழ்நாள் பூராவும் கடைபிடிப்பதுதான் நல்லது 'அந்த நல்லறிவைக் கொடுப்பதற்காகத்தான் அந்த அனுபவமே வாழ்வில் ஏற்படுகிறது!' என்கிறார்கள். ஆன்மீக ஆராய்ச்சி யாளர்கள்.

தீய எண்ணங்களை மனத்திலிருந்து நீக்குவதைப் பற்றி வள்ளுவர் மிகத் தெளிவான ஓர் உண்மையை நம் முன் வைக்கிறார்.

மனத்துக்கண் மாசு இலன் ஆதல் அனைத்து அறன்;
ஆகுல நீரபிற

என்கிறார். அதாவது மனத்தில் ஏற்படும் அழுக்கு களை கெட்ட எண்ணங்களை அகற்றிக் கொண்டே வந்தோமானால் என்ன ஆகும்? மனத்தூய்மை கிடைக்கும். மனத்தூய்மை என்பது வெறும் வெற்றிட

மில்லை. அங்கே அழுக்குகள் எல்லாம் போய் விடும்போது நல்லவையே மிஞ்சும். நல்ல எண்ணங்கள் நம் வாழ்வையும் இந்தச் சமுதாய வாழ்வையும் உயர்த்தும் என்பதுதான் முக்கியமான செய்தி. குறள் காட்டும் வழி, ஓர் அருமையான முறைதான். எல்லா மதக் கொள்கைகளையும் நாம் பார்த்தோமானால் எல்லோருமே எப்படி வாழ்வது என்பதற்கான நல்ல நெறிகளையே உபதேசித்திருப் பதை உணரலாம்.

ஒரு காரியம் கெட்ட பாதையில் அல்லது நாம் எதிர்பாராத வழியில் சென்று தீமையை விளைவிக்கும் நிலை ஏற்படுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். இப்படி ஏற்படாமல் தவிர்க்க நம் முன்னோர்கள் சங்கல்பம் என்ற ஓர் அரிய அணுகுமுறையைச் சொல்லி இருக்கிறார்கள். எந்தக் காரியம் தொடங்குவ தானாலும் செய்வதானாலும் சாப்பிட உட்கார்ந் தாலும் படுக்கப்போனாலும், படிக்கத் தொடங்கும் போதும் மனத்தில், ‘இது எனக்கு நல்ல பலனைத் தருமாக’ என்று, ‘எது இருந்தால் நாம் சந்தோஷப் படுவோமோ எது இருந்தால் நமக்குப் பயன் உண்டோ, அது நடக்க அருள்புரி’ என்று ஒரு சிறு பிரார்த்தனையைச் செய்துவிட்டுத் தொடங்குவது நல்லது. இதுதான் சங்கல்பம்.

இதிலே மனவியல் உண்மை இருக்கிறது; ஏனெனில் எதை நாம் சொல்கிறோமோ, அதை மனம் நம்புகிறது; அதைச் செய்து முடிக்க உதவுகிறது என்பதுதான் மனவியல் உண்மை. ஏன் அதை நாம் பயன்படுத்தக் கூடாது?

கெட்டது, கெட்டதைத்தான் தரும்.

நல்லது, நல்லதைக் கொண்டு வரும்.

கனி இருக்க, காயைக் கடிப்பானேன்?

மனத்தில் நல்ல எண்ணங்களை விதையுங்கள். அதற்குத் தண்ணீர் ஊற்றுங்கள். நல்லதே நடக்கும் என்று நம்புங்கள். **நல்லது நடந்தவுடன் இறைவனுக்கு நன்றி கூறுங்கள்.** *இதுபற்றிய ஸ்ரீ அரவிந்த அன்னையின் பாடலுடன் இதை முடிப்போம்.*

'எல்லாம் நல்லபடி நடக்கும் – நம்
எண்ணம் சிறகடித்துப் பறக்கும்!
பொல்லாங்கு கீழ் விழுந்து துடிக்கும்–இந்தப்
புவியில் புதிய யுகம் பிறக்கும்!'

20

சாதனையின் வெற்றிகளை நிரந்தரமாக்க...

"எல்லாம் வழக்கம் போல் நன்றாக நடந்து கொண்டிருக்கும்" என்ற நினைப்பில் நாம் வாழ்க்கை நடத்துகிறோம். நாம் விரும்பிய ஓர் உச்ச நிலை அடைந்துவிட்டால், அது அப்படியே நிலையாகப் போய்க் கொண்டிருக்கும் என்று எண்ணிவிடுகிறோம். ஓரளவு நம்பிக்கை, ஓரளவு ஆணவம், 'வந்து விட்டோம்' என்ற பெருமிதம், "தலைகனம்" - அறிந்தோ அறியாமலோ வந்து சேர்கிறது. இது ஒரு 'மிதப்பு' மனநிலை, ஓர் அலட்சிய மனோபாவம்.

நம்மிடம் இருக்க வேண்டிய கண்காணிப்பு போய் விடுகிறது. இன்னும் விரிவாகச் சொல்லப் போனால், நம் தொழிலிலும் ஊர் உலகத்திலும் என்ன நடக்கிறது என்று பார்த்துக் கொண்டிருக்கும் 'விழிப்பு நிலை' போய்விடுகிறது. காய்கறிச் செடி பயிரிடுபவர் காலா காலத்தில் அதற்குத் தண்ணீர் விடுகிறார்; இல்லாவிட்டால் அது காய்ந்துவிடும். அதில் பூச்சி வந்திருக்கிறதா என்று பார்த்து மருந்து தெளிக்கிறார்.

ஆடு மாடு தின்று விடுமோ எனக் கவனித்து வேலி அமைக்கிறார். அதாவது விழித்த நிலையில் விழிப்புணர்வுடன் கண்காணிக்கிறார்.

இந்தக் கண்காணிப்பு என்பது நம் சொந்த வாழ்க்கைக்கும் தேவை, தொழிலுக்கும் தேவை; நாட்டை ஆளும் அரசிற்கும் தேவை. “சிறந்த முயற்சியிலும், உழைப்பிலும் பெறப்பட்ட வெற்றியை கண்காணிப்பு ஒன்றினால் மட்டுமே தக்க வைத்துக் கொள்ள முடியும்” என்று சொல்கிறார் ஜேம்ஸ் ஆலன். பலர் இந்த மாபெரும் உண்மையை அறிவதில்லை.

காங்கிரஸ் கட்சியின் தியாகிகளால் ஆளப்பட்ட நமது இந்திய நாடு அதன் ஆரம்ப காலகட்டத்தில் சுமார் இருபதாண்டுகள் நல்லவிதமாக, சிறப்பாக, ஊழலும், பதவி ஆசையும் இல்லாமல் ஆளப்பட்டது. போகப் போக ‘பொது நலத்திற்காகத்தான் தியாகம் செய்தோம்; ஆள முன் வந்தோம்’ என்பதை மறந்து விட்டார்கள். கோஷ்டி மனப்பான்மை, பதவி ஆசை - இவை தலைதூக்கின. அதைத் தடுத்து நிறுத்தி, கண்டித்து, தண்டித்து சரியான திசையில் செலுத்தும் பண்பாளர்கள், தலைவர்கள் இல்லாமல் போனால், நல்லவர் அல்லாதவர்கள் கையில் நாடு சேர்ந்து விடலாம்.

இன்றும், இந்த அவல நிலையில் அவதியுறும் நடுத்தர வர்க்கத்தினர் - கண்காணிக்கும் பொறுப்பின்றி, துணிவின்றி அநியாயங்களுக்குச் சாட்சியாய் இருக்கின்றனர்!!

தொழிலிலும் இப்படித்தான், இதே நிலைதான்; நான் இருந்த பெரிய நிறுவனத்திலும், ஏற்பட்டது —

தடுமாற்றம். அதை அடுத்து நலிவு. அதையும் கவனிக்காவிட்டால், கடையை மூட வேண்டிய நிலை. எங்கள் நிறுவனத்தில் தொழில் நுட்பம் இருந்தது. தொழில்நுட்பமே எல்லாம் அல்ல, திறமைசாலிகள் இருந்தார்கள். அப்படி இருந்தும் தோற்றோம்.

நான் வேலை செய்த நிறுவனம் தொடர்ந்து நான்கைந்து ஆண்டுகள் வளர்ந்தது; வேகமாக வளர்ந்தது உண்மைதான். ஆனால் அந்த வளர்ச்சியின் மீது ஆகாயக் கோட்டை கட்ட முடியுமா? நிறுவனத்தை அளவுக்கு மீறி விரிவாக்கினார்கள். எல்லோருக்குமே வேலை போய் விட்டது. முதலாளி உட்பட.

தன்னம்பிக்கை

தொழில் முனைவோரிடம் சில சமயம் அசாத்திய தன்னம்பிக்கை வந்து விடுகிறது. யதார்த்த நிலையை மறந்து விடுகிறார்கள், சரியாகப் பார்ப்ப தில்லை. எதுவுமே ஒரு கட்டுப்பாட்டுக்குள், ஓர் எல்லைக்குத்தான் வளர்கிறது என்கிற மகத்தான உண்மையை மறந்துவிடுகிறார்கள்.

சொன்னான் ஓர் அறிஞன்: “நீ ஆகாயத்தில் கோட்டை கட்டுவதில் தவறில்லை. கீழே சரியான அஸ்திவாரம் போடு என்றுதான் கேட்டுக் கொள் கிறேன்” என்று. தொழிலிலும் சரி, நாட்டிலும் சரி; பல சமயம் அகலக் கால் வைத்து விடுகிறார்கள். பின் திண்டாடுகிறார்கள்.

தென் அமெரிக்க நாடுகள் பலவும் உலக வங்கியிலிருந்து நிறைய கடன் வாங்கினார்கள். அதை

நாட்டின் முன்னேற்றத்திற்கென்று செல்வழித்தார்கள். ஆனால் கடனைத் திருப்பிக் கொடுக்க முடியவில்லை. அதே கதைதான் மலேசியாவுக்கும் ஏற்பட, பல நாடுகளில் உலக வங்கி நஷ்டத்தை ஏற்றுக் கொண்டு கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது.

வளர்ச்சிக்கும் ஓர் எல்லை இருக்கிறது. திடீரென ஒட்டு மாங்கன்று கூட, உடனே பழம் தந்து விடுவதில்லை. எவ்வளவுக்கெவ்வளவு கிளைகளால் மரம் தழைக்கப்படுகிறதோ அதைப் பொறுத்துத்தான் பழங்கள் காய்த்துக் குலுங்கும்.

சாதாரண செடியை வைத்துக் கொண்டு பருவ காலத்தையும் மீறி அதைச் செயல்பட வைக்க முடியாது.

கண்காணிப்புக்குத் தேவை பரந்த கண்ணோட்டம். ஒரு தொழிலில் பல்வேறு அம்சங்கள் இருக்கின்றன. அதாவது கச்சாப் பொருள் கிடைக்கும் இடம்; கச்சாப் பொருளின் விலை, அதன் தரம், அந்த கச்சாப் பொருளை விற்பனைப் பொருளாக மாற்றும் தொழில் திறன், தொழில்நுட்பம். அதை மேம்படுத்தும் புதுமை நாட்டம், அதை விற்பனை செய்தல், வாங்குபவரின் தேவை, அவரது மனோபாவம், போட்டியாளர்கள். இந்தத் தொழிலில் நமக்கு நிற்கும் லாபம்; தொழிலாளர்கள், அவர்களது தேவைகள், சம்பளம் — என்று பல்வேறு அம்சங்கள் இருக்கின்றன.

ஒரு நாட்டின் நிர்வாகத்திலும் அப்படியே. பல்வேறு அம்சங்கள் இருக்கின்றன. இதில் நாம் புரிந்து கொள்ள வேண்டிய முக்கியம் அடிப்படை என்ன

வெனில், "எல்லா அம்சங்களும் ஒன்றோடொன்று இணைந்து செயல்படுகின்றன" என்கிற பேருண்மையே யாகும்.

பிரபஞ்ச நோக்கில் ஒன்றோடொன்று இணைந்து செயல்படுகின்ற மன ஒருமைப்பாட்டைச் சொல்வதென்றால் 'பிரபஞ்ச லயம்' என்று கூறலாம். எல்லாம் இணைந்து ஓர் அழகிய ஒழுங்கில் ஓர் இசைக் கச்சேரி போலச் செயல்படுகிறது.

ஓர் இசைக் கச்சேரியில் தேவைப்படும் பரந்த கண்ணோட்டத்தைக் கண்காணிப்பது யார்? அவரைத் தான் 'கண்டக்டர்' என்கிறார்கள். அவர் என்ன பாடுபவரா? அல்லது வயலின் வாசிப்பவரா? இல்லை. எல்லாவற்றையும் அதனதன் இடத்தில் பொருத்தி ஓர் அற்புத இசையை எழுப்புபவர். இவர்தான் நல்லவர். அத்தனை பெரிய முக்கிய வேலைகளையும் அவர் செய்கிறார்; கண்காணிக் கிறார்.

பரந்த கண்ணோட்டம், பிரபஞ்ச லயம் என்பதை, இன்றைய வாழ்வின் விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால், Holistic Living என்று கூறலாம். அதாவது முழுமை கொண்ட வாழ்க்கை.

தொழிலாளர்களின் பயிற்சியில், வெகுநாள் வரை அவனுடைய உற்பத்தியைப் பெருக்கும் அம்சத்தை மட்டுமே கருத்தில் கொண்டு தொழிற் பயிற்சி கொடுத்தார்கள். இப்போது உணர்கிறார்கள்: "அவன் வெறும் யந்திரமல்ல; மனிதன்! மனிதனை

மனிதனாக அணுக வேண்டும்! அவனுக்குக் குடும்பம் இருக்கிறது. அந்தக் குடும்பத்தில் மனைவியும் குழந்தைகளும் இருக்கிறார்கள். அவனுக்கு நிம்மதியும் மன நிறைவும் இருக்கும் போதுதான் அவன் பூரண ஈடுபாட்டுடன் தொழிலில் அக்கறை செலுத்த முடியும்." எனவே இன்று தொழிலாளர் பயிற்சியில் தொழிலாளியை ஒரு முழு மனிதனாக்கும் முயற்சியை, பயிற்சியில் புகுத்தி இருக்கிறார்கள்.

பரந்த கண்ணோட்டம், பிரபஞ்ச லயம், முழுமையாகப் பார்க்கும் மனோபாவம் என்பதன் முக்கியத்துவத்தை - எல்லாவற்றையும் ஒரே சமயத்தில் கண்காணித்துக் கொண்டிருக்க வேண்டும் என்பதன் அவசியத்தை - விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களில் கூட காணலாம்.

நியூட்டன் புவியீர்ப்பு சக்தியைக் கண்டுபிடிக் கிறார். பின்பு இயற்கையின் ஓட்டத்திற்கான விதிகள் (Laws of Motion) மூன்றைக் கண்டுபிடிக்கிறார். "இன்று நியூட்டனின் பிரபஞ்ச தத்துவம் வெறும் யந்திர ரீதியிலான அணுகுமுறை, அதை அவ்வளவு எளிமை யான நிலையில் எடுத்துக் கொள்ள முடியாது" என்று அதைக் கடந்தும் சில உண்மைகளை, ஐன்ஸ்டைனும் மற்றவர்களும் கண்டுபிடித்தார்கள். நியூட்டனின் விதிகள் எல்லா நிலைக்கும் ஏற்புடைய தல்ல என்ற உண்மை வெளிவருகிறது.

என்ன நேரிடுகிறது? பலவும் இணைந்த நிலையைப் பார்க்காமல் ஒரு தனி அம்சத்தை மட்டுமே கண்டார் நியூட்டன்.

இப்படி எல்லாவற்றையும் கவனித்து, எல்லா வற்றையும் கணக்கில் எடுத்துக் கொண்டு செயல் படுவதைத்தான் கண்காணிப்பு என்கிறோம்.

விஞ்ஞானிகள் பல சமயம் ஒரு பொருளை மட்டுமே உற்று நோக்குகிறார்கள். அதன் மொத்தத் தொடர்பை மறந்து விடுகிறார்கள்; விட்டு விடு கிறார்கள். இதன் விளைவாக மறுபடியும் ஒரு விஞ்ஞானி வருகிறார். எல்லாம் இணைந்த தன்மையை மனத்தில் கொண்டு ஒரு புதிய விதியைக் கண்டுபிடிக்கிறார்.

பரந்த கண்ணோட்டம், பிரபஞ்ச லயம், முழுமை, தனித்தும் இணைத்தும் செயல்படும் பிரபஞ்சம்; அதன் ஒழுங்கு, அதை அன்றாட வாழ்க்கையில் மனிதன் கொண்டு வாழ்வதைத்தான் கண்காணிப்பு என்ற வார்த்தையால் சொல்கிறார்கள்.

நாம் மாறி வரும் உலகில் வாழ்கிறோம். கணத்துக்குக் கணம் மாறி வரும் உலகம். மக்களின் தேவைகள் மாறுகின்றன; ருசி மாறுகிறது. ஆகவே மனிதன் மாற்றத்திற்கு - புதிய சூழ்நிலைக்கு - ஈடுகொடுக்க வேண்டியிருக்கிறது. ஈடு கொடுக்க முடியாதவன் விமான யுகத்தில், மாட்டு வண்டி போதும் என்று நினைப்பவன் !

மாற்றத்திற்கு ஈடு கொடுப்பது என்பது ஒரு புதிய துவக்கம். தொழிலில் புதிய பொருள். அரசியலில் புதிய கொள்கை; விஞ்ஞானத்தில் புதியன காணும் மனோபாவம். அந்தப் புதியன காணும் மனோபாவம் எங்கிருந்து துவங்குகிறது ? தேவையிலிருந்து.

அது கண்காணிப்பினால்தான் சரியாக வளர் கிறது.

வீட்டில் இருக்கும் பெண்மணி, அடுப்பில் பாலை வைத்திருக்கிறார். கீழே குழந்தை விளையாடிக் கொண்டிருக்கிறது. அடுத்த அறையில் டெலிபோன் அலறுகிறது; முன்பக்கம் யாரோ கதவைத் தட்டு கிறார்கள்.

இதையெல்லாம் எப்படிச் சமாளிக்கிறார் ஒரு பெண்? குழந்தையை இடுப்பில் எடுத்துக் கொள் கிறார். அடுப்பை அணைக்கிறார். டெலிபோனில் கொஞ்சம் இருங்கள் என்று சொல்லி விட்டு, கதவைப் போய் திறந்து விசாரிக்கிறார். இதுபோல எல்லா வற்றையும் கண்காணித்து, அதைச் சமாளிக்கும் விதம் வாழ்வின் எல்லாத் துறைகளிலும் தேவைப்படுகிறது.

கண்காணிப்பு என்பதை Team work-கிற்கு இணையாகக் கூறலாம். முழுமை என்பது கூட்டு முயற்சியின் விளைவு. முழுமையின் ஆழத்தில், அதன் முதல் கட்டமாக இருப்பதுதான் கண்காணிப்பு.

தமிழ்நாட்டில் அவதானிகள் இருக்கிறார்கள். கவனகர்கள். ஒரு பதினாறு நபர்கள், வெவ்வேறு அம்சத்தை வெவ்வேறு வரிசையில் சொல்லும் போதும், கவனகர் எல்லாவற்றையும் அதனதன் இடத்தில் பொருத்தி, கவனத்துடன் மீண்டும் சரி யாகத் தருகிறார். அதுதான் முழுமை. கண்காணிப்பு முழுமை தருகிறது.

கண்காணிப்புக்கு அடுத்த கட்டம். தொடர் முன்னேற்றம் என்பதாகும். "ஒரேயடியான முன்னேற்றம்" என்று யாரும் சொல்லி விடவில்லை. ஒரேயடியான முன்னேற்றம் என்பது பணக்காரராகி, அந்த நிலையிலேயே நின்று விடுவதாகும்.

'தொடர் முன்னேற்றம்' என்ற சொல்லைக் கவனியுங்கள். இதைத் தான் 'கெய்சான்' என்று ஜப்பானிய நிர்வாகப் பயிற்சியில் அறிமுகப்படுத்தினார்கள்.

தனிமனிதனாகட்டும். தொழிலாகட்டும். நாட்டின் வாழ்வாகட்டும், அனைத்துமே - இப் பிரபஞ்சமே பரிணாம வளர்ச்சியின் அடிப்படையில் தான் இயங்குகிறது. இது ஆன்மிகத்தில் முடிகிறது. நம்மைச் சுற்றிலும் நமக்கு உள்ளேயும் ஒரு மாபெரும் சக்தி இருக்கிறது (ஆண்டவன்) என்று அதனுடைய உதவியில் வாழ்க்கை நடத்தும்போது மனிதன் பூரணத்துவம் பெறுகிறான். எனவே இயற்கைக்கு ஒத்துப் போகின்ற வழியில் நாம் செயல்பட வேண்டும். இல்லாவிட்டால் நாம் கை விடப்படுவோம். நம்மை விட்டுவிட்டு உலகம் ஓடிக் கொண்டிருக்கும்.

அதனால்தான் சொல்கிறார்கள். நிர்வாகவியல் அறிஞர்கள், "நின்ற இடத்தில் இருப்பதற்குக் கூட நாம் ஓடிக் கொண்டிருக்க வேண்டும்" என்று, அதாவது 'சென்ற ஆண்டு, ஓர் அளவுக்கு லாபம் வந்ததென்றால், அதுதான் வரும் இந்த ஆண்டும்' என்று நாம் சும்மா கையைக் கட்டிக் கொண்டு இருந்துவிட முடியாது. அந்த நிலையை - சென்ற ஆண்டு வருமானத்தை - தக்க வைத்துக் கொள்வதற்கும் நாம் பாடுபட

வேண்டும். அதற்கான முயற்சிகளையும் செயல்களையும் செய்து கொண்டே இருக்க வேண்டும்.

ஓர் உயர்மனிதன் என்ன வாழ்க்கை நெறிகளைக் கொள்ள வேண்டும் என்று பட்டியலிடுகிறது பகவத் கீதை (கீதை 18-42), அந்த ஒன்பது குணங்களில் மூன்றாவது குணமாகக் குறிப்பிடப்படுவது கண்காணிப்பு என்பதாகும்.

மகாராஷ்டிர மாநிலத்தில் ஒரு நம்பிக்கை உண்டு. அதாவது பிறந்த குழந்தையை ஆறாம் நாளில் துர்க்கை கொன்றுவிடும் அபாயமுண்டு என்பதால் அந்த அறையில் தீபமேற்றி, அதை அணையாமல் கண்காணித்து, அந்தத் தீபத்தைக் காப்பார்கள். அதுபோல ஆண்டவனுடைய சொரூபத்தை மனத்திலும், நாமத்தை வாயால் உச்சரிப்பதன் மூலமும், நாம் நம்முள் இருத்த வேண்டும்.

தவம் செய்பவர் எப்படித் தன் எண்ணங்களைக் கண்காணிக்கிறார் என்பதைக் கவனியுங்கள். மனிதன் உயர்நிலை அடைவதற்கு இந்தக் கண்காணிப்பு தேவை என்கிறார் கிருஷ்ணபரமாத்மா கீதையில் வேத வாக்காக.

உழைப்பாலும் நேர்மையாலும் பெறப்பட்ட வெற்றியை, கண்காணிப்பு ஒன்றினால் மட்டுமே தக்க வைத்துக் கொள்ள முடியும். இதை ஏதோ ஒரு சாதாரண விஷயத்தைப் படித்துவிட்டுப் போவது போல பார்க்கிறார்களே தவிர, இதன் முக்கியத்துவத்தைப் பலரும் உணர்வதில்லை.

அரசியல் அமைப்பைக் காக்கும் முக்கியமான தூண்களில் நான்காவது தூண் இந்தக் கண்காணிப்புத்

தான், அதற்குத் தான் பத்திரிகைகளும், அறிஞர்களும் இருக்கிறார்கள். சற்று யோசித்துப் பாருங்கள்.

அரசு போடும் சமுதாய நலத் திட்டங்கள் பலன் தருகின்றனவா இல்லையா என்பதைக் கண் காணிக்கும் உரிமை மக்களுக்கு உண்டு.

லஞ்சம், ஊழல் நிர்வாகச் சீர்குலைவுகள் அங்கங்கே தட்டிக் கேட்கப்பட வேண்டும். நீதிமன்றத் திற்கு எடுத்துச் சென்று அவர்களுக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்கும் உரிமை மக்களுக்கு உண்டு.

அமைச்சர்களும், அதிகாரிகளும் ஆண்டாண்டு தோறும் தம் சொத்துக்களை அறிவித்தால் தான் அவர் பணம் பண்ணியிருக்கிறாரா அல்லது நேர்மையான வரா என்று நாம் தீர்மானிக்க முடியும். இந்தக் கண்காணிப்பு தேவை.

சுற்றுப்புறச் சூழல், கேடு அடையாமல் நாம் கண்காணித்து வர வேண்டும்.

இப்படி பல விஷயங்களிலும் 'ராமன் ஆண்டா லென்ன, ராவணன் ஆண்டாலென்ன' என்றில்லாமல், இன்று மக்கள் பொறுப்பை ஏற்றுக் கண்காணிப்பது தான் ஜனநாயகம். இதில் நீதிமன்றங்களும், பத்திரிகை களும் நமக்குத் துணையாக இன்று இருக்கின்றன.

கடைசியாக, தலைவர்களும் சரி, தனி மனிதனும் சரி, தன்னைத் தானே கண்காணிக்க வேண்டும். நல்லது கெட்டதைப் புரிந்து கொண்டு, கெட்டதை விலக்கும் விவேகமும் கண்காணிப்பும் நமக்குத் தேவை.

தன்னைக் கண்காணிக்கத் தவறிய நிலை ஒரு நாட்டின் தலைவனுக்கும் வரும் என்பதற்கு

உதாரணம் பில் கிளிண்டன் என்ற அமெரிக்க நாட்டின் முன்னாள் தலைவர். கணக்கு வழக்கு களையும், உறவுகளையும் அவர் சரியாக வைத்துக் கொள்ளவில்லை என்பதற்காகப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அவர்மீது கண்டனத் தீர்மானம் நிறை வேற்றினார்கள்!

ஆகவே, விழிப்புணர்வு பெறுவோம்; கண் காணிப்போம், நம்மையும் நாட்டையும்!

21

அதிமன சக்தி!

பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு எதிராக ஒரு தீவிரவாதியாகச் செயல்பட்டவர் அரவிந்தர். வங்க மாநிலத்தில் ஹேமசந்திரதாஸ் என்பவர் ஒரு புரட்சி இயக்கத்தை நடத்தி வந்தார். அதிலே இளைஞர் களுக்குப் புரட்சிக்கான பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது. அதிலே சேர்ந்த அரவிந்தர் ஒரு கையில் கீதைப் புத்தகத்தையும் மறு கையில் வாளையும் வைத்துக் கொண்டு "தாய்த் திருநாட்டின் விடுதலைக்குப் பாடுபடுவேன்" என்று சத்தியப் பிரமாணம் செய்தவர், புரட்சி தேசியவாத இயக்கத்தைச் சேர்ந்த இளைஞர் களுக்கெல்லாம் தலைவராகவும் வழிகாட்டியாகவும் இருந்தவர் அரவிந்தர்.

அப்படிப்பட்ட அரவிந்தர் சிறைச்சாலையில் ஏற்பட்ட ஆன்மிக அனுபவங்களினாலும் சிறைச் சாலையில் விவேகானந்தரின் தரிசனம் கிடைத்து அவருடன் பேசிய நிகழ்ச்சியாலும் ஆன்மிகவாதியாக மாறினார். புரட்சி இயக்கத்தைச் சேர்ந்த இளைஞர்கள் செய்த கொலைக்குக் காரணகர்த்தா

அரவிந்தரே என்று காவல்துறை அவரைத் தேடிக் கொண்டிருந்தார்கள். அரவிந்தர் நண்பர்களுடைய உதவியினால் பிரிட்டிஷ் எல்லையைக் கடந்து பாண்டிச்சேரிக்கு வந்து தங்குகிறார்.

சில ஆண்டுகள் கழித்து வங்காளத்தில் அவரது குழுவில் இருந்த ஒரு மனிதர் பாண்டிச்சேரி வருகிறார். அரவிந்தரைச் சந்திக்கிறார், கேட்கிறார் "அங்கே நாங்கள் எல்லாம் நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடிக் கொண்டிருக்கிறோம். மக்கள் ரத்தம் சிந்துகிறார்கள். நீங்கள் இங்கே வந்து சும்மா உட்கார்ந் திருந்தால் எப்படி?" அரவிந்தரைக் கேட்கிறார். "நான் சும்மா உட்கார்ந்திருக்கிறேன் என்று நீ ஏன் நினைக் கிறாய்?" என்று வருகிறது பதில்.

அரவிந்தர் என்ன செய்து கொண்டிருப்பதாகச் சொல்கிறார்?

அவருடைய பதில் பலருக்கும் புரியாத ஒன்று தான். புரிந்தாலும் நம்ப முடியாத ஒன்று! அவர் சொல்வதை ஏற்றுக் கொள்வதற்கு நாம் முதலில் எண்ணங்களைப் பற்றிச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். 'மனோ சக்தியால் பல காரியங்களைச் செய்ய முடியும். பேச்சு, சக்தியைக் குறைக்கிறது. மௌனம் சக்தியைச் சேமிக்கிறது. எண்ணங்கள் சக்தி மிகுந்தவை. யாரைப் பற்றி அல்லது எதைப் பற்றி நமது சிந்தனைகள் இருக்கின்றனவோ அவர்களைப் போய் நம் எண்ணங்கள் தொடும். எண்ணங்கள் ஓட்டம் நிறைந்தவை. எந்தக் காரியத்திற்காக எண்ணங்கள் நினைப்பட்டதோ அதன் விளைவை, பலனை உருவாக்கும் குணம் கொண்டவை. சாதனைதான்

கடைசி நிலை' என்றெல்லாம் அரவிந்தர் விரிவாக விளக்கவில்லை. ஆனால் அதுதான் அவர் பதில் தெரிவிக்கும் பொருள்.

"தர்மம் தாழ்ந்து அதர்மம் தலைதூக்கும் போதெல்லாம் நான் அவதரிக்கிறேன்" என்று கிருஷ்ண பரமாத்மா சொல்வது சாதாரணமான கதாபாத்திரப் பேச்சல்ல. இயற்கை தன்னைத்தானே சரி செய்து கொள்கிறது. அப்படிச் சரி செய்ய, உயர் மனிதர்கள்தான் கருவியாக காலந்தோறும் வருகிறார்கள். வழி காட்டுகிறார்கள்.

மனித மனம்தான் எண்ணங்களின் பிறப்பிடம். அந்த மனத்தைப் பற்றி எழுதும் மனவியல் அறிஞர்கள் "மனமானது லட்சியத்தை நாடி ஓடும் ஒரு சக்தி. அது பாதையை விட்டு நழுவும் போதெல்லாம் தன்னைத் தானே சரிசெய்து கொள்கிறது" என்று கூறுகிறார்கள். **அரசியல் போராட்டத்தில் ஈடுபடுவதை விட.. ஆன்மிகத்தின் மூலம் நாட்டுக்கு அதிகம் செய்ய முடியும்** என்ற எண்ணத்திற்கு வருகிறார் அரவிந்தர்.

"இவை எல்லாம் சாத்தியமா?" என்று பலர் கேட்கலாம். அரவிந்த அன்னை 'ஒளி பொருந்திய பாதை' என்ற நூலில், 'உலகில் சாதிக்கப்பட்டவை அனைத்தும், செயலுக்கு அப்பால் மோனத்தில் நின்றவர்களாலேயே சாதிக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் தெய்வ சக்திகளின் கருவிகள். அவர்களே உலகை மாற்றும் சக்தி பெற்றவர்கள்' என்று எழுதுகிறார்.

கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். ஏசு கிறிஸ்துவும், புத்தர்பிரானும் இவ்வுலகிற்குத் தங்களுடன்

என்ன கொண்டு வந்தார்கள்? எதனால், இவ்வுலகை மாற்றினார்கள்? எண்ணங்கள், எண்ணங்கள்தான்! அதைத்தான் கொண்டு வந்தார்கள்.

அதைத்தான் உலகிற்கு அளித்தார்கள். பில்லி சூனியமும் மற்றும் மூட நம்பிக்கைகளும் பயமும் நிலவியிருந்த மக்களிடையே பெரும் மனமாற்றத்தை உண்டு பண்ணினார்கள்.

மக்கள் சமுதாயத்தையே ஏசு என்ற ஒரு மனிதர், புத்தர் என்ற ஒரு மனிதர் தன் எண்ணங்களால் மாற்ற முடியும் என்றால், அநியாயமாக ஒரு மக்கள் சமுதாயத்தையே அடிமையாக வைத்திருக்கும் அரசனின் அல்லது தலைவனின் மனத்தை மாற்றுவது என்ன முடியாத காரியமா? அப்படித்தான் தொடர்ந்து தன் தவ வலிமையினால் இந்தியா சுதந்திரம் பெறப் பல காரியங்களை அரவிந்தர் செய்து வந்தார்; செய்து வருகிறார். அதைத்தான் அவர் அந்த மனிதருக்கு நூல்களாகத் தந்திருக்கிறார்.

"சுதந்திரம் வாங்கிக் கொடுத்ததே அரவிந்தரின் தவ வலிமையால்தான் என்று சொல்கிறீர்களா?" என்று பலர் கேட்கக் கூடும்.

மகாத்மா காந்தி, நேரு, படேல், ராஜாஜி போன்றவர்கள் செய்த தியாகங்களை யாரும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது. நாம் வாழும் உலகம் - செயலால் ஆன உலகம். செயல்பட்டால்தான் காரியம் நடக்கும். செயல், உழைப்பு, தியாகம் இவற்றால்தான் சுதந்திரம் பெறப்பட்டது. செயலுக்கு அப்பால் மகாத்மா காந்தி உபயோகித்த சாதனங்களை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

காந்தி உபயோகித்த அஹிம்சைத் தத்துவத்தைக் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். "பிறருக்கு எந்தவித இம்சையும் செய்யாமல் நாம் போராட்டம் நடத்துவோம்" என்றால் என்ன அர்த்தம்? இம்சை என்பது துன்பம் விளைவிக்கும் என்னும் செயல். நாம் பிறருக்கு இம்சை செய்யாது போராட்டம் நடத்துகிறோம் என்றால் அது "செயலற்ற செயல்". உண்ணா விரதம் இருக்கும்போது நாம் நமது ஒற்றுமையையும் மன உறுதியையும் தான் காட்டுகிறோம். எந்தக் கெட்ட செயலும் செயலற்ற செயல்.

இந்த அஹிம்சைப் போராட்டத்தில் என்ன அடங்கி இருக்கிறது? வைராக்கியம். அந்த வைராக்கியம் எங்கிருந்து வருகிறது? "ஆம்! நிச்சயம் இது நடக்கும்" என்று ஒரு காரியத்தைப் பற்றித் திரும்பத் திரும்ப எண்ணும் போது எண்ணம் வலிமை பெறுகிறது - வைராக்கியம் என்பது அசைக்க முடியாத நம்பிக்கை. இந்த அசைக்க முடியாத நம்பிக்கைதான் சளைக்காத மனமாக விடாமுயற்சியாக அமைதியும் சாந்தமும் சேர்ந்து செயல் படுகின்றன.

மனத்தில் எண்ணங்கள் வலிமை பெற்று எழும் போது, நாம் யாரைப் பற்றி எண்ணுகிறோமோ அவர்களின் மனதைத் தொடுகிறது. இந்த மனவலிமை, மகாத்மா காந்திக்கு எங்கிருந்து வந்தது? "நம் பக்கம் நியாயம் இருக்கிறது, உண்மை இருக்கிறது." என்ற எண்ணங்களிலிருந்து தான் வருகிறது. அதைத்தான் காந்தியிடம் பார்க்கிறோம்.

பதஞ்சலி, யோக சூத்திரத்திலே: "மனிதன் தன் மன எண்ணங்களின் மூலமும், மனதைப் பேரமைதி நிலையில் வைத்திருப்பதன் மூலமும் சித்திகளை எல்லாம் அடையலாம்" என்பதை மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எழுதி இருக்கிறார்.

இந்த அசைக்க முடியாத நம்பிக்கையைத்தான் இந்தியச் சுதந்திரத்திற்கு அவர் உபயோகித்தார். ஓரிடத்தில் அரவிந்தர் "எல்லாம் - காரியங்கள் எல்லாம் - சுதந்திரத்தை நோக்கிச் சரியான பாதையில் போய்க் கொண்டிருக்கின்றன. இன்னும் சில ஆண்டு களில் இந்தியா சுதந்திரம் பெற்றுவிடும்" என்று அவர் தீர்க்கமாக 10–15 ஆண்டுகளுக்கு முன்னதாகவே குறிப்பிட்டிருக்கின்ற செய்தி அவரது நூலில் காணப்படுகிறது. எப்படி அரவிந்தரால் பின்னால் வரக் கூடிய சம்பவங்களை முன்கூட்டியே பார்க்க முடிகிறது?

தமிழிலே விவேகம் என்ற வார்த்தையும் ஞானம் என்ற வார்த்தையும் இருக்கின்றன. நல்லது கெட்டதைப் புரிந்து கொள்வதுதான் விவேகம். இது நாம் வாழும் உலகில் மிகவும் தேவைப்படுகின்ற ஒன்று. ஆனால், ஞானம் என்பது உள்ளதை உள்ளபடி அறியும் அறிவு. அரவிந்தர் இன்றைய நிலையைக் கடந்து, கால எல்லைகளைக் கடந்து பார்க்கிறார். மனத்தைப் பேரமைதி நிலையில் வைத்துக் கொள்ளும் போது எங்கும் அமைதி, பேரமைதி எங்கும் சாந்தம், எங்கும் அசைவு என்பதே இல்லை. அந்த நிலை, பொருளைக் கடந்த நிலை. பொருள் நிலைக்கு

அப்பால் உள்ளதைத்தான் "பரம் பொருள்" என்று சொல்கிறோம் - பொருளைக் கடந்த நிலை.

அதுதான் இப்பிரபஞ்சத்தின் தோற்ற நிலை. எங்கும் வெட்ட வெளி, சூன்யம், பேரமைதி நிலை அங்கே நினைத்த மாத்திரத்தில் வருங்காலத்தில் நடக்கப்போவதையும் — உள்ளதை உள்ளபடி அப்போதே பார்க்கலாம்.

நினைத்த, மாத்திரத்தில் விரும்பிய இடத்தில் இருக்கிறோம் என்றால், அங்கே இறந்த காலம் இல்லை. எதிர்காலம் இல்லை. எல்லாமே நிகழ் காலத்தில்தான் நடக்கிறது.

அரவிந்தர் தன் தியானத்தின் மூலம் அந்தப் பேரமைதி நிலைக்கு காலம் கடந்த நிலைக்கு வெட்ட வெளி நிலைக்குப் போகிறார். பார்க்கிறார். அப்படிப் பார்ப்பதன் மூலம் சுதந்திரம் வரப் போவதை வந்துவிட்டது போல பார்க்கிறார்.

அதே போன்ற ஒரு சம்பவம் மகான் சேஷாத்ரி வாழ்விலும் நடக்கிறது. சேஷாத்ரி 14 வயது இளைஞராக இருந்தபோது அவருடைய சிறிய தந்தைக்கு எண்ணெய் தேய்த்துக் கொண்டிருக்கிறார். சற்று நேரத்தில் எதற்காகவோ வெளியே ஓடுகிறார். பின் திரும்பி வருகிறார். "எங்கேடா ஓடினாய்?" என்று சிறிய தந்தை கேட்கிறார். "தேவர்கள் எல்லாம் பாடிக் கொண்டு ஆகாயத்தில் போகிறார்கள். அதைப் பார்க்கப் போனேன்" என்கிறார் சேஷாத்ரி. சிறிய தந்தை முற்றத்தில் இறங்கி வானைப் பார்த்துவிட்டு "எனக்குத் தெரியவில்லை!" என்கிறார். அதற்கு

சேஷாத்ரி "சித்தப்பா! அதற்கு மனம் சுத்தமாக இருக்க வேண்டும்! அப்பத்தான் தெரியும்!" என்கிறார்.

இப்போது மன சாதனைக்கான மற்றும் ஓர் அம்சத்தைத் தெரிந்து கொள்கிறோம். "மனம் சுத்தமாக - தூய்மையாக - இருக்க வேண்டும்" என்பதுதான் அது. இதையேதான் திருவள்ளுவர் "மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்" என்று சொல்கிறார். அதாவது "வாழ்வின் உயர்ந்த தர்மம், உயர்ந்த நெறி தூய்மையான மனத்துடன் வாழ்வதுதான்" என்கிறார். அப்படி தேவர்களையும் தேவதைகளையும் நாம் நம், கண்களால் பார்க்க முடியுமா என்ற கேள்வியும் ஆசையும் நம்முள் எழுகிறது.

அரவிந்த அன்னையுடன் இருந்த ஒரு சீடர், அரவிந்த அன்னை வாழ்வில் நடந்த ஒரு சிறு சம்பவத்தைக் குறிப்பிடுகிறார். "காலை 11 மணி மக்கள் அன்னையிடம் ஆசி பெற, ஆலோசனை பெற நிறையப் பேர் அவருடைய நேரத்தை எடுத்துக் கொள் கிறார்கள். அவருக்குச் சற்று கோபம் ஏற்படுகிறது. அரவிந்த அன்னை பிறர் இருப்பதை மறந்து "இதோ பாருங்கள்! நீங்கள் என்னுடைய நேரத்தை இப்படி எடுத்துக் கொள்கிறீர்கள். என்னுடன் பேசுவதற்காக அங்கே தேவர்கள் காத்திருக்கிறார்கள்" என்று சொல்கிறார்.

தேவர்கள் காத்திருக்கிறார்களா? ஆம்!

மனத்திற்கு அவ்வளவு சக்தி உண்டு. இதெல்லாம் நடக்கக் கூடிய காரியம்தான். வேகமாக வளரும் மேல்நாட்டு விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் எல்லாம்,

நமது ஞானிகளும் யோகிகளும் அன்று எழுதி வைத்து விட்டுப் போன உண்மைகளுக்கு இன்று விஞ்ஞானத்தின் அங்கீகார முத்திரையைக் குத்தி வருகின்றன என்றுதான் சொல்ல வேண்டும்.

அடுத்து ஓர் அதிசயமான சம்பவம் ஸ்ரீ அரவிந்தர் வாழ்வில் நிகழ்கிறது. இரண்டாவது உலக மகாயுத்தம் துவங்குகிறது. ஜெர்மன் நாட்டின் சர்வாதிகாரி ஹிட்லர் உலக நாடுகளை வெல்ல வேண்டும் என்று தீர்மானிக்கிறார். அண்டையிலுள்ள பலநாடுகளைப் பிடித்துவிட்டார். மிகப் பெரிய பிரான்சு நாடு வீழ்ந்து ஹிட்லரின் பிடிக்குள் வந்து விட்டது. இத்தாலியின் சர்வாதிகாரியான முசோலினியுடன் ஓர் உடன்பாடு செய்து கொள்கிறார். அது போலவே தன்னைப் பாதுகாத்துக் கொள்ள, ரஷ்யாவுடன் ஓர் உடன்பாடு செய்து கொள்கிறார். அடுத்த பெரிய வல்லரசு இங்கிலாந்துதான். இங்கிலாந்தைத் தோற்கடித்துவிட்டால் இந்தியா உட்பட இங்கிலாந்தின் சாம்ராஜ்யமே கவிழ்ந்து விடும்.

ஹிட்லர், உலகின் கெட்ட சக்தி என்பது அரவிந்தருக்குத் தெளிவாகத் தெரிகிறது. ஹிட்லரின் கொடுங்கோல் உலகின் தலைவிதியையே மாற்றிவிடும் என்ற பயம் இருக்கிறது.

ஹிட்லர் உடனடியாக இங்கிலாந்தின் மீது படையெடுக்கத் தீர்மானிக்கிறார். அனால், வேறு பல எதிர்பாராத காரணங்களினால் படையெடுப்பை பத்து நாள் தள்ளிப் போட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. அந்தப் பத்து நாளில் இங்கிலாந்தின்

பிரதமரான சர்ச்சில், போர்ப்படையையும், விமானப் படைகளையும் தயார் செய்து விடுகிறார். இங்கிலாந்திடம் 173 விமானங்கள். ஹிட்லரிடம் 143 விமானங்கள் இருந்தன. நேச நாடுகள் இங்கிலாந்துக்கு உதவி செய்கின்றன. சர்ச்சிலிடம் இப்போது 173 விமானங்கள் போரிட தயாராக இருக்கின்றன. போரில் ஹிட்லர் தோற்றுப்போகிறார். இதுதான் நடந்த சரித்திரம். ஹிட்லர் உடனே போரிடாமல் 10 நாள் தாமதித்தது இங்கிலாந்து நாட்டிற்கு பேருதவியாக போயிற்று.

அரவிந்தருக்கு மருத்துவராகத் தன் வாழ்நாளை அர்ப்பணித்துக் கொண்ட டாக்டர் நீரத்பரன். அந்தக் காலத்தில் ஒவ்வொரு நாளும் அரவிந்தர் மற்றவர் களுடன் பேசியதை எல்லாம் குறிப்பெடுத்துக் கொண்டு "அது ஒரு பொற்காலம்" என்ற நூலை எழுதி இருக்கிறார். ஹிட்லர் போரைத் துவக்கிய கால கட்டத்தில், ஒரு நாள் அரவிந்தர் குளியலறையிலிருந்து வெளிவரும் போது கீழே விழுந்து ஓர் ஆறுமாத காலம் நடக்க முடியாமல் போகிறது. "நான் செய்ததை அசுர சக்திகள் விரும்பவில்லை" என்று, தான் தள்ளப் பட்டதைப் பற்றிக் குறிப்பிடுகிறார் அரவிந்தர்.

மேல் உலகத்தில்கூட அசுர சக்திகள் இருக் கின்றனவா என்று பலரும் ஆச்சரியப்படக்கூடும்.

இப்பிரபஞ்சம் நன்மை, தீமை என்ற இரட்டைத் தன்மை கொண்டது. எங்கு தேவர்கள் இருக்கிறார் களோ அங்கே அசுர சக்திகளும் இருக்கத்தான் செய்யும். 'அங்கே அந்த அசுர சக்திகள் ஹிட்லருக்கு உதவின. அதற்கு இடையூறாக இருந்த அரவிந்தரைக் கீழே தள்ளிவிட்டன' என்பதை அரவிந்தரே

கூறுகிறார். உலக சரித்திரத்தையே மாற்றும் சம்பவங்களை மனித மனம் செய்ய முடியும்; செய்கிறது! செய்யும் வழி முறைகளும் நம் நூல்களில் கொடுக்கப் பட்டிருக்கின்றன!

21-ஆம் நூற்றாண்டில் கல்வி என்பது மன ஆற்றலை வளர்ப்பதில் கருத்து செலுத்தும் கல்வியாக இருக்கும் என்கிறார்கள். வருங்காலம் பற்றிய கணிப் பாளர்கள். அதன் அனுபவங்களைத்தான் மகான் களின் வாழ்வில் நம் கண்முன் பார்க்கிறோம்.

இங்கே சில சம்பவங்கள் மூலம் கோடி காட்டப் படுகிறது.

22

பிரபஞ்ச உண்மைகளை அறிய ஆசையா? (COSMIC REALITY)

பிரபஞ்ச உண்மைகளை அறியும் ஆசை யாருக்கு இல்லை? இந்தப் பிரபஞ்சம் என்ற தனிமனிதர் — மாமனிதர் இருக்கிறாரே அவரைப் பற்றிய உண்மைகள்: இந்த பிரபஞ்சம் ஒரு லயத்தில் — ஒழுங்கில் இயங்கு கிறது. அதை பிரபஞ்ச லயம் என்கிறோம். அந்த லயம்தான் — அந்த முழுமைதான் பிரபஞ்சம். பிரபஞ்சத்துடன் நாம் இணைவது எளிது. இப்படி நம்முடன் இணைந்து செயல்படும் — வழிகாட்டும் இறையம்சம் இணைந்துவிட்டால் நாம் அதுவாகிப் போவோம். இதுதான் இறைநிலை.

எத்தனை பெரிய விஷயம் இது! எனவேதான் இதற்குப் பெயர் (COSMIC REALITY) பிரபஞ்ச உண்மை என்று சொல்கிறோம். இது என்ன பெரிய விஷயமாக இருக்கிறதே என்று கவலைப்பட வேண்டாம். தியானம் செய்தீர்களானால் போதும். பிரபஞ்ச லயத்திலே ஒன்றிவிடலாம். ஆண்டவனுடன்

ஒன்றிவிடலாம். இதன்மூலம் இரண்டு வகைகளில் பலன் பெறலாம்.

தியானப்பயிற்சியின் பேரமைதிநிலை — இவ்வுலக வாழ்வை — எல்லா வகையிலும், குடும்பத்திலும், தொழிலிலும் சரியான முடிவெடுப்பதிலும் பொருளை சம்பாதிப்பதிலும் மனித உறவுகளிலும் ஊர் உலகத்திற்கு உதவி செய்வதிலும் உயர்த்தும். நமது அன்றாட வாழ்விலும் இது நம்மை உயர்த்தும்.

இரண்டாவதாக தியானப்பயிற்சி உங்களுக்கு நீங்கள் யார் என்பதையும், சாவு ஒரு மாற்றமே தவிர ஆத்மா அழிவதில்லை என்பதையும் நமக்குக் காட்டுகிறது. தன்னை மேம்படுத்திக் கொள்ள ஆன்மா, மீண்டும் மீண்டும் பிறக்கிறது என்பதையும், மன ஆற்றலைக் கட்டுப்படுத்தி சரியான வழி முறைகளில் செலுத்துவதன் மூலம் நாம் ஞான நிலையை அடையலாம் என்பதையும் தியானம் நமக்குக் காட்டுகிறது.

சமீபத்தில் மூளையிலிருந்து எழும் அதிர்வுகளைக் கணக்கிட்டார்கள். ஆராய்ந்தார்கள். தியானப் பயிற்சியானது அன்றாட வாழ்வில் எத்தகைய அதிர்வு அலைகளை உண்டுபண்ணுகிறது என்பதையும் கண்டறிய முயன்றார்கள். தியானப்பயிற்சி செய்தவரையும் செய்யாத ஒரு மனிதரையும் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டார்கள்; ஒப்பிட்டார்கள்.

தியானப்பயிற்சி செய்தவரிடமிருந்து கிளம்பிய அதிர்வுகள் ஆழ்மன அமைதியையும் உலகில் எல்லாவற்றையும் பற்றிய விழிப்புணர்வை அவர் பெற்றிருப்பதையும் காட்டியது. அவர் மனதை ஒருமுகப்படுத்தி

காரியம் செய்யும் ஆற்றல் உடையவர் என்பதையும் தெரிவித்தது.

மூளையிலிருந்து கிளம்பும் இந்த வித்தியாசமான அலைகளை தியானப்பயிற்சி இல்லாதவரிடம் காண முடியவில்லை. தியானம் அன்றாட வாழ்வில் நமக்குப் பேருதவி புரிகிறது. அன்றாட வாழ்வை அமைதியாக, இனிமையாக வாழ்வதற்கும் அதற்கும் மேலாக நம்முள் இருக்கும் மாபெரும் சக்தியைத் தட்டி எழுப்பி பயன் படுத்தலாம் என்றும் தெரிவிக்கிறது.

இவ்வளவு விஞ்ஞான ஆதாரமுள்ள தியானப் பயிற்சியை அமெரிக்க நாட்டில், மாசசூசெட்ஸ், இல்லினாய்ஸ் என்ற இரண்டு மாநிலங்களின் கல்வித் திட்டத்தில் பாடமாக சேர்த்திருக்கிறார்கள். நம் நாட்டில்?

தியானம் செய்து வருவதால் இவவுலகைப் பற்றியும் பிரபஞ்ச சக்தி பற்றியும் எல்லாம் புரிந்து விட்ட நிலை. சாவின் இயல்பு என்ன என்ற காட்சி எல்லாம் கிடைக்கிறது. சாவு என்பது இந்த உடலுக்குத் தானே தவிர ஆத்மாவுக்கில்லை என்பதை நாம் புரிந்து கொள்ளலாம்.

மனித வாழ்வின் உயர்ந்த நிலை ஞானதரிசனம் தான். எல்லாவற்றையும் அடைந்துவிட்ட நிலை நம்மை ஆட்கொள்ளும். உலகிற்கு உபதேசிக்கும் ஆர்வம் நம்முள் எழும். ஞானம் என்பது உள்ளதை உள்ளபடி அறியும் நிலை.

இப்போது, வாழ்வில் பிரச்சினைகள் இல்லை; சவால்கள்தான்! இப்போது வாழ்வை தொல்லைப் படுத்த எதுவுமில்லை. முடிவற்ற துணிச்சலுடன் காடு,

மலை ஏறும் அனுபவம் ஏற்படும். வாழ்வில் முன்பிருந்த முக்கியங்களெல்லாம் பின்னுக்குத் தள்ளப்படுகின்றன. ஒரு புழு ஒரு பட்டாம்பூச்சியாக எப்படி உருவத்திலும், நிறத்திலும், வண்ணங்களிலும் மாறுகிறதோ அதைப் போன்ற ஒரு முழுமையான மாற்றம் நம்முள் ஏற்படுகிறது. இவை அனைத்திலும் ஒன்றே ஒன்றுதான் முக்கியமாகப்படும். ஒவ்வொருவரும் அடுத்து இருக்கும் ஒவ்வொரு தனி மனிதரும் மிக மிக முக்கியமானவர்களாகத் தென்படுகிறார்கள். எல்லோரிடமும் சென்று "அடடா இங்கே பாருங்கள்"! எத்தனை அதிசயமான ஆன்மீக விஞ்ஞானம் இது! எத்தனை ஆன்மீக அதிசயம் இது! என்று எல்லோரிடமும் உடனடியாகச் சொல்ல வேண்டும் என்ற எண்ணம் - எண்ணத்துடிப்பு நம்முள் ஏற்படுகிறது. அப்போது இந்த உலகம் இந்த பிரபஞ்சம் எப்படி இருக்கும் என்று கற்பனை ஓடும். எண்ணங்கள், கற்பனைகள் நம்மை எங்கோ தூக்கிச் சென்று ஒரு ஆன்மிக உலகில் இறக்கி விட்டு விடுகின்றன. அப்போது எல்லாம் தெரிந்த நிலை ஏற்படுகிறது. இதைத்தான் ஞானம் என்று சொல்கிறோம். உள்ளதை உள்ளபடி அறியும் அறிவின் உச்ச நிலையை ஞானம் என்று சொல்கிறோம். மோட்சம் என்பதும் இதுதான்.

* * *

தியானத்தில் இன்று ஆயிரம் முறைகள் இருக்கின்றன. ஆனால் அது இன்று மேலும் மேலும் மெருகு பெற்று ஒவ்வொரு மகான்களாலும் பக்குவப் படுத்தப்பட்டு இன்று மிக எளிதான பயிற்சியாக மாறி

இருக்கிறது என்றால் ஆச்சரியப்படுவீர்கள். ஆனால் அதுதான் உண்மை.

நாம் எதையும் கஷ்டமானதாகவும் எடுத்துக் கொள்ளலாம். சுலபமானதாகவும் எடுத்துக் கொள்ள லாம். பாடம் சொல்லிக் கொடுப்பதும் அப்படியே. ஆசையுடன் அநாயாசமாக ஆனந்தத்துடன் கை கொட்டி அவர்களையும் மனதில் தட்டி அந்த அதிசய உலகிற்கு அழைத்துச் செல்லலாம். அதைத்தான் செய்திருக்கிறது தியானம்.

நம் எல்லோருக்கும் ஆசைகள் இருக்கின்றன; நிறைய இருக்கின்றன. ஆசைகளை வைத்துக் கொண்டு மாறிவரும் விஞ்ஞான உலகில் - அவசரமாக ஓடும் இந்த உலகில் - இன்று அந்த வேகத்திற்கும் ஆசைக்கும் ஈடுகொடுக்க முடியாத நிலையில் மனிதன் தவிப்பதைப் பார்க்கிறோம்.

மனிதன் இன்று தன்னிலை இழந்துவிட்ட அநாதைபோல் காட்சி அளிக்கிறான். மனிதனின் தன்னிலை, மனிதனின் தன்னம்பிக்கை "தன்னால் எதையும் சமாளிக்க முடியும், வாழ்வு ஒன்றும் தொல்லை பிடித்த, துயர சம்பவங்களின் தொகுப் பல்ல; ஆனந்தமும் கலகலப்பும் கொண்ட அதிசயத் திருவிழா" என்ற எண்ணத்திற்கு வரவேண்டும். என்றைக்கு இதை மனிதன் புரிந்து கொள்ளுகிறானோ அன்று அவன் விடுதலை பெற்ற சுதந்திர மனிதன் ஆகிறான்.

"விடுதலை! விடுதலை! பறையருக்கும் இங்கு தீய புலையருக்கும் விடுதலை" என்று பாடிக்கொண்டே ஓடுகிறாரே பாரதி, அது போல நாம் ஓடமுடியும்.

வாழ்வை சமாளிக்கும் வழி காட்டுகிறார்கள் ஞானிகள். அதனால்தான் "மனிதனைத் தேடுகிறேன்! நான் அறிந்ததை, அனுபவத்தை, அதிசயத்தை சொல்லிக் கொடுக்காமல் போனால் எப்படி?" "நான் உயர்ந்தேன். இவ்வுலகை உயர்த்துவேன்" என்று மனிதர்களைத் தேடுகிறார்கள் ஞானிகள். 'சீடன் தயாராக இருக்கும் போது தேடி வருவார் குரு' என்கிறார்களே அந்த உண்மையை நம் அனுபவத்தில் உணரலாம்.

குருமார்கள் சிலசமயம் கோபப்படுவார்கள். அவசரப்படுவார்கள். யோசித்துப் பார்த்தீர்களானால் கோபப்படாத மகரிஷிகள் யார்? "நீ லாயக்கற்றவன்" என்று பல முறை திட்டி அவனைச் சரியான வழிக்குத் திருப்பி அவனை ஏற்றுக் கொள்ளாத யோகிகள் யார்? விசுவாமித்திரரிலிருந்து யோகிராம் சூரத்குமார் வரை கடிந்து உதறும் மகான்கள்தாம். மறுநாளே அரவணைத்து ஆசி கூறி வழிகாட்டும் வள்ளல்களும் அவர்களேதாம்.

பொருளைக் கடந்த ஒரு உலகிற்கு தியானம் நம்மை அழைத்துச் செல்கிறது. நாம் எங்கோ கடத்திச் செல்லப்படுகிறோம். அங்கே அமைதி - பேரமைதி! பிரபஞ்சத்தையே புரிந்து கொண்டாற்போல் - தரிசனம் செய்தாற் போன்ற ஒரு மன நிலை. அதிலேயே ஆழ்ந்து இருக்கும் ஆனந்தம்."

நம்மை அறியாமல் நம் வாய் திருநாவுக்கரசர் பாடலை முணுமுணுக்கிறது, "சிக்கெனப் பிடித்தேன்; எங்கு எழுந்து அருளுவது இனியே?" என்று. அதைப் போல் வாழ்வில் இதுவரை பெறாத-அன்றாட

அனுபவத்தை வாழ்வுக்குப் பெரிதும் உதவும் ஒரு பேரமைதி நிலையைச் சிக்கெனப் பிடித்துக் கொள்ளுகிறோம்.

தியானம் முடிந்து அன்றாட உலகிற்கு நாம் திரும்பும் போது அந்த ஆனந்த பரவசநிலை நம் அன்றாட வாழ்வில் உதவி புரிகிறது. அந்தப் பொறுமை, சமத்துவம், நிதானம், அமைதியுடன் கூடிய மோனம் (மௌனம்) இருக்கிறதே, அந்த மன நிலையுடன் அன்றாட வாழ்வை நாம் அணுகும்போது நாம் முன்பிருந்த அதே மனிதனில்லை. தெய்வீக உணர்வு நம்மை ஆட்கொள்ளுகிறது. "வாழ்க்கை தேவனாக்கும் முயற்சி" என்று நான் அடிக்கடி எண்ணுவதுண்டு.

23

“பஞ்சபூதங்களும் நம் வசமாகும்!”

அமெரிக்காவில் மனவியல் நிபுணர்கள் சில சோதனைகள் செய்தார்கள். ஒரு மனிதரை சிகாகோ நகரத்தில் நிறுத்தி வைத்தார்கள். அவர்கள் கூட்டத்தைச் சேர்ந்த மற்றொரு மனிதரை 1500 மைலுக்கு அப்பால் உள்ள நியூயார்க் நகர ஹோட்டலின் வரவேற்பறையில் உட்காரச் சொன்னார்கள். சிகாகோ நகரில் உள்ள மனிதரைப் பார்த்து மற்றொரு மனிதர் என்ன செய்து கொண்டிருக்கிறார் என்று கேட்டார்கள். சில நிமிடத்தில் சிகாகோ மனிதர் ஒரு படம் வரைந்தார். ஒரு வரவேற்பு அறை - அருகே அழகான பூந்தொட்டிகள் - நியூயார்க் மனிதர் ஒரு தூணில் சாய்ந்து நின்று கொண்டிருப்பதாகப் படம் வரைந்தார். எப்படி இவர் 1500 மைலுக்கு அப்பால் உள்ள அந்த மனிதர் என்ன செய்கிறார் என்பதை உணர முடிந்தது?

மற்றொரு நிகழ்ச்சியில் ஒரு மனிதரை அந்த நகரில் பல தெருக்கள் வழியே ஓடச் சொன்னார்கள்.

“நீ ஓடும்போது நாங்கள் சொன்ன தெருக்கள் வழியாகத்தான் ஓட வேண்டும் என்பதில்லை- சமயத்தில் உன் இஷ்டப்படி வேறு தெருக்கள் வழியாகவும் ஓடலாம்” என்றார்கள். அவர்கள் அருகே இருந்த ஒரு மனிதரைப் பார்த்து, அவர் எந்தத் தெருக்கள் வழியாக ஓடுகிறார் என்று எழுதச் சொன்னார்கள். அவர் எப்படி ஓடப் போகிறார் என்பதைத் துல்லியமாக அந்த மனிதர் முன்கூட்டியே சரியாகச் சொன்னார். எப்படி உணர்ந்து சிலரால் இப்படி யெல்லாம் கண்டுபிடிக்க முடிகிறது?

நான் சிதம்பரத்தில் படித்துக் கொண்டிருந்தேன். வீட்டிற்குக் கடிதம் எழுதினேன். வழக்கத்திற்கு மாறாக, அப்பாவின் உடல்நிலை எப்படி இருக்கிறது? (நான் ஊரை விட்டுக் கிளம்பிய போது நன்றாகத்தான் இருந்தார்கள். எனவே கவலைப்படக் காரணம் இல்லை) அவர்களைக் கவனித்துக் கொள்ளவும்” என்று கவலையோடு கடிதம் எழுதினேன். என் அண்ணனிடமிருந்து கடிதம் வந்தது, ‘அப்பாவிற்கு திடீரென்று இரண்டு மூன்று நாளாக உடல்நிலை சரியில்லாமல் இருக்கிறது’ என்று.

என் தந்தையின் உடல்நிலை சரியில்லாதிருக்கும் செய்தி எனக்கு முன்கூட்டியே எப்படித் தெரிந்தது?

மனத்திற்கு அபார சக்தி இருக்கிறது. இக்கட்டான பல காலகட்டங்களில் நம் மனத்துள் சில முக்கியமான செய்திகள் கொண்டு வைக்கப்படுகின்றன. “ஓர் ஊருக்குப்போ என்றோ போக வேண்டாம்” என்றோ சேதி வருகிறது. கண்ணகி மதுரை மாநகருக்குச் செல்கிறார். நுழைவாயிலில்

மேல் படிந்திருக்கும் கொடியின் இலைகள் 'வராதே வராதே' என்று சொல்வது போல் இருக்கிறதாம் கண்ணகிக்கு. கோவலன் கொலை செய்யப்படுகிறான். கண்ணகி தங்கியிருந்த வீட்டில் கட்டியிருந்த பசுவும். குதிரைக் கொட்டகையிலிருந்த விலங்குகளும் அன்று அசாதாரணமாகத் தவித்ததை உணர்ந்தார்களாம். விலங்குகள் எப்படி அந்த உணர்வைப் பெற்றன?

அன்றாட வாழ்வில் பல விஷயங்கள் நடக்கின்றன. சில சமயம் நாம் ஆச்சரியப்படுகிறோம். சில சமயம் நாம் அதிர்ச்சி அடைகிறோம். எதிர்பாராது நம் மனத்தில் ஆழமான எண்ணங்கள் ஓடுகின்றன. ஒரு காரியம் நிகழுமுன்போ, நிகழ்ந்து கொண்டிருக்கும் போதோ நமக்குச் செய்திகள் கிடைக்கின்றன.

மனித மனத்தின் நினைவில் ஏற்படும் எண்ணத்தின் மூலம் நாம் அறிந்து கொள்ள வேண்டிய செய்தி பற்றிய அறிவு திடீரென்று எங்கிருந்தோ வந்து நம்மை உலுக்குகிறது. சிந்திக்க வைக்கிறது. வழிகாட்டுகிறது.

"ஏதோ ஒன்று சொல்கிறது" என்கிறோம். "இப்படித்தான் எனக்குப்படுகிறது" என்கிறோம். சில சமயம் நெருக்கடியான கால கட்டங்களில் "கடவுளே மனித உருவில் வந்தார், உதவினார்" என்று சொல்லும் படி நமக்குச் சில மனிதர்கள் வந்து உதவுகிறார்கள். அப்படிப்பட்ட அதிசய சம்பவங்கள் நம் வாழ்வில் நிகழ்கின்றன.

எண்ணம் என்பது ஒரு சக்தி. ஒரு பொத்தானை அழுத்தியவுடன் எப்படி மின்சாரம் எல்லா இடங்களிலும பாய்ந்து வீடு முழுவதிலும் பரவி மின் விளக்கையும் மின் விசிறியையும் தொலைக்காட்சிப்

பெட்டியையும் இயக்குகிறதோ அப்படி எண்ணம் என்பது ஓர் இயங்கும் சக்தி; ஓட்ட நிலை கொண்டது.

வீட்டில் குத்து விளக்கை ஏற்றியவுடன் எப்படி அறை முழுவதும் ஒளி பரவுகிறதோ அது போல எண்ணங்கள்-மின்சாரம் போன்ற அல்லது ஒளி போன்ற ஓட்டம் கொண்ட ஒரு சக்தி என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். "அது ஒரு சக்தி. அது ஓட்டம் நிறைந்தது" என்பதுடன் மூன்றாவதாக "எண்ணம் என்ன லட்சியத்துடன் மனத்தில் தோன்றியதோ அதை அடைய முயலும்; அதை அடைய உதவும் தன்மை கொண்டது" என்கிறார்கள்.

நம் மனத்தில் ஓர் ஆசை எழுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். விரும்பும் பொருளைப் பற்றிய எண்ணம். எண்ணம் என்பது ஒரு பொருளன்று. மனித உடலைப் பார்த்தோமானால் தலை முடியிலிருந்து கால் நகம் வரை உடம்பு முழுவதும் சதையால் - பொருளால் - ஆன விஷயங்கள்தாம். இந்தப் பொருளால் ஆன உடலில் பொருளைக் கடந்த ஒன்று சக்தி நிலையில் இருந்து கொண்டு நம் எண்ணமானது, நாம் விரும்பியதை நிறைவேற்ற முயல்கிறது. நம் எண்ணங்களைப் பிறருக்கு அனுப்புகிறது. பிறர் அனுப்பும் எண்ணங்களை நமக்குத் தெரிவிக்கிறது.

நம் நினைவில் தோன்றுபவற்றைத்தான் - அந்த நினைவாற்றலைத்தான் - எண்ணங்கள் என்கிறோம். சில செய்திகளை எண்ணங்கள் நமக்கு அறிவிப்பதனால் அவற்றை அறிவாற்றல் என்கிறோம். ஆங்கிலத்தில் Consciousness என்று சொல்கிறார்கள்.

இதன் சரியான அர்த்தத்தைக் கூறவேண்டுமானால் "பிரக்ஞை" என்றுதான் கூறவேண்டும். ஒருவன் இறந்து விட்டான் என்பதைச் சொல்ல அவன் அருகில் உள்ளவர்கள், "அவனுக்குப் பிரக்ஞை போய்விட்டது" என்று சொல்கிறார்கள். எது, எங்கே எப்படி நடக்கிறது என்ற நினைவும் உணர்வும் இப்போது அவனிடம் இல்லை என்பதைத்தான் இப்படிக் குறிக்கிறார்கள். அதாவது பிரக்ஞை என்பது ஓர் உணர்வு. சக்தி கொண்ட உணர்வு. நாம் பேசும் போது - தூங்கும் போது - நடக்கும் போது - உயிருடன் இருக்கும் போது - நாம் பிரக்ஞையுடன் இருக்கிறோம்.

இந்த - நினைவாற்றல் நமக்கு மட்டும்தான் இருக்கிறதா என்றால், ஆம் என்போம். ஆனால் உண்மையில் விலங்குகளுக்கும் உயிர் வாழ்வன எல்லாவற்றிற்கும் இந்த அறிவாற்றல் இருப்பதை உணர்கிறோம். ஒரு கம்பளிப்பூச்சியை முள்ளால் தொட்டால், தன்னைக் காப்பாற்றிக் கொள்ள அது தன்னைச் சுருட்டிக் கொள்கிறது.

ஒரு கல்லை எடுத்துக் கொள்ளுங்கள். சாலை போட கருங்கல் சல்லிகள் கொட்டியிருக்கிறார்கள். அந்த ஒரு சல்லியின் உள்ளே என்ன இருக்கிறது? செங்கல்லினால் நாம் வீடு கட்டுவது போல, ஒரு கருங்கல் சல்லி, அணுக்கள் போன்ற செங்கல்களால் கட்டப்பட்டிருக்கிறது. ஒரு பொருளின் மிகச் சிறிய, அதற்குமேல் உடைக்க முடியாத ஒரு மிகச் சிறு பகுதியைத்தான் அணு என்கிறோம்.

இந்த அணுவின் மையத்தில் புரோட்டான் என்ற சக்தி கொண்ட ஒரு பொருளும் அதைச் சுற்றி

வட்டமாக ஓடிக் கொண்டிருக்கும் எலக்ட்ரான் என்ற ஒன்றும் இருக்கிறது. இந்த 'எலக்ட்ரான்' மின் துகள் எதிர் மின் சக்தி கொண்டது. எனவே வெகு தொலைவில் ஒரு வட்டத்தில் புரோட்டானை எலக்ட்ரான் சுற்றி ஓடிக் கொண்டிருக்கிறது.

இந்த எலக்ட்ரான் எப்படிப்பட்டது என்பதை விஞ்ஞானிகள் சோதித்தபோது அவர்கள் கண் டார்கள். அது கடுகு போன்ற மிக மிக சிறிய பொருளா அல்லது கார்த்திகைப் பொறி சுற்றுகிறோமே, அதைப் போன்ற ஒளி வட்டம் போன்ற பரந்த நிலையில் சுற்றுவதா-என்பதை அவர்களால் நிச்சயிக்க முடிய வில்லை.

பொருளுக்கான கருவியை எடுத்து சோதித்தால் "ஆம் நான் ஒரு பொருள்தான்" என்கிறது. "நீ அலை போன்ற சக்தி நிலையா என்று சோதித்தால் அதற்கும் "ஆம்! நான் அதுதான்" என்கிறது எலக்ட்ரான். விஞ்ஞானிகளுக்கு தலை சுற்றியது.

ஐன்ஸ்டைன் காலத்தில் வாழ்ந்த விஞ்ஞானி ஷ்ராடிஞ்சர் என்பார் இந்த எலக்ட்ரானின் இரு நிலைகளை விளக்க ஒரு பூனைக்கதையைச் சொன் னார். "மனிதன் பார்க்காதபோது அந்த எலக்ட்ரான் பூனை செத்துக் கிடக்கிறது. மனிதன் சோதனை செய்யத் தொடங்கி அதைப் பார்க்கும் போது அது உயிர் பெற்று விழித்துக் கொள்கிறது" என்றார். ஒரு பூனை "செத்தும் இருக்கிறது. உயிருடனும் இருக்கிறது" என்றால்? இதைக் கேட்ட ஐன்ஸ்டைன், "கடவுள் நம்முடன் காய் உருட்டிப் போட்டு 'தாயம்'

விளையாடுவதில்லை! ஓர் ஒழுங்கில்தான் எல்லாம் நடைபெறுகின்றன" என்றார்.

பொருள் என்றால் அது ஜடம், ஆடாது அசையாது கல் போன்ற ஒன்று என்று பொருள். மற்றபடி அது அலை மடிப்புகளுடன் கூடிய நீண்ட வால் நட்சத்திரம் போன்ற ஒன்று அல்ல; அது பொருளன்று. இது பொருளா? பொருளைக் கடந்த சக்தி நிலையா என்றால் அவர்களால் அப்படியும் நிச்சயிக்க முடியவில்லை. அதன்பிறகு ஒரு நாள் கண்டுபிடித்தார்கள். இந்த உலகிலேயே மிகச் சிறிதாக உள்ள இந்த எலக்ட்ரான் இருக்கிறதே அந்த எலக்ட்ரான், விஞ்ஞானி அது ஒரு பொருள் என்று சோதிக்கும் கருவியை எடுக்கும் போது அது தன்னை ஒரு பொருளாகக் காட்டிக் கொள்கிறது. அது அலை அலையாக (WAVE)ச் செல்லும் சக்தி போன்ற ஒன்று என்பதை நிரூபிக்கும் கருவியை அவன் எடுத்துச் சோதிக்கும் போது அது அலை வடிவில் உள்ள சக்தி நிலையாக தன்னை மாற்றிக் கொள்கிறது என்றும் கண்டார்கள்.

அதற்குப் பிறகு கண்டுபிடித்தார்கள்; 'அது நீங்களும் நானும் நினைப்பது போல ஒரு ஜடமன்று; ஆராய்ச்சி செய்கின்ற மனிதன் இருக்கிறானே அவன் என்ன எதிர்பார்க்கிறானோ அதற்கேற்பத் தன்னை மாற்றிக் கொள்கிறது. அதற்கு அறிவாற்றல், நினைவாற்றல், பிரக்ஞை இருக்கிறது. அது நம்முடன் தொடர்பு கொள்கிறது. உறவு கொள்கிறது' என்பதை விஞ்ஞானிகள் புரிந்து கொண்டார்கள்.

ஒரு சிறிய பூனைக்குட்டி தெருவில் பாதையில் படுத்திருக்கிறது என்றால் என்ன? அதைக் காலால் உதைப்போமா? மாட்டோம், அதைத் தூக்கி சாலைக்கு வெளியே விட்டுவிடுவோம்.

நாம் மேலும் கொஞ்சம் நடக்கிறோம். ஒரு கல் கிடக்கிறது. நாமோ விஞ்ஞானி. கீழே கிடக்கும் கல் வெறும் ஜடமன்று. அதற்கு அறிவாற்றல் நினைவாற்றல் இருக்கிறது என்பதை அறிந்த நாம் அதை எப்படி காலால் உதைத்து அப்புறப்படுத்த முடியம்? மாட்டோம்.

கொஞ்சம் யோசித்தோமேயானால், இவ்வுலகில் உள்ள மலையாகட்டும், மலையிலிருந்து கொட்டும் அருவியாகட்டும் அருகே வீசும் காற்றாகட்டும் நமக்கு மேலே தென்படும் வானம் ஆகட்டும். சூரிய சந்திரன் போன்ற கோள்களாகட்டும். எல்லாவற்றிற்கும் அறிவாற்றல் இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளும் போது நாம் எவ்வளவு மரியாதையுடன் அவற்றை நடத்த வேண்டும்? எண்ணிப் பாருங்கள்.

நாம் தொழும் விநாயகர் சிலையையோ அல்லது கிறித்தவர்கள் தொழும் அன்னை மேரி சிலையையோ அல்லது நம் இஸ்லாமிய நண்பர்கள் தொழும் வெட்ட வெளியையோ ஆகாயத்தையோ, எல்லாம் ஜடம் என்று யாராவது சொல்ல முடியுமா? கேவலப்படுத்த நமக்கு உரிமை உண்டா? அதனால் தான் சொன்னார் ஒரு பழங்குடி மகன், தென் அமெரிக்காவில் வாழும் பெரியவர், "மலை, நதி, பள்ளத்தாக்கு, மேகம், சூரியன் என்ற எல்லாவற்றிற்குமே உயிர் இருக்கிறது. அவை உட்பட நாம் எல்லாரும் சகோதரர்கள். இதைத்தான்

நான் தெரிந்து கொண்டேன்!” என்று சொன்னார். அந்தப் பழங்குடி மகன் என்ன விஞ்ஞானியா? விஞ்ஞானமா படித்தார்? யோசியுங்கள், எப்போது ஒரு பொருளை நாம் உற்றுப் பார்க்கிறோமோ, அந்தப் பொருள் தன்னைப் பூரணமாக வெளிப்படுத்திக் கொள்கிறது என்கிறார்கள். அப்படித்தான் அந்தப் பெரியவர் உணர்ந்திருக்க வேண்டும்.

நாம் வாழும் உலகில் உள்ள நிலம், நீர், தீ, காற்று, வானம் எனும் பஞ்சபூதங்கள் அனைத்துடனும் நாம் தொடர்பு கொள்ளலாம். உறவு கொள்ளலாம். அவை அனைத்தும் நம் நண்பர்கள் - அன்னை காவிரியைத் தாய் என்கிறோம். சூரிய பகவானை மகாசக்தியாகத் தொழுகிறோம். ஆக நாம் அவை ஒவ்வொன்றுடனும் தொடர்பு கொள்ள முடியும். அந்த மாபெரும் சக்தியின் உதவியைப் பெற முடியும். இதை நம் முன்னோர்கள் அறிந்திருந்தார்கள். திருஞான சம்பந்தர் மழைப்பதிகமே பாடியிருக்கிறார்.

போபால் விபத்தில் நச்சு வாயு காற்றில் கலந்து ஆயிரக்கணக்கானவர்களைக் கொன்ற போது அங்கே ஒருவர் வீட்டில் அக்னிஹோமம் செய்ததாகவும் அதில் எழும்பிய புகை அந்த நச்சுக்காற்றுடன் கலந்து அதன் நச்சுத் தன்மையை மாற்றிவிட்டதாகவும் அந்த வீட்டில் உள்ளவர்கள் நச்சுக்காற்றால் எந்தவிதத்திலும் பாதிக்கப்படவில்லை என்றும் ‘ஹிந்து’ பத்திரிகையில் செய்தி வந்தது. ஹோமம் என்பது வெறும் சாதாரணச் சடங்கன்று; உள் அர்த்தத்துடன்தான் நம் முன்னோர்கள் பல காரியங்களைச் செய்திருக்கிறார்கள். எண்ணங்களுக்கு சக்தி உண்டு. அவற்றிற்கு ஓட்டம்

உண்டு எனப் பார்த்தோம். எனவே சடங்குகளில் சொல்லப்படும் மந்திரங்கள் என்பவை உலகின் மாபெரும் சக்திகளை நம் உதவிக்கு அழைக்கும் உறவுப் பாலங்கள். அதுதான் உண்மை.

'இதெல்லாம் நம்ப முடியாது' என்று நையாண்டி செய்பவர்கள் இருக்கக்கூடும், என்ன காரணம்? அறியாமைதான், அனுபவமின்மைதான்!

பகவத்கீதையில் கிருஷ்ணன் அர்ஜுனனுடன் பேசுவது போல, ஓர் எழுத்தாளருடன் அவருக்கு ஒரு பிரச்சினை வந்தபோது ஒரு மாபெரும் சக்தி அவருடன் பேசியதாக ஒரு புதிய நூல் வெளிவந்திருக் கிறது. அது உலகிலேயே அதிகமாக விற்கப்படும் நூல். அதிலே கடவுள் சொல்வதாக ஓரிடத்தில் வருகிறது. "இந்த மனிதர்கள் சோதிடர்களை நம்புகிற அளவுக்கு என்னை (கடவுளை) நம்புவதில்லை" என்கிறார் கடவுள். சோதிடர்கள் மனித ரூபத்தில் வருகிறார்கள். உணர்வுடன் பேசுகிறார்கள். எனவே மக்கள் சோதிடர்களை நம்புகிறார்கள். கடவுளே மனித ரூபத்தில் வருகிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது என்ன சொல்வார்கள்? 'நீ மனிதன்! உன்னைத் தெரியாதா எனக்கு?' என்பார்கள். அதனால் தானோ என்னவோ "மூடர்கள் அனுபவம் என்ற பள்ளிக்கூடத்தில்தான் கற்றுக் கொள்கிறார்கள்" என்ற வாசகம் இருக்கிறது. எல்லாவற்றையுமே வாழ்வின் எல்லாப் பிரச்னைகளையும் ஒவ்வொன்றை யும் நாமே கஷ்டப்பட்டு அனுபவித்துத் தெரிந்து கொள்ள முடியாது. அதனால்தான் பிறரது 'அனுபவங் களிலிருந்தும் பாடம் கற்றுக் கொள்பவர்கள்தான்

புத்திசாலிகள்' என்று சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்கள்.

நாம் கடவுளுடன் தொடர்பு கொள்ள முடியும். "அழைத்தால் வருவான்" என்கிறார்களே, அது உண்மை. நாம் என்ன செய்ய வேண்டும்? மனம் ஒன்றி, தூய்மையான மனத்துடன் அவனை அழைக்க வேண்டும். மனத்தில் தூய்மை வேண்டும். நேர்மையான வாழ்க்கை வேண்டும். இதுதான் அடிப்படை அதாவது நல்லவனாக இருக்க வேண்டும். மன நிலையை மூன்று பிரிவாகக் கூறலாம். ஒன்று நினைவு மனம், அன்றாட வாழ்வில் ஈடுபடும் மனம். இரண்டாவது ஆழ்மனம். நம் அனுபவங்கள் அங்கு திரும்பத் திரும்பப் படித்த வாய்பாடு போன்ற கருத்துகள் எல்லாம் ஆழ்மனத்தில் பதிவாகியிருக்கின்றன. மூன்றாவது அதி மனநிலை. பொருள் உலகைக் கடந்து ஆழ்மன உலகைக் கடந்து செல்லும் அதி உன்னதமான நிலை. இதை சூட்சும மனநிலை என்றும் சொல்வார்கள். அந்த அதிமன நிலைக்குப் பல ஆண்டு தியானத்தின் மூலமே நாம் செல்ல முடியும். ஆழ்ந்து ஒரு பொருளுடன் ஒன்றிப் போவதன் மூலமும் உள் உணர்வின் மூலமும் கனவுகளின் மூலமும் இந்த நிலையைத் தொடலாம்.

தேவாரத்தில் ஒரு பாடல் வருகிறது. "எதுவாகப் பாவித்திடினும் அதுவாக வந்தருள் எந்தை நீ!" என்பது பாடல். "பாவித்தால் (பாவனை செய்தால்) போதும் பரம நிலை எய்துதற்கே" என்கிறார் பாரதியார். 'அவர்' இருப்பதாக, அவருடன் மனம் திறந்து பேசுவதாக பாவனை செய்யுங்கள். போதும். இல்லாததை

இருப்பதாக மனத்தில் பாவனை செய்யுங்கள். மனித எண்ணங்களினால். இல்லாததுதான், இருப்பதை உருவாக்குகிறது.

அப்படித்தானே காளி என்ற கல் உருவச் சிலையை தன் தாயாக பாவித்தார் இராமகிருஷ்ண பரமஹம்சர்? எந்தப் படிப்புமில்லாத மனிதர் உயர்ந்த உலக ஞானமும் ஆன்மிக ஞானமும் பெற்றாரே? வேறென்ன உதாரணம் வேண்டும்? வாருங்கள். இயற்கையுடன் பேசுவோம்; பஞ்சபூதங்களுடன் உறவாடுவோம்; ஆண்டவனை உதவிக்கு அழைப் போம்! வாழ்வின் உன்னதத்தைத் தொடுவோம்.

24

அழைத்தால் வருவான்!

மனித வாழ்வின் லட்சியமே மனநிறைவுடனும் மகிழ்வுடனும், பிறருக்கு உதவியாகவும் வாழ வேண்டும் என்பதுதான். ஆனால், நம் வாழ்வு, நாம் விரும்புவது போல எதிர்பார்ப்பது போல மகிழ்வுடனோ, வெற்றி மேல் வெற்றியாகவோ செல்வதில்லை. தோல்விகள், ஏமாற்றங்கள், இடைஞ்சல்கள், பிரச்சினைகள், சோகங்கள் என்று பல்வேறு வடிவங்களில் வாழ்வை நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.

ஒரே ஒரு நியதியை நாம் நினைவில் கொள்ள வேண்டும். உலகின் இரட்டைத்தன்மை. அதாவது இன்பமும் துன்பமும் லாபமும் நஷ்டமும் வெற்றியும் தோல்வியும் என்ற இரட்டைத் தன்மை. இயற்கையின் நியதி என்கிற உண்மைதான், அது. எனவே இப்படி மாறி மாறித்தான் வரும் என்ற தெளிவு நம் மனத்தில் தோன்றும்போது நாம் பெரிதும் ஏமாற்றமோ கலக்கமோ அடையமாட்டோம். "சமாளித்து

விடுவேன்", "இது எல்லோருக்கும் வருவதுதான்" என்ற நம்பிக்கைத் துளிர், மனத்தில் எழுகிறது.

வாழ்வில் நம்மால் சமாளிக்க முடியாத பல விஷயங்கள் தோன்றுகின்றன. நாம் திணறிப் போகிறோம். விளைவு என்ன ஆகுமோ என்று பயப்படுகிறோம். சந்தேகம், பயம், தவிப்பு என்ற உணர்வுகள் மனத்தில் தோன்றுவது இயல்புதான். "எந்த நல்ல நம்பிக்கைக்கும், 'இது முடியுமா?' என்ற அவநம்பிக்கை - நேர் எதிர்மறை எண்ணம் எழுவதும் சகஜம்தான்" என்கிறார், ஸ்ரீ அரவிந்த அன்னை. மனிதர்களது கட்டுப்பாட்டுக்குள் இல்லாத பல விஷயங்கள் நம்மை வந்து மோதுகின்றன. எல்லாம் இழந்த நிலையில் நம் மனத்தில் நாம் நம்பிக்கை கொள்ள வேண்டிய இடம், ஆண்டவன்தான். "அழைத்தால் வருவான்" என்கிற நம்பிக்கை நமக்கு வேண்டும்.

ஆண்டவன் எங்கும் நிறைந்தவன். எனவே நமக்கு அருகில்தான் இருக்கிறான். எனவே அழைத் தால் வருவான். அதாவது முழு ஈடுபாட்டுடன் அழைத்தால் வருவான். உதவுவான். நமக்கும் அவனுக்கும் உள்ள தொடர்புச் சாதனம், நமது மனம்தான். ஆண்டவனை நாம் பார்க்க முடிவ தில்லை; ஆனால் இறைசக்தி என்பது ஒரு பேருணர்வு. எனவே நமது எண்ணம், நம் உள்ளத்தில் பேருணர்வாக "ஆண்டவனே உதவு" என்ற உணர் வுடன் எழும் போது அது ஆண்டவன் என்ற அந்தப் பேருணர்வுடன் தொடர்பு கொள்கிறது.

இதற்கு ஒரு முன் நிபந்தனை உண்டு. மாசற்ற மனம்தான் இதன் அடிப்படைத் தேவை.

அப்படி நம்மால் தூய வாழ்க்கை வாழ்பவர் களாக - பக்திமானாக இருக்க முடியவில்லை என்றாலும் நாம் நம் மனத்தை அமைதிப்படுத்த முடியுமென்றால் நாம் ஆண்டவனுடன் தொடர்பு கொள்ள முடியும். நாம் விரும்பும் காரியங்கள் நிறைவேறும்.

அமைதியான மனம் வேண்டும் என்கிறோம். அமைதிக்கு ஏன் இத்தனை முக்கியத்துவம்?

காரணம், அப்படிப்பட்ட பேரமைதியில்தான் பிரபஞ்சம் இருந்தது; பிரபஞ்சம் உருவாவதற்கு முன் பிரபஞ்சத்தின் மாபெரும் சக்தி, அடங்கிய நிலையில் அமைதியாக இருந்தது.

அதில் ஓர் அசைவு ஏற்பட்டு இரட்டைத்தன்மை கொண்ட பிரபஞ்சம் உருவாகியது என்று ஞானிகள் கூறகிறார்கள். அமைதியாக இருக்கும் ஓர் ஏரியின் மேற்பரப்பை நினைவிற்குக் கொண்டு வாருங்கள். அங்கே காற்றினால் ஓர் அசைவு ஏற்படுகிறது. என்ன நேரிடுகிறது? ஏரியின் மேற்பரப்பிற்கு அலையானது தண்ணீரை ஒரு பக்கம் மேடாகவும் மறுபக்கம் பள்ளமாகவும் மாற்றுவதைப் பார்க்கிறோம். மேடு பள்ளம் என்ற இரட்டைத் தன்மை இப்படித்தான் துவங்கியது என்று உதாரணத்தைக் காட்டுகிறார்கள்.

அதேபோல நாமும் நம் மனத்தை முதலில் பேரமைதி நிலைக்கு எடுத்துச் சென்று அதில் எண்ணம் என்ற சலனத்தை (அசைவை) ஏற்படுத்தி னோமானால் அது வழிகாட்டும் என்பதுதான் யோகிகள் காட்டும் உண்மை.

பதஞ்சலி யோக சூத்திரத்தில் 'சம்யமம்' என்று ஒரு வார்த்தை வரும். யோகம் செய்பவர்கள் சமாதி நிலையிலிருந்து விழிப்படையும் நிலைக்கு வரு கிறார்கள். சமாதி நிலை என்பதை சம ஆதிநிலை என்று பிரிக்கலாம். ஆதிநிலை - அமைதி நிலை சமமாக இருக்கின்ற தோற்றத்திற்கு முற்பட்ட பேரமைதி நிலையைத்தான் சமாதி என்கிறோம்.

அந்த சமாதி நிலையில் இருந்து எண்ண நிலைக்கு வரும்போது உங்கள் லட்சியங்களை விதையுங்கள் என்கிறார்கள். யோகிகள், இதுதான் 'சம்யமம்' எனப்படுகிறது.

பதஞ்சலியின் யோக சூத்திரத்தில் உள்ள சம்யமம் வரை போகாமல் வெகு எளிதாக அதை விளக்க வேண்டுமானால் பாரதியார் சொல்வதைக் கேளுங்கள்.

"எனக்கு வேண்டும் வரங்களை
இசைப்பேன் கேளாய் கணபதி
மனதில் சலனமில்லாமல் மதியில்
இருளே தோன்றாமல்,
நினைக்கும் பொழுது நின் மவுனநிலை
வந்திட நீ செயல் வேண்டும்"

என்று பாடுகிறார்.

நினைக்கும் பொழுது நாம் நம் மனத்தை மனத்தின் மிக மிக ஆழமான அமைதி நிலைக்கு, எண்ணங்கள் எல்லாம் அற்றுப்போகும் மிக மிக மெல்லிய மனநிலைக்கு எடுத்துச் சென்று அங்கு நம் எண்ணத்தை விதைக்கலாம். என்பதுதான் இதன் பொருள்.

ஏனெனில் சிவன் கோயிலில் தட்சிணாமூர்த்தி சிலை இருக்கிறது. அவருக்கு எதிரே ஆலமரத்தடியில் நான்கு சீடர்கள் அமர்ந்திருக்கிறார்கள். தட்சிணா மூர்த்தி உபதேசம் செய்கிறார் என்று நமது புராணம் கூறும். அங்கு என்ன நடக்கிறது? பேசாது உபதேசம் நடைபெறுகிறது. மனத்திற்கு மனம் கருத்துப் பரிமாற்றம் நடைபெறுகிறது எந்த நிலையில்? அமைதி நிலையில்!

இது மனிதர்களாகிய நாம் உபயோகிக்கக்கூடிய — உலகின் மாபெரும் சக்தியுடன் தொடர்பு கொள்ளக் கூடிய எளிய முறைதான்.

யானை ஒன்று குளத்தில் இறங்கியது, தண்ணீர் குடிக்க. அங்கே உள்ள முதலை ஒன்று யானையின் காலைப் பிடித்துவிட்டது. பயந்த யானை "ஆதிமூலமே"! என்று பிளிறியது. இந்த அபயக் குரல், எங்கு போய்ச்சேர வேண்டுமோ அங்கு சென்று உடனடியாக நிவாரணம் கிடைக்கிறது!

திரௌபதியைத் துச்சாதனன் துகில் உரிகிறான். அரசவையில், திரௌபதி "கண்ணா! கிருஷ்ணா! ஆபத்பாந்தவா" என்று குரல் கொடுக்கிறாள். துகில் நீள்கிறது. இவை அனைத்தும் முடியாத சம்பவங் களல்ல. நம் குரல் கேட்கப்படுகிறது. நாம் பிரச்சி னையை தீர்க்கும் ஒரு வழி தெரிகிறது என்பதுதான் அனுபவம்; உண்மை.

இதை மிக அழகாக விளக்குகிறார், ஸ்ரீ அரவிந்த அன்னை.

ஒரு மனிதன் குற்றம் செய்தால் அவன் தண்டிக்கப்பட வேண்டும். இதுதான் சமுதாய நீதி.

ஆனால் மற்றொரு நீதி, தவிர்க்க இயலாத நீதி ஒன்றும் இருக்கிறது.

அது, தெய்வநீதி. அது மனித நீதியைவிட வலுவானது. பரிவு கொண்டது. கருணை என்ற உருவில் இயங்கும்.

தெய்வநீதி சத்தியத்தையும் அன்பையும் மனத்தில் கொண்டு மனிதன் திருந்த வாய்ப்பளிக் கிறது. பரிணாம வளர்ச்சியை நோக்கி உலகில் படைக்கப்பட்டவை எல்லாம் முன்னேற, தெய்வ நீதியோ மன்னித்து வாழ்வில் வாய்ப்பளிக்கிறது.

தண்டனை அளிக்கவேண்டிய அவசியம், கடவுளுக்கு இல்லை. ஏனெனில் மனிதனின் ஒவ்வொரு செயலிலுமே அச்செயலுக்கான பலனும் விளைவும் அடங்கி உள்ளன. தெய்வத்திடமிருந்து மனிதர்கள் (நாத்திகர்களாக) விலகிச் செல்லலாம். ஆனால், கடவுள் விலகுவதில்லை. அவர் தம் உள்ளேயே, நடப்பவற்றிற்குச் சாட்சியாக இருக்கிறார்.

சொல்லப்போனால் நம் அந்தரங்கத்தில் எதுவாக இருக்கிறோமோ அதற்கேற்ப நம் பிரார்த் தனை நிறைவேறுகிறது. **மனத்தில் தூய்மையும் வாழ்வில் நேர்மையும்தான் நாம் வாழும் உலகின் வெற்றிக்கும் ஆனந்தத்திற்குமான அடிப்படைகள்.**

இதை மறுத்தும் - ஏற்றுக் கொள்ளாமலும் நாம் ‘எப்படியும் வாழலாம்’ - என்ற மனநிலையில் பெரும்பாலான அரசியல்வாதிகளும், அதிகாரிகளும், அடியாட்களும் வாழ்வை நடத்துகின்றனர். சில சமயம் வியாபாரிகள், தொழிலதிபர்கள் கூட இப்படி நேர்மையில்லாமல் நடந்து கொள்கிறார்கள்.

ஒவ்வொரு காரியத்திற்கும் ஒரு விளைவு இருக்கிறது. அதை அவர்கள் அனுபவிக்க நேரிடும். இதுதான் பிரபஞ்ச உண்மை. இவர்களுடைய வெற்றி, தற்காலிக மானதுதான். இவர்கள் அனுபவிப்பதோ நிரந்தரத் துன்பம், வேதனை.

இந்தப் பிரபஞ்சம், சில நியதிகளின்படி இயங்கு கிறது. உலகின் ஆறு பெரிய உண்மைகள், நேர்மை, சமத்துவம், சுதந்திரம், உண்மை, நல்லெண்ணம், அழகு (ஒழுங்கு) என்பன ஆகும்.

இவற்றை மதித்து நடக்க நாம் கற்றுக் கொள்ளும் போது நாம் நம்மைப் பற்றியே பெருமைப்படுகிறோம். அந்தப் பெருமையில் உலகின் மாபெரும் சக்தி நம்முடன் இருக்கிறது என்பதையும் உணர்கிறோம். நிச்சயம் அழைத்தால் வருவான்! நமது நாயன்மார் களின் சரித்திரங்கள் எல்லாம் முன்பு உண்மையாக நடந்த சம்பவங்கள் தானே! அன்றாட வாழ்வில் இயற்கை நியதிகளுடன் ஒத்து வாழ்பவர்களுக்கு இயற்கை எல்லா விதங்களிலும் உதவி செய்கிறது. இதை நாம் நம் அன்றாட வாழ்வில் காண முடியும். "உங்களைத்தான் நினைத்துக் கொண்டிருந்தேன். நீங்கள் வந்து விட்டீர்கள்!" என்று கதவைத் திறக்கிறோம் அல்லவா. மனிதர்களே வரும்போது, ஆண்டவன் எப்படி வராமல் இருப்பான்?

கங்கை

பாலாஜி ஆப்செட் பிரிண்டர்ஸ்
23633094 -23631794